இனம்

இனம் இனத்தைச் சேரும்

ISSN : 2455 - 0531

Mail Id: inameditor@gmail.com

editor@inamtamil.com

Savithri.docx

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:17 மே 2019

Vol.5 Issue : 17 May 2019

ஆ.சந்திரன் * மு.ஜெகதீசன் * நா.உமா மகேஸ்வரி

பொ.புனிதா * பா.அருண்ராஜ் * சி.சாவித்ரி * க.பாலாஜி

ச.முத்துச்செல்வம் * த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோயம்புத்தூர்)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)

இதழாக்கமும் வெளியீடும்
முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2019 மலர் : 5 இதழ் : 17
May 2019 Volume V Issue 17

உள்ளே ...

தமிழ்ச் செவ்வியல்

சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ள அகவாழ்வின் மறுபக்கங்கள்
On the other side of livelihood are recorded in Sangam literature
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

ஐங்குறுநூறு (கிழவற்கு உரைத்த பத்து) : மூன்று கூற்று - இருநிலைப் பொருள்புலப்பாடு
Aiṅkuṟunūṟu (kiḻavaṟku uraitta pattu): Mūṉṟu kūṟṟu - irunilaip poruḷpulappāṭu
முனைவர் மு.ஜெகதீசன் / Dr.M.Jegatheesan | 10

தற்கால இலக்கியம்

ராஜ் சிறுகதைகளில் புராணக்கதைகளின் மீட்டுருவாக்கம்
Recreation of Mythology in Raj's Short Stories
நா.உமா மகேஸ்வரி | N.Uma Maheshwari | 14

சிற்றிலக்கிய வகை, வகைமைச் சிந்தனைகள்
Idea's of literary genres
பொ.புனிதா | P.Punitha | 19

வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

தொல்லியல் நோக்கில் பண்டைத் தமிழர்களின் அணிகலன்கள்
Tolliyal nōkkil paṇṭait tamiḻarkaḷiṉ aṇikalaṉkaḷ
பா.அருண்ராஜ் | P.Arunraj | 29

கால்டுவெல்லும் தெலுங்குமொழிச் சாரியைகளும்
Caldwell and the Telugu language
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 45

தாளி(மி)யூரில் பெருங்கற்காலத் தொல்லியல் தரவுகள் கண்டுபிடிப்பு
Tāḷi(ḻi)yūril peruṅkaṟkālat tolliyal taravukaḷ kaṇṭupiṭippu
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 54

...

Chief Editors

Dr.M.Muneesmoorthy
Assistant Professor in Tamil
Bishop Huber College, Trichy - 17.

Dr.T.Sathiyaraj
Assistant Professor in Tamil
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.

ADVISORY TEAM

Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Selam)
Sri S.SriKantharasa (Astralia)

Editorial Team

Dr.A.Mani (Pondichery)
Dr.G.Balaji (Coimbatore)
Dr.R.Gunaseelan (Thiruchenkodu)
Dr.N.Rajendran (Coimbatore)
Dr.R.Raja (Trichy)
Dr.B.Sivamaruthi (Thailand)
Dr.S.Muthuselvam (Madurai)
Dr.S.Vijaya Rajeswari (Thanjavur)

நூலறிமுகமும் மதிப்பீடும்

சாந்தி வனத்து வேர்கள்: நூலறிமுகம்
Cānti vaṉattu vērkaḷ: Nūlaṟimukam

முனைவர் ச.முத்துச்செல்வம் | Dr.S.Muthuselvam | 61

பள்ளு இலக்கிய வாசிப்பின் முக்கியத்துவம் : நா.வானமாமலையின் 'பள்ளுப்பாட்டு ஆராய்ச்சி' நூலை முன்வைத்துச் சில சிந்தனைகள்
Paḷḷu ilakkiya vācippiṉ mukkiyattuvam: Nā.Vāṉamāmalaiyiṉ 'paḷḷuppāṭṭu ārāycci' nūlai muṉvaittuc cila cintaṉaikaḷ

முனைவர் த.சத்தியராஜ் | Dr.T.Sathiyaraj | 67

...

ies

மதிப்பிடப்பெற்றது

சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ள அகவாழ்வின் மறுபக்கங்கள்

On the other side of livelihood are recorded in Sangam literature

முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran[1]

Abstract: Like day and night, happiness and sadness, rich and poor, love and velour are the important contrasting disciplines of ancient Tamilans pleasure and pain in any man's life comes and goes. History didn't record people who only enjoyed pleasure as both pleasure and pain are the important aspects of human life. Between love and velour, ancient Tamilans preferred love as an important aspects of their personal life. Those who read sangam literature knows the importance of courtly life of Tamilans. This paper is an attempt to find the geniuses of love. It also questions whether they loved with caste and material consciousness.

Date of submission: 2019-03-10
Date of acceptance: 2019-03-17
Date of Publication: 2019-05-02
Corresponding author
Name: முனைவர் ஆ.சந்திரன்
Email: chandran@shctpt.edu

Keywords: Sangam Literature, Tamilans, Like day and night, happiness and sadness, rich and poor, love and velour, சங்க இலக்கியங்கள், அகவாழ்வின் மறுபக்கங்கள், யாயும் யாயும் யார் ஆகியரோ.

***

பண்டைத் தமிழரின் வாழ்வியல் கூறுகளான காதல் x வீரம் (அகம் x புறம்) என்பதில் முன் நிற்பது காதலே ஆகும். காதல் என்பது அக வாழ்வையும் வீரம் என்பது புற வாழ்வையும் குறிக்கும். “ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியுங் கூடுகின்ற காலத்துப் பிறந்த”[1] இந்த அக ஒழுக்கம் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாய்ப் போற்றப் படும் சிறப்பைக் கொண்டுள்ளது. இது சங்க இலக்கியத்தை வாசித்த அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இந்த ஒழுக்கநெறி சங்க காலத்தில் ஆண் பெண் இடையே அன்பின் ஐந்திணை என்ற கோட்பாட்டில் கூறப்படுவது போல் மட்டும்தான் உள்ளதா? அல்லது அதற்கு மாறான வெளிப்பாடுகள் பாடல்களில் நுட்பமாகக் கூறப்பட்டுள்ளனவா? அக் காலத்தில் இரு பாலினத்தினரும் ஒரே விதமாக உண்மையுடன்தான் காதலித் தார்களா? காதலித்த பின்னர் சாதி, பொருளாதாரம் முதலான ஏதாவது காரணங் களுக்காகக் காதலைக் கைவிட்டதற்கான குறிப்புகள் ஏதாவது உள்ளனவா? பண்டைக் காலச் சமூகம் காதலை எவ்வாறு எதிர்நோக்கியது? காதலின் மறுபக்கம் என்று கூறத்தக்கன என்று இன்னும் வேறு எவையேனும் உண்டா? என்பன போன்ற கேள்வி களுக்கான விடைதேடும் சிறு முயற்சியை மேற்கொள்கிறது இக் கட்டுரை.

காதல் வாழ்வின் தெரிந்த முகம்

பண்டைக்காலத்தில் காதல் தோற்றம் மிக இயல்பாக நடைபெற்ற ஒன்றாகச் சித்திரிக்கின்றன சங்க இலக்கியங்கள்.

> யாயும் யாயும் யார் ஆகியரோ
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
> யானும் நீயும் எவ்வழி அறிதும்
> செம்புலப் பெயல்நீர் போல
> அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”
> *(குறு.40)*

அதாவது, காதலனின் தாயும் காதலியின் தாயும் ஒருவரை ஒருவர் முன்பின் அறியாதவர்கள். அதுபோல் அவர்களுடைய தந்தையரும் உறவினர்கள் இல்லை. எப்படியோ உறவினர்களாக ஆனார்கள்.

[1] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், வேலூர், 09344495413, chandran@shctpt.edu

அந்த உறவு செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் போல் ஒன்று கலந்தது.

இவ்வாறு எவ்வித நெருக்கடியும், எதிர்பார்ப்பும் இல்லாமல் இயல்பாய்த் தோன்றும் காதலானது,

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே ....” (குறு.3)

என்று தூய்மையானதாகவும், உயர்வானதாகவும், நிகரற்றதுமாகவும் உள்ளது. அத்துடன், காதல் பிரிவை முற்றிலுமாக வெறுத்துப் புறந்தள்ளவும் செய்கிறது.

“பூஇடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீர்உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவுஅரிது ஆகிய தண்டாக் காமமொடு
உடன்உயிர் போகுகதில்ல கடன்அறிந்து
இருவேம் ஆகிய உலகத்து
ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே”
(குறு.57)

அதாவது, சில நிமிட பிரிவே பல யுகமாய் மாறுகின்றது. காதலர்களுக்கு உடல்தான் இரண்டு. ஆனால் உயிர் ஒன்றுதான். இவ்வாறு தோன்றும் காதலானது,

“காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்
பொழுது இடைதெரியின் பொய்யே காமம்”
(குறு.32)

எனக் கால இடைவெளிகளைக் கடந்ததாக உள்ளது. காதலா? கடமையா? என்றால் காதலே பெரிது என்பது அக்காலத்தவரின் மனநிலையாக இருந்துள்ளது.

“முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே” (பட்டி.218-20)

என்று பொருள்தேடச் செல்ல விரும்பிய தலைவன் தன் மனைவியைப் பிரிய மனமின்றித் தன் செலவினைக் கைவிடுவதும் உண்டு. இப்படித் தன்னுடைய தலைவியைப் பிரிய மறக்க இயலாமல் தன்னுடைய வினையைக் (பொருள்தேடச் செல்லுதல்) கைவிட்ட நிலை பற்றிய பதிவுகள் நிறைய உள்ளன. இவை அக்காலத் தலைவன் தலைவி மேல் கொண்ட அன்பின் அடை யாளங்களாக உள்ளன.

இவ்வாறாகத் தோன்றும் காதல் திருமணத்தில் முடிவடைகின்றது. திருமணம் பெற்றோர் சம்மதத்துடன் (சில வேலை மடலேறுதல்) அல்லது சம்மதமின்றி உடன்போக்கில் (சான்றாக: அகம். 55, 65, 105 முதலியன) நடைபெற்றுள்ளது.

அவ்வாறு மணம் முடித்தவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துள்ளனர். அதற்குச் சான்றாய்ப் பின்வரும் குறுந்தொகைப் பாடலைக் கூறலாம். “நன்றாகக் காய்ச்சிய பாலை உறை ஊற்றிப் பெற்ற முற்றிய தயிரை, காந்தள் மலரைப் போன்ற மெல்லிய விரல்களால் பிசைந்து குவளையைப் பேன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை நெருங்கிப்படர இனிய புளிப்புச் சுவை யுடைய குழம்பினைத் தலைவி, தானே துழாவிச் சமைத்தனள். அழுக்குற்ற அவ்விரல்களைத் தான் உடுத்தியிருந்த தூய ஆடையில் துடைத்தனள். அதனால் அழுக்கேறிய அவ்வுடையைத் துவையாமல் உடுத்திக் கொண்டனள். தான் சமைத்த உணவினைக் கணவன் உண்டற்கண், ‘இனிது’ என்று புகழ்ந்து கூறிய அளவில், ஒள்ளிய நெற்றியையுடைய அவள் முகம் பயின்றாரன்றிப் பிறர் அறியாவண்ணம் நுண்ணிதாக மகிழ்ந்தாள்.”[2]

மேலும் திருமணத்திற்குப் பிறகு,

“ மறி இடைப் படுத்த மான்பிணை போல
புதல்வன் நடுவணன் ஆக” (ஐங்.401)

என்று குட்டிமானை இடையிலே கொண்ட ஆண், பெண் மான்களைப் போல பெற்ற மகனை நடுவில் கிடத்தித் தலைவனும் தலைவியும் இனிது உறங்கினர்.

புதல்வற் கவைஇய தாய்புறம் முயங்கி
நசைஇனன் வதிந்த கிடக்கை” (ஐங்.402)

தலைவி மகனைத் தழுவிக்கொண்டு படுத் திருக்க, தலைவனோ தலைவியின் முதுகைத் தழுவிக்கொண்டு படுத்திருந்தாள். “தலைவன் ஒளிமிக்க நெற்றி கொண்ட தன் இளம் மனைவி தன் மகனுக்கு முலையூட்டவும், தான் அவளது முதுகின் புறத்தே தழுவிக் கிடந்தனன்”[3] காதலில் புணர்ந்தபோது கண்ட இன்பத்தைக் காட்டிலும் மகனைக் காணும்

வேட்கை இருவருக்கும் பெரிதாக உள்ளது. “தலைவன் தன் அன்பிற்குரிய காதலியைத் தழுவி, பாணர்கள், இனிமை மிகுமாறு, இசையிலக்கணத்தோடு இணைந்து வெளிப் படுத்திய இசையின் பயனைத் தேர்ந்தும் தன் இல்லாளொடு கூடிக் காதலின்பத்தை நுகர்ந்தும் வாழ்கிறான்”[4].

இவ்வாறு இல்லற வாழ்க்கையிலும் தொடர்ந்து இன்பமாக அமைகிறது. அது குழந்தைப் பேற்றிற்குப் பிறகு கணவன் மனைவிக்கு இடையிலான அன்பை இன்னும் நெருக்கமாக மாற்றியுள்ளது. சுருங்கக்கூறின் பண்டைத் தமிழரின் காதல் வாழ்வானது இயல்பாகத் தோன்றி, வளர்ந்து, திருமணம், குழந்தைப் பேறு என்ற கால இடைவெளியில் இன்னும் அது அதிகரித்துகொண்டே சென்றுள்ளது.

இவையெல்லாம் அக்காலக் காதல் பற்றிய வெளிமுகப் பார்வை. திரும்பத் திரும்பப் படித்து மகிழ இடமளிப்பவை.

காதல் வாழ்வின் மறைமுகம்

இதுவரை நாம் சங்க இலக்கியங்களில் காதலின் வெளிமுகத்தை, அதன் அழகைப் பார்த்தோம். இவற்றிற்கு மாறான உள்முகப் பார்வையும் பாடல்களில் உள்ளன. அழகான முகத்திற்குள் ஒளிந்துகொண்டுள்ள மறைமுக அரசியல் பற்றிய இனிச் சுருக்கமாகப் பார்க்கலாம். அதென்ன அரசியல்? அகத்தில் ஒளிந்துகொண்டுள்ள அரசியல்? என்று கேட்கத் தோன்றும். அகப்பாடல்கள் எல்லாமும் அன்பின் அழகை மட்டுமே பதிவு செய்யவில்லை. மாறாக அன்பின் எதிர் வினையும் பாடல்களின் இடையிடையே சில இடங்களில் பதிவு செய்துள்ளன. நுட்பமான வாசிப்பின்வழி காதல் என்ற அழகினுள் மறைந்து கிடக்கும் உள்முகத்தை / மறை முகத்தை அதன் அரசியலைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

காதலன் காதலியைக் கைவிடுதல்

சங்ககாலம் பொற்காலம். அக்காலத்தில் காதல் செழித்து வளர்ந்துள்ளது என்பது எந்த அளவிற்கு உண்மையோ அந்த அளவிற்கு இல்லையென்றாலும் சமகாலத்தில் சமூகத்தில் நிலவுவது போல காதல் என்னும் பெயரில் ஏமாற்றங்களும் பண்டைக் காலத்தில் நிகழ்ந் துள்ளதைச் சங்கப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. அத்துடன், அவ்வாறு ஏமாற்றும் நபர்களுக்குத் தண்டனை அளிக்கும் வழக்கம் கூட இருந்துள்ளது என்ற குறிப்பை அகநானூற்றுப் பாடல் (256) தெளிவாக விளக்குகிறது. “கள்ளூர் என்னும் ஊர் அழகு தங்கப்பெற்றது; பழமைச் சிறப்புடன் புகழ் மிக்கது; பலவகையான பூக்கள் நிறைந்த வயல்களையும், நிலத்துக்கு அழகு தரும் கரும்புத் தோட்டங்களையும் உடையது; அத்தகைய ஊரின்கண் நெறி தவறிய அறமிலி ஒருவன், இளம்பெண் ஒருத்தியின் அழகிய பெண்மை நலத்தினைக் கவர்ந்து உண்டான்; பின்னர் அவளை அறியேன் என்று அறவோர் முன்னர் அறமற்ற பொய்ச்சூளும் உரைத்தான்; அவர் தம் சேர்க்கையை அறிந்தவனாய்க் கேட்டறிந்த அவையத்தார், அவன் செய்த அடாச் செயலை உண்மையெனத் தெரிந்து, தளிர்கள் கொண்ட பெரிய மரத்தின் கவர்த்த கிளையில் அவனை இறுகக் கட்டி வைத்து, அவன் தலையில் நீற்றினைப் பெய்தனர்.”[5] இப்பாடல் காதல் என்ற பெயரில் பெண்களை ஏமாற்றுவது பண்டைக்காலத்தில் இருந்துள்ளது என்பதை வெளிப்படையாகவே கூறுகின்றது.

இது இவ்வாறிருக்க இன்னும் சில பாடல் களில் தலைவி அல்லது தோழியின் கூற்றுக்கள் காதலின் பெயரால் ஏமாற்றப்பட்ட பெண்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றன. சான்றாக நற்றிணை 45 ஆம் பாடலைக் கூறலாம்.

நின்னாற் காதலிக்கப்படும் இவள்தான், “கடற்கரைச் சோலையில் உள்ள அழகிய சிறுகுடியின்கண்ணே இருக்கும், நீல நிறத்தையுடைய பெரிய கடலும் கலங்குமாறு அதன்மேற் சென்று வலைவீசி மீனைப் பிடிக்கின்ற பரதவர் மகள் ஆவாள். நீயோ, நெடிய கொடிகள் காற்றால் அசைந்து, நுடங்கும் கடைத் தெருக்களைக் கொண்ட பழைய ஊரின்கண் உள்ள கடுமையான செலவு மிக்க தேரை உடைய செல்வம் கொண்டவனின் அன்புக்குரிய மகன். எம் குலத்துக்கு நீ பொருந்துவாய் அல்லை. மேலும் நிணத்தை உடைய சுறாமீனை அறுத்துக் காய வைத்தல் வேண்டி, அவை வெயிலிற் காயும்போது கூட்டமாய்த் திரளும்

பறவைகளை நாங்கள் விரட்டும் தொழிலேம். எங்களுக்கு உயர்வு என்ன வேண்டியுள்ளது? ஒன்றும் வேண்டா. எம் உடம்பெல்லாம் புலால் நாற்றம் வீசுகின்றது; எனவே எம் அருகில் நீவீர் வரவேண்டா. கடல் நீரை விளைவயலாகக் கொள்ளுகின்ற எமது சிறிய நல்ல வாழ்க்கையானது நும்மைப் போன்ற உயர்வுடையதன்று; எங்கள் பரதவர் குடியில் உம்மைப் போன்ற செல்வமக்களும் உள்ளனர்.''[6]

இப்பாடலில் வரும்

''கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே
……………………………………………..
பெருநீர் விளையுள் எம்சிறு நல்வாழ்க்கை
நும்மோடு புரைவதோ அன்று
எம்மனோரில் செம்மலும் உடைத்தே''
(அகம். 45:5-11)

ஆகிய அடிகளில் ஒலிக்கும் ''தலைவன் தன்னை உயர்ந்தவனாய் நினைந்தமையைச் சுட்டி இகழும் குறிப்பு''[7] மற்றும் ''எம் உடம்பெல்லாம் புலால் நாற்றம் வீசுகின்றது; எனவே எம் அருகில் நீவீர் வர வேண்டா. கடல் நீரை விளைவயலாகக் கொள்ளுகின்ற எமது சிறிய நல்ல வாழ்க்கையானது நும்மைப் போன்ற உயர்வுடையதன்று; எங்கள் பரதவர் குடியில் உம்மைப் போன்ற செல்வமக்களும் உள்ளனர்''[8] என்பனவும் காதலித்த ஆண் சாதியின் ஏற்றத்தாழ்வு காரணமாகக் காதலித்த பெண்ணைக் கைவிட்டுள்ளான் என்பதை உணர்த்துகின்றன. பாடலின் இடையில் ஒலிக்கும் கதைசொல்லியின் குரலின் மூலம் இதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன், அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக்கொண்டு அதிலிருந்து மீண்டுவரும் தெளிவுடையவளாய் அப்பாடலில் சுட்டப்படும் பெண் இருப்பதையும் நம்மால் கவனிக்க முடிகின்றது.

இது இவ்வாறு இருக்க சில பாடல்களில் காதலனால் ஏமாற்றப்பட்ட குறிப்புகள் மட்டுமே கிடைக்கின்றன. அப்படிப்பட்ட குறிப்பைக் கொண்ட பாடல்களில் ஒன்றாக நற்றிணை 36ஆம் பாடலைச் சுட்டலாம்.

''குறுமையான முன்னங்கால்களையுடைய, கொல்லவல்ல பெரிய ஆண்புலி பொலிவு மிக்க நெற்றியையுடைய கரிய பெண்யானை புலம்புமாறு நீரற்ற அகன்ற காட்டின்கண் பெரிய களிற்றைக் கொல்லும்; அத்தகு காட்டிடத்தாகிய மலை பொருந்திய நாட்டினனாகிய தலைவன் 'உன்னைப் பிரிய மாட்டேன்' என்று கூறிய சொல்லை உண்மை எனக் கொண்டு நாம் நம் நலத்தை இழந்துவிட்டோம். பழிதூற்றும் சொற்களையுடைய ஊர்ப்பெண்கள் மறைவாகப் பேசும் மொழியோடு சேர இவ்வூரும் மேன்மையற்ற வெவ்விய மொழிகளைக் கூறுவதற்கு வேண்டிய உரைகளைப் பொருந்தியது. ஆக இவ்வூர் அளவில் அடங்காத பழிமொழியைப் பெற்றது. எனவே இதுவும் என்னைப் போல் இரவில் துயிலாது ஆயிற்று. இவ்வூர் என்னைப்போல எதனை இழந்தது இங்ஙனம் தூங்காது ஆயிற்று?''[9]

இப்பாடலில் ஒரு பெண் தான் ஏமாற்றப்பட்டதைப் பற்றிக் கூறும் கதைசொல்லி அதற்கான காரணங்கள் பற்றிய குறிப்புகள் எதையும் தரவில்லை. அதே நேரம்,

''கல்லக வெற்பன் சொல்லின் தேறி
யாம்எம் நலன் இழந்தனமே யாமத்து
அலர்வாய்ப் பெண்டிர் அம்பலொடு ஒன்றி
புரையில் தீமொழி பயிற்றிய உரைஎடுத்து
ஆனாக் கௌவைத்து ஆக
தான்என் இழந்தது இவ்அழுங்கல் ஊரே''
(நற்.36)

என்ற பாடல் அடிகளில் வெளிப்படும் கதைசொல்லியின் குரல், ஆணின் கனிவான சொல்லைக் கேட்டுப் பெண் தன்னை இழந்ததாகக் கூறும், ஆனால் எதை இழந்ததால் இந்த ஊரில் உள்ளவர்கள் அப்பெண்ணைப் பழித்துக் கூறுகின்றனர்? என்ற வினாவையும் எழுப்பிச் செல்லுகின்றது. மேலும்,

''கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
……………………………………………
………….. மாமைக் கவினே'' (குறு.27)

மற்றும்

''முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்
……………………………………….
உழவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே''
(குறு.28)

என்ற பாடல்களில் சுட்டப்படும் பெண்களின் பிரிவுத்துயர்களில் இருந்து மாறானது நற்றிணைப் படல் 36இல் கூறப்படும்

பெண்ணின் பிரிவுத்துயர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அத்துடன், இப்பாடலில் எழுப்பப்படும் வினா மிக முக்கியமான ஒன்றாகத் தோன்றுகின்றது. பொதுவாக அகப்பாடலில் தலைவனைப் பிரிந்த தலைவியின் மனவருத்தம் (திருமணம் நோக்கிய எதிர்பார்ப்பில் இருந்தாலும்) தன்னுடைய மனவேதனை ஊராரின் அலர் என்ற நிலைகளில் அமையும். ஆனால் இப்பாடலில்,

> அலர்வாய்ப் பெண்டிர் அம்பலொடு ஒன்றி
> புரையில் தீமொழி பயிற்றிய உரை (நற்.6,7)

அதாவது, பாடலடிகளில் அலர்வாய்ப் பெண்டிர் உரைகளுடன் தீமொழியும் கலந்து வருகின்றது என்ற கதைசொல்லியின் கூற்று கவனிக்க வேண்டியது. அத்துடன், ஆண் சிங்கமானது பெண்யானை வருத்தம் அடையுமாறு ஆண் யானையைக் கொல்லும் நாட்டவன்தான் தலைவன் என்பதையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் இணைத்துப் பார்க்க ஒரு ஆண்மகனால் ஏமாற்றப்பட்ட பெண்ணின் அவலத்தையும் அவளது துன்பத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய முயலும் சமூகத்தின் இழிநிலையையும் இப்பாடலின் குறிப்புகள் நன்கு புலப்படுத்துகின்றன என்பதைத் தெளிவாக அறியமுடிகின்றது. இவை போல பல பாடல்களில் ஆண்களால் ஏமாற்றப்பட்ட பெண்களின் துயரங்கள் பதிவுசெய்யப் பட்டுள்ளன. இவை பண்டைக்கால மக்களின் வாழ்வின் மறைமுகங்களின் எஞ்சி நிற்கக் கூடிய பதிவுகளாகும். இவற்றைப் பற்றி விரிவாக ஆராய வேண்டும்.

காதலில் பெண்களுக்கான கட்டுப்பாடு

பண்டைக் காலத்தில் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் ஏராளமாக இருந்துள்ளன. அவற்றில் காதலில் சொல்லப்படும் கட்டுப்பாடு மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அதில் முக்கியமானது ஆண்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற சமூகக் கட்டமைப்பாகும். இந்தக் கட்டுப்பாடு இன்றுவரை மாறாமல் இருப்பது வேதனையான, வேடிக்கையான ஒன்று. இதற்கான காரண காரியங்கள் குறித்துப் பொதுத்தளத்தில் விரிவான விவாதங்கள் அவசியம். இது ஒருபுறமிருக்க பண்டைக் காலத்தில் இந்த நிலைமை எவ்வாறிருந்தது? சமூகம் பெண்களுக்கான கட்டமைப்பை எவ்வாறு வகுத்திருந்தது என்பதற்குச் சான்று பகர்வதாய் உள்ளது நற்றிணை 32ஆம் பாடல்.

“தோழீ; வாழ்வாயாக! ‘மாயோனைப் போன்ற பெரிய மலைப்பக்கம். அங்கு அவனுக்கு முன்பிறந்த கண்ணனாய் அவதரித்த பொழுது அவனுக்கு முன்பிறந்த வெள்ளை நிறத்தவனான பலதேவனைப் போன்று வெண்மையாய் விளங்கும் அருவிகள், அத்தகைய மலைக்குரிய தலைவன் நாள்தோறும் நம் புனத்தின் பக்கத்தே வந்து நம்மை விரும்பி வருந்தினான்’ என்று கூறும் எனது உண்மையான உரையை நீ தெளிந்துகொண்டாய் இல்லை. என்னைக் கேட்பதை விடுத்து, நீயும் அவனை நோக்குவதுடன் உன்னிடத்து அன்பு கொண்ட தோழியரோடும் ஆராய்ந்து அறியத்தக்கது இதுவென அறிந்து பின்பு அளவளாவுக. அவன் கூற்று மறுப்பதற்கில்லை. அறிவுமிக்க சான்றோர் தம்மோடு நட்புக்கொள்ள விரும்பியவர்களின் குணங்களை முதலில் ஆராய்ந்து பார்த்து நட்புக் கொள்வர். நட்புக் கொண்ட பிறகு அவர்தம் குணங்களை ஆராய மாட்டார். நீ அவ்வாறு மலைக்கிழவனிடத்து நட்புக் கொள்ள வில்லை. முதலில் நட்புச் செய்து இப்போது வெறுத்தல் தகாது என்பதை அறிக.”[10]

நல்லவன் x கெட்டவன் என்பதைப் பார்த்துக் காதலிக்க வேண்டும். ஒருவேளை காதலித்தவன் கெட்டவனாக இருப்பதைப் பிறகு அறிந்துகொண்டாலும் காதலித்த அந்த ஆணுடன் தான் அவள் திருமணம் நடைபெறவேண்டும் என்ற அன்றைய சமூகத்தின் நிலைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளது மேற்கண்ட பாடல்.

இவ்வாறு சங்ககாலத்தில்,

- இக்காலத்தில் நிலவுவது போல ஆண்கள் காதலித்துவிட்டுப் பின்னர் கைவிடுவது.

- சாதி அல்லது பொருளாதாரம் அல்லது வேறு பல காரணங்களால் பெண்களின் காதல் தோற்றுப்போவது.
- காதலித்தவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவனுடன் சேர்ந்து வாழச் சமூகம் வற்புறுத்துவது

என அகவாழ்வின் மறுபக்கங்கள் பல இருந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகின்றது. இவ்வாறான கோணத்தில் சங்கப்பாடல்கள் முழுமையையும் விரிவாக ஆராய்ந்தால் இன்னும் பல புதிய உண்மைகளை நாம் அறியமுடியும்.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல், ப.12.
2. குறுந்தொகை மூலமும் உரையும், ப.167.
3. ஐங்குறு மூலமும் உரையும், ப.886.
4. மேலது, ப.890
5. அகநானூறு மூலமும் உரையும், பக். 768,69.
6. மேலது, ப.79
7. மேலது ப.80
8. மேலது ப.79.
9. நற்றிணை மூலமும் உரையும், ப.63.
10. மேலது ப.56.

துணைநூற்பட்டியல்

சந்திரன் ஆ. (2016). மாதொரு பாகன் - கதைசொல்லியின் குரல். சிற்றேடு - தமிழ் காலாண்டிதழ், 2 (5), 45-48.

சிவலிங்கனார் (1991). தொல்காப்பியம் - பொருளதிகாரம் (உரைவளம்) அகத்திணையியல். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

செயபால் இரா. (2004). அகநானூறு மூலமும் உரையும். சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

தட்சிணாமூர்த்தி அ. (2004). ஐங்குறுநூறு மூலமும் உரையும். சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

நாகராசன் வி. (2004). குறுந்தொகை மூலமும் உரையும். சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

பாலசுப்பிரமணியன் கு.வெ. (2004). நற்றிணை மூலமும் உரையும். சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.

ஆய்வுக் கட்டுரை எழுதுவோர் கவனத்திற்கு

ஆக்கம் தங்களுடையதாக மட்டுமே அமைதல் வேண்டும்.

தங்களின் கட்டுரையின் முதல் பக்கத்தில் முழு முகவரியும் இடம்பெறல் வேண்டும்.

கருத்துத் திருட்டு எனப் பின்னர் அறிந்தால், வலைதளப் பக்கத்திலிருந்து உடனே நீக்கப்பெறும்.

கட்டுரைகள் ஒருங்குகுறி எழுத்துருவில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்பப் பெறுதல் வேண்டும்.

தங்களின் ஆய்வுக் கருத்துக்கள் தரமுடையதாகவும், புதிய நோக்குடனும் அமையப் பெறுதல் வேண்டும்.

பழம்பாடலுக்கு விளக்கம் அளித்தல் போன்று இருத்தல் கூடாது.

சொல்லாய்வி (Word) கோப்பும், சொல்லாய்விக் (PDF) கோப்பும் அனுப்பப் பெறுதல் வேண்டும்.

மேற்கோள் தனித்துக் காட்டப்பெறுதல் வேண்டும்.

தங்களின் கருத்துப் போன்று காட்டுதல் கூடாது.

inameditor@gmail.com எனும் மின்னஞ்சலுக்குத் தங்களின் கட்டுரைகள் அனுப்பப் பெறுதல் வேண்டும்.

நாட்டுடைமை ஆக்கப்பெற்ற மூத்த தமிழறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூலின் தேர்ந்தெடுத்த சில பகுதிகள், இதழின் ஒவ்வொரு பதிப்பிலும் வெளியிடப் பெறும்.

மதிப்பிடப்பெற்றது

ஐங்குறுநூறு (கிழவற்கு உரைத்த பத்து) : மூன்று கூற்று - இருநிலைப் பொருள்புலப்பாடு

Aiṅkuṟunūṟu (kiḻavaṟku uraitta pattu): Mūṉṟu kūṟṟu - irunilaip poruḷpulappāṭu

முனைவர் **மு.ஜெகதீசன்** / Dr.**M.Jegatheesan**[2]

Abstract: Aingurunuru in Division of weaving is the Kiḻavaṟku uraitta pattu; is eight Songs in the titles Moll, Hero and Friend the three Speeches is one Concept. Punaladutal the Hero is Udal Moll, She Solace explained how to the Hero definitions by Friend. This Concealing Speech. Telling the Friend is Heroine of the Crazy in nature is Solace. This Article is about to describe the fiction of these deftly songs.

Date of submission: 2019-03-20
Date of acceptance: 2019-03-25
Date of Publication: 2019-05-02

Corresponding author's
Name: முனைவர் **மு.ஜெகதீசன்**
Email: jegantamil@gmail.com

Keywords: Sangam Literature; Aingurunuru; Kiḻavaṟku uraitta pattu; Punaladutal; nature; சங்க அகப்பாடல்; களவு, கற்பு; தனித்தன்மைகள்; கற்பியல்; தொல்காப்பியம்; குறிஞ்சித்திணை; திணை; கிழவற்கு உரைத்த பத்து

***

சங்க அகப்பாடல்களில் ஐந்திணைகளிலும் களவு கற்புத் தன்மைகள் பொதுவாக அமைந்தபோதிலும், திணைவாரியாக சிறப்பம்சம் பெற்றதும் உண்டு. களவு, கற்பு என்பது அனைத்துத் திணைகளிலும் பொதுத் தன்மையாக இருந்தபோதிலும் குறிஞ்சித் திணைப் பாடல்களில் களவுத் தன்மைகள் மிகுதியாகப் பாடப்பட்டுள்ளன. பாலைத் திணைப் பாடல்களில் உடன் போக்குத் தொடங்கிய களவு வாழ்வும், பொருள்வயிற் பிரிதலான கற்பு வாழ்வும் மிகுதியாகப் பாடப்பட்டுள்ளன. முல்லைத் திணைப் பாடல்களில் தலைவன் தலைவிக்கு உண்டான கற்பு வாழ்வில் வரவிற்காகக் காத்திருத்தல் மையமாக அமைந்துள்ளன. மருதத்திணைப் பாடல் களில் பரத்தை விரும்பு தலில் தோன்றிய ஊடல் உணர்வுகளே மிகுதி. நெய்தல்திணைப் பாடல் களில் களவு, கற்பு ஆகிய இருதிறமும் இரங்கல் பின்புலத்தில் பாடப்பட்டுள்ளன. என்ற போதிலும் அதன் தனித்தன்மைகள் அலாதியானவை. இவ்விருதிறத் தன்மையை ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையில் ஒரு பத்தில் காணமுடிகிறது. அது கிழவற்கு உரைத்த பத்து. இப்பத்தில் இறுதி இரு பாடல்கள் கிடைக்கப் பெறவில்லை (129, 130). எஞ்சிய எட்டுப் பாடல்கள் இருநிலை வாசிப்புத் தன்மை பெற்றுள்ளன. இத்தகைய வாசிப்புக்கு வழிகோலுவது தொல்காப்பிய மாகும். தொல்காப்பியர் கற்பியலில் தோழியின் செயல்களைப் பற்றிக் குறிப்பிடு கையில்,

"அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்"
(தொல். பொருள். கற்.9)

என்றொரு கருத்தினைக் குறிப்பிடுகிறார். அடங்காத ஒழுக்கத்தை உடைய தலைவனின் செயல்களால் தலைவிக்குத் துன்பம் நேர்கையில், அவ்வொழுக்கத்தின் புரிதல் தவறானது என்று அடங்கக் காட்டி அதற்கு ஏதுவான பொருளைச் சுட்டுதல் தோழியின் பண்பு என்பதே இந்நூற்பா சுட்டுவது. ஐங்குறுநூற்றில் நெய்தல்

[2] உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார், பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12. jegantamil@gmail.com

திணையில் ‘‘கிழவற்கு உரைத்த பத்து‘‘ என்ற தலைப்பிலமைந்த பாடல்களில் வரும் தலைவனின் செயல் அடங்காத ஒழுக்கத்தை உடையது. தலைவி அது கண்டு வருந்துகிறாள். புலக்கிறாள். இப்பாடல்களில் வரும் பரத்தையே இங்குத் தலைவியாக அமைகிறாள். காரணம் பரத்தையை விரும்பிச் சென்ற தலைவன் அவளோடு புனலாடச் செல்கிறான். அப்போது அவளை விடுத்து வேறு பெண்ணுடன் புனலாடுகிறான். அதுகண்டு அவள் தலைவன் மீது ஊடல் கொள்கிறாள். அவளைத் தேற்றும் விதமாகப் பொருளுரைக்கும் தோழியின் கூற்று பொருள்நுட்பம் வாய்ந்ததாகவும் ஊடலைத் தவிர்க்க முனைவதாகவும் அமைகிறது என்பதை நிறுவுவதாக இக்கட்டுரை அமைகிறது.

புனலாடுதல்

புனலாடுதல் என்பது சங்க மரபு. இது விளையாட்டும்கூட. மகளிர் மட்டும் ஆடும் விளையாட்டாகவும் உள்ளது. ஆண் பெண் இணைந்து ஆடும் விளையாட்டாகவும் உள்ளது. இறைவனுக்காகவும் புனலாடுதல் உண்டு. இவ்வாறு சங்கப்பாடல்களில் புனலாடுதல் பன்முகத்தன்மை பெற்றதாக அமைகிறது. அச்சமூக நிகழ்வும்கூட. களவுக்காலத்தில் தலைவி தன் தோழியுடன் புனலாடுகிறாள். அத்தகைய சூழல்களில் தலைவனைச் சந்திக்கிறாள். கற்பில் தலைவனும் தலைவியும் இணைந்து புனலாடு கின்றனர். இங்கே கற்பின் திறம் நிலை நிறுத்தப்படுகிறது. தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையுடன் புனலாடுகிறான். இதில் பரத்தை தலைவனைத் தன்பால் இறுத்தி வைத்துக் கொண்டுள்ளேன் என்பதை உணர்த்து வதாகவும் அமைகிறது. ஆயினும் தலைவன் பிற பெண்டிருடன் புனலாடுதலைத் தலைவியும் ஏற்றுக்கொள்ளவில்லை. பரத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக தலைவனுடன் பிணக்கம் கொள்கின்றாள். பிணக்கம் என்பது ஊடலில் ஒருவகை. இத்தகைய செயல் கிழவற்கு உரைத்த பத்துப் பாடல்களில் பாடப்பட்டுள்ளன.

பாடல்களின் சூழல்

பரத்தை விரும்பிச் சென்ற தலைவன் அவளுடன் புனலாடுகிறான். பின்பு வேறொரு பெண்ணுடன் புனலாடுகிறான். இச்செயல் பரத்தைக்கு ஊடலைத் தோற்றுவிக்கிறது. அவனைக் கடிகிறாள். ஊடல் கொள்கிறாள். அவனிடம் ஊடலைப் புலப்படுத்துகிறாள். இதன் பின்புலத்தில் எட்டுப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ஆயினும் அப்பாடல் களுக்காக அமைந்த கொளு, ‘‘பரத்தை தலைமகற்குச் சொல்லியது. பெதும்பைப் பருவத்தாள் ஒரு பரத்தையோடு கூடி மறைந்து ஒழுகாநின்றான் என்பது அறிந்து தலைவி புலந்துழி, இத்தவறு என் மாட்டு இல்லை. நீ இப்புலவியை நீக்க வேண்டும் என்று தோழிக்குத் தலைமகன் கூற, புலவியை நீக்கக் கருதிய தோழி, அவள் இளமை கூறி, நகையாடிச் சொல்லியதூஉம் ஆம்’’ (கல்யாணசுந்தரையர், 1944 (மூ.ப.), ப. 57). என்றிவ்வாறு கூறுகிறது. இக்கொளுவில் மூவர் கூற்றுகள் உண்டு எனத் தெரிகிறது. பரத்தை தலைவனுக்குச் சொல்வதாக அமைந்த பரத்தை கூற்று என்பது ஒன்று. பரத்தை சொல்வது தவறு என்று தோழியிடம் கூறும் தலைவன் கூற்று மற்றொன்று. அதைக் கேட்ட தோழி பரத்தையிடம் கூறிய தோழி கூற்று மூன்று.

இத்தகைய கொளு அமைக்கப்பட்ட பாடல்கள் மூன்று அடிகளில்தான் அமைந் துள்ளன. இவற்றுள் முதல் அடி வரும் எட்டுப் பாடல்களின் தொடக்கமாக அமைந்த பொதுஅடியாகும். ‘‘கண்டிகும் அல்லமோ கொண்க நின்கேளே’’ (ஐங்.121-128) என்பது அவ்வடி. இவ்வடி மூவர் கூற்றிற்கும் பொதுவான அடியாகும். எனினும் ‘‘கொண்க’’ என்பது நெய்தல் தலைவனைக் குறிப்பதாகக் கொள்ள முடிகிறது. ‘‘கேள்’’ என்பதற்குக் காதல் கேண்மையை உடையவள் என்பது பொருள். மூன்று கூற்றுகளுக்கும் பொதுவாக கேள் என்ற சொல் அமைந்தபோதிலும், ‘கொண்க’ என்பது தலைவனைக் குறித்த தாகையால் தலைவனிடம் உணர்த்தும் கூற்றாகிறது. கேள் என்பது பரத்தையைக் குறித்ததாகிறது. இவ்விடத்தில் பரத்தைதான் தலைவி என்றாகிறாள். பரத்தை தலை வனுக்குக் கூற்று நிகழ்த்துகிறாள். தலைவன்

தோழியிடம் கூற்றுரைக்கிறான். தோழியும் தலைவன் சார்பாகப் பரத்தைக்குக் கூற்று நிகழ்த்துகிறாள்.

பாடல்களின் கருத்துநிலை

"கண்டிகும் அல்லமோ" என்பது தலைவனைக் கண்டாயா என்று தலைவன் செயலை உணர்த்தும் கூற்றாகத் தெரிகிறது. இவ்வடி உரிப்பொருள் உணர்த்திற்று. இதனைத் தொடர்ந்து எட்டுப் பாடல்களிலும் அடுத்த அடிகள் முதற்பொருளையும், கருப்பொருளையும் உரைக்கின்றன. இப் பொருள்கள் உரிப்பொருளின் பொருண் மையை இருநிலையில் உணர்த்துகின்றன. ஆசிரிய யாப்பில் இயைபுத் தொடையில் அமைந்த அப்பாடலடிகள் வருமாறு:

"முண்டகக் கோதை நனைய
தெண்திரைப் பௌவம் பாய்ந்துநின் றோளே"
(ஐங்.121)

"ஒள்இழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே"
(ஐங்.122)

"ஒண்நுதல் ஆயம் ஆர்ப்ப,
தண்ணென் பெருங்கடல் திரைபாய் வோளே"
(ஐங்.123)

"வண்டற் பாவை வௌவலின்
நுண்பொடி அளைஇக் கடல்தூர்ப் போளே"
(ஐங்.124)

"தெண்திரை பாவை வௌவ
உண்கண் சிவப்ப அழுதுநின் றோளே"
(ஐங்.125)

"உண்கண் வண்டினம் மொய்ப்ப
தெண்கடற் பெருந்திரை மூழ்கு வோளே"
(ஐங்.126)

"தும்பை மாலை இளமுலை
நுண்புண் ஆகம் விலங்கு வோளே"
(ஐங்.127)

"உறாஅ வறுமுலை மடாஅ
உண்ணாப் பாவையை ஊட்டு வோளே"
(ஐங்.128)

எனவரும் பாடலடிகளில், நின்றோளே (ஐங்.121, 125), பாய்வோளே (ஐங்.123), மூழ்குவோளே (ஐங்.126) ஆகிய சொற்கள் தலைவன் பெண்ணுடன் புனலாடுதலை உணர்த்துவன. வினவுவோளே (ஐங்.122), தூர்ப்போளே (ஐங்.124), விலங்குவோளே (ஐங்.127), ஊட்டுவோளே (ஐங்.128) என்பனவான சொற்கள் தலைவன் புனலாட்டத்தில் பெண்ணுடன் ஆடும் விளையாட்டைக் குறிப்பனவாக அமை கின்றன.

தலைவன், கடல் அலையில் பாய்ந்து புனல் விளையாடியதால் முண்டகக் கோதைமலர் நனைந்தது (ஐங்.121), உயர்ந்த மணல் மேட்டில் விழுந்து வெள்ளாங்குருகை வினவியது (ஐங்.122), தன் தோழியருடன் பேரிரைச்சலுடன் குளிர்ந்த பெருங்கடலில் பாய்வது (ஐங்.123), வண்டல் பாவை கவர்ந்து கடலில் வீசியது (ஐங்.124), அலையில் வரும் பாவையைக் கவர்ந்து அதனைக் கண்டு அழுது நின்றது (ஐங்.125), சுற்றிலும் தோழியராகிய வண்டுகள் சூழ கடல் அலையில் மூழ்குவது (ஐங்.126), தும்பை மாலையைத் தன் மார்பில் சாற்றியது (ஐங்.127), பாவைக்கு உணவு ஊட்டியது (ஐங்.128) போன்ற காட்சிகளைக் கண்ட பரத்தை அவனிடம் புலவி கொள்கிறாள். தலைவனைக் கடிகிறாள். தன் தோழியிடம் காட்டுகிறாள்.

தோழி பரத்தையைத் தேற்றுதல்

தலைவியின் கோபத்தை உணர்ந்த தோழி தலைவியைத் தேற்றுகிறாள். தலைவன் பிற பெண்ணுடன் விளையாடவில்லை. மாறாக அவன் ஒரு சிறுமியுடன் விளையாடுகிறான் என்று கூறித் தேற்றுகிறாள். முண்டகமலர் என்பது கொடியில் மலர்வது. அதைப் பெண்கள் அணியமாட்டார்கள். அதனைச் சூடிக்கொண்டு கடலில் பாய்ந்து ஆடுவது சிறுமியின் பண்பு (ஐங்.121). உயர்ந்த மணலில் நின்று கொண்டிருக்கும் வெள்ளாங்குருகிடம் பேசுகிறாள் (ஐங்.122). பேதைப் பருவத்தில் உள்ள பெண் தன் ஆயத்தாரின் நகைக்காக அலையில் பாய்கிறாள் (ஐங்.123). விளையாடும் பொம்மையைக் கவர்ந்த கடலலையை வசைபாடும் நோக்கில் மணல்வாரித் தூர்க்கிறாள் (ஐங்.124). கண்கள் சிவக்கும்படி அழுகிறாள் (ஐங்.125). வண்டுகள் மொய்த்ததால் அஞ்சி கடலில் சிற்றலை, பேரலை என்று பாராமல் மூழ்குகிறாள் (ஐங்.126). போர்க்களத்தில் அணியும் தும்பை மாலையைத் தலையில் அணியாமல் தன்

மார்பில் அணிந்துள்ளாள் (ஐங்.127). உணவு உண்ணும் தன்மையில்லாத பொம்மைக்கு உணவு ஊட்டுகிறாள் (ஐங்.128) என்பனவான காரணங்கள் பேதையின் அறியாமையைக் குறிப்பதாகின்றன. இக்கருத்துநிலை தலைவன் பிற பெண்ணுடன் புனலாடவில்லை, சிறுமியுடன் தான் விளையாடுகிறான் எனக் கூறித் தோழி தலைவியைத் தேற்றுவதாக அமைகிறது. தோழியின் இக்கூற்று தலைவன் கூறிய கூற்றாகும்.

இக்கூற்றுப் பாடல்கள் இரண்டாம் நிலையில் பொருளுணர்த்துவதாக அமைகின்றன. பாடலின் கொளுவே இத்தகைய புரிதலுக்கு இடமளிக்கிறது. மாறாக, சில சொல்லாடல்கள் இக்கொளு அமைப்பதற்கு வழிவகுக்கிறது என்றே உணரமுடிகிறது. கோதை மலரை அணிதல், வெள்ளாங்குருகை வினவுதல், கடலைத் தூர்த்தல், பாவைக்காக அழுதல், பெருந்திரையில் மூழ்குதல், தும்பை மாலையை மார்பில் அணிதல், பாவைக்கு உணவு ஊட்டுதல் ஆகிய கருத்துநிலைகள் மறுவாசிப்பிற்கு உள்ளாகின்றன; பாடல்களின் பொருள் புரிதலை வேறுவிதமாக அர்த்தப்படுத்துகின்றன. இவ்எட்டுப் பாடல்களும் ஒரே தன்மையில் இரு மாறுபட்ட கருத்துநிலையைப் புலப்படுத்துவதாக அடையாளம் காணமுடிகின்றன. புலனாடுதலில் உண்டான புலவியை அதே பாடல்களில் மறுவாசிப்புக் கருத்து அப்புலவி நீக்கத்திற்குத் துணைபுரிகிறது. இப்பொருள் புரிதல் பாடலைத் தனித்திறம் மிக்கதாகக் காட்டுகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் வரையறைக்குள் தோழி அமையும் திறம் விளங்குகிறது. ஒரே பாடலடி தலைவியின் நிலையிலான புரிதல் அடங்கா ஒழுக்கமாகவும், தோழி நிலையிலான புரிதல் அடங்க உரைக்கும் பொருளாகவும் அமைகின்றதைக் காணமுடிகிறது.

தலைப்புப் பொருத்தம்

இத்தகைய புரிதலின் தன்மையில், ‘‘கிழவற்கு உரைத்த பத்து’’ என்ற தலைப்பு பொருத்தமுடையதா என்பதில் ஐயமுண்டு. இப்பாடல்கள் மூவர் கூற்றில் அமைந்த போதிலும் அக்கூற்றுக்களில் ஒன்றான தலைவனையே முன்னிறுத்தி, கிழவற்கு உரைத்த பத்து என்று அமைத்திருப்பது எண்ணத்தக்கது. தலைப்பின்படி மூவர் கூற்றில் பரத்தை கூற்றே முதன்மை பெறுகிறது. பரத்தை கூற்றே ஊடலின் தொடக்கநிலை. பிற கூற்றுகள் அதனையடுத்த புரிதலே! அத்தகைய புரிதலுக்குக் கொளு தான் இடமளிக்கிறது. ஆக, முதன்மைக் கூற்றான தலைவி கூற்றே பாடலின் மையப்பொருளாகவும் ஏனைய கூற்றுக்கள் அதனைத் தொடர்ந்த இரண்டாம் தன்மையிலான புரிதல் என்பதும் எண்ணத் தோன்றுகிறது. எனினும் பல்வேறு நிலையில் பொருள் புரிதலுக்கு இடமளிக்கும் கவிதைகளே தனித்துவம் மிக்கவை என்ற இலக்கிய நயத்தினை இப்பாடல்களில் அடையாளம் காணமுடிகிறது. அதற்குத் தொல்காப்பிய விதிகள் இடமளிக்கின்றன.

முடிவுரை

சங்கப்பாடல்கள் குறிப்பிட்ட வாழ்வியல் கட்டமைப்பில் அமைந்தபோதிலும் அவை பல்வேறு விதமான வாசிப்பிற்கும் பொருள்புரிதலுக்கும் இடமளித்துக் கொண்டே வருகின்றன. தொல்காப்பிய விதிகளும் அத்தகைய புரிதலுக்கு மீண்டும் மீண்டும் இடமளித்துக் கொண்டே இருக்கின்றன. பிற்காலத்தில் அமைக்கப்பட்ட கொளுவானது பாடல்களின் சூழலை விளக்குவதோடு பாடல்களின் பொருளை அறிவதற்குத் திறவுகோலாக அமைந்துள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது.

துணைநூற் பட்டியல்

இளம்பூரணர் (உ. ஆ.). (1969). தொல்காப்பியம் பொருளதிகாரம். சென்னை: கழக வெளியீடு.

கல்யாணசுந்தரையர், எ. 1944 (மு.ப.). ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும். சென்னை: கபீர் அச்சுக்கூடம்.

மதிப்பிடப்பெற்றது

ராஜ் சிறுகதைகளில் புராணக்கதைகளின் மீட்டுருவாக்கம்

Recreation of Mythology in Raj's Short Stories

நா.உமா மகேஸ்வரி | N.Uma Maheshwari[3]

Abstract: In literature, short stories are one of the vibrant, novel forms. In Tamil, it starts its journey in 20th century. Writer Raj (A.V.Rajagopal) basically a charted accountant, released 14 volumes of short stories from December 1992 to January 2002. His short story volumes were awarded by Government of Utherpradesh, Government of Tamil Nadu & Bharat State Bank. Myth is the oldest form of storytelling. This article is a review of recreation of mythology in Raj's short stories. The writers adopt myth stories, add his flavor and produced a new one. The stories he took for this task was very popular in public. Writers' peculiar view of myth stories were discussed in this article.

Date of submission: 2019-04-09
Date of acceptance: 2019-04-21
Date of Publication: 2019-05-02
Corresponding author's
Name: நா.உமாமகேஸ்வரி
Email: maheshmurallii@gmail.com

Keywords: Short Stories, Writer Raj (A.V.Rajagopal), Awards, Myth, Mythology, சிறுகதைகள், எழுத்தாளர் ராஜ் (ஏ.வி.ராஜகோபால்), விருதுகள், புராணக்கதை, புராண இலக்கியம்.

தமிழ் உரைநடை இலக்கிய வடிவங்களுள் சிறுகதைக்குச் சிறப்பிடம் உண்டு. சமகால சமுதாயம் பற்றிய பதிவுகள் சிறுகதைகளில் அதிகம் காணப்படுகின்றன. ஐங்குறுநூற்றைப் போலச் சிறிய வடிவில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தும் செய்திகளைச் சிறுகதைகளில் காண முடியும். கதை கேட்பதும் சொல்லுவதும் தமிழ் மரபுக்குப் புதியதன்று. சிறுகதை வெளிப்பாட்டு உத்திகள் பல. பழைய புராணக் கதைகளை அமைப்பியல் மற்றும் கருத்தியல் நோக்கில் மீட்டுருவாக்கம் செய்யும் உத்தியும் சில சிறுகதைகளில் காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் எழுத்தாளர் ராஜ் (ஏ.வி.ராஜகோபால்) அவர்களின் சிறுகதைகளில் இடம் பெற்றுள்ள புராணக் கதைகள் பற்றிய திறனாய்வாக இக்கட்டுரை அமைகிறது.

புராணம் என்ற சொல்லுக்குப் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் உள்ளது என்பது பொருள். புராணங்களுக்கு இணையான ஆங்கிலச் சொல் myth என்பதாகும். தமிழில் மணிமேகலையில் முதலில் புராணம் என்ற சொல்லாட்சி இடம்பெறுகிறது. மாணிக்கவாசகரின் சிவ புராணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும் புராண இலக்கியங்களுக்கு முன்னோடிகள் ஆகும். புராணங்களுக்கு உபபுராணங்களும் உண்டு.

புராணங்கள் மக்கள் வாழ்வியலை நெறிப்படுத்தவும், சமயங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் பற்றிய தகவல் பதிவுகளாகவும் உள்ளன.

நவீன இலக்கிய வகையான சிறுகதைகளில் புராணங்களின் தாக்கம் காணப்படுகின்றன. புதுமைப்பித்தனின் அகலிகை கதை இதற்குச் சான்றாகும். ராஜ் அவர்களின் சிறுகதைகளில் புராணக்கதைகள் இன்றைய சமுதாயத்திற்கு நீதி சொல்லும் வாயிலாக அமைந்துள்ளன.

[3] முனைவர் பட்ட ஆய்வாளர், ஜஸ்டிஸ் பஷீர் அகமது சையது கல்லூரி maheshmurallii@gmail.com

சொல்ல வந்த சிறுகதையின் ஒரு கூறாகவோ, பழைய புராணக்கதைகளின் புதிய வடிவங் களாகவோ அவை காணப்படுகின்றன. சில கதைகளில் ஆசிரியரின் கற்பனை பழைய கதைகளுக்குப் புதுப் பொருள் தருவதாக உள்ளது. இங்கு ஆசிரியர் நுண்னோக்கினால் கதைகளின் பொருளில் புகுத்தியிருக்கும் செய்திகள் கட்டுரைக் களமாக அமைகின்றன.

சேவற்கொடியோள்

முருகன் பழநிமலையில் ஆண்டியாக நின்றது, சிவன் கோவில்களில் அம்மன் சன்னதி தனியாக அமைந்திருப்பது, சிவபெருமானின் லிங்க வடிவம், நந்தி சிவன் சன்னதியின் முன்னால் தனித்திருப்பது, ஔவையாரிடம் சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டது, முருகன் வள்ளியம்மையைக் காதல் திருமணம் செய்து கொண்டது என்ற புராணக் கதைகளின் சாரத்தைக் கொண்டு இக்கதை புனையப் பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் அடிப்படை வள்ளியம்மை புலால் உண்பது தான். மகன் குடும்பத்தில் நடக்கும் இதனைச் சிவபெருமான் தட்டிக் கேட்கவில்லை என்ற கோபத்தில் அம்பிகை தனிச் சன்னதி கொள்கின்றாள். நந்தி கண்ணெதிரே நடக்கும் தவறைச் சுட்டிக்காட்ட விரும்பாமை தலைமையின் தவறு. மேலும் தனது இனம் புலால் உண்பவர்களால் பாதிக்கப்படுவதால் எதிர்ப்பைத் தெரிவிப்பதற் காகச் சிவபெருமானின் முன்னால் தனியாக அமர்ந்து விடுகிறது. தட்டிக் கேட்க முடியாத வருத்தம், அம்பிகையும் ஊர்தியும் தன்னைப் புரிந்து கொள்ளாத விரக்தியில் இறைவன் லிங்க உருவத்திற்கு மாற்றம். இதையெல்லாம் கண்ட சேவலும் மயிலும் அவற்றின் இனங்கள் பாதிப்பிற்கு ஆளாகக் கூடாது என்ற எண்ணத்தில் புதுமாப்பிள்ளையான முரு கனிடம் இது பற்றிப் பேசின. முருகன் இந்த விஷயத்தில் தெய்வயானையின் நிலை என்ன என்று கேட்டான். ஒருவனுக்கு ஒருத்தி என்பதை மறந்து வேறு திருமணம் செய்து கொண்ட முருகன் மீது இருந்த வருத்தத்தில் எதிலும் அவள் பட்டுக் கொள்வதில்லை. வள்ளியிடம் புலால் உண்பதை விடச் சொன்னால், அது என் தனிப்பட்ட உரிமை. கணவனே ஆனாலும் என் உரிமையில் தலையிட முடியாது என்கிறாள். ஆதரவற்ற நிலையில் முருகன் பழநிமலையில் ஆண்டிக் கோலம் கொள்கிறான். வள்ளி தெய்வயானை இருவரும் முருகனைத் தேடிக் கொண்டு வந்து ஒற்றுமையாக இருப்பதாகவும், புலால் உண்ணாமல் இருப்பதாகவும் வாக்கு அளிக்கின்றனர். தனிச்சன்னதியில் இருக்கும் அம்பிகையைச் சிவபெருமான் அழைக்கிறார். மனைவி தன் குறைகளைக் கணவனிடம் தான் கொட்ட முடியும். அதைக் கேட்டும் கேளாமல் புரிதலின்றிக் கணவன் சும்மா இருப்பது மனைவிக்கு மிகப் பெரும் துயர் தரும். எனவே நான் தனியாகவே இருந்து விடுகிறேன் என்கிறாள் அன்னை. வெறுத்துப் போன சிவன் லிங்க வடிவிலேயே நின்று விட்டார். வள்ளியின் வாயிலாக, மக்கள் முருகன் மாம்பழம் கிடைக்காத விரக்தியில் பழநிமலையில் ஆண்டியாகி விட்டதாகப் பேசிக் கொள்ளும் செய்தியை முருகன் கேள்விப்படுகிறார். முருகன் மக்களின் கருத்துப்படி அறிவுப் பழத்தைத் தேடி உலகம் சுற்றும் நான், மிக அறிவாளியாக ஔவையிடம் கேள்விகள் கேட்கிறேன் என்று அதே மக்கள் சொல்கிறார்கள் என்கிறான். மக்களுக்கு நீதி சொல்ல நீங்கள் எடுத்த முயற்சி வீண்தானா? என்கிறாள் தெய்வயானை. மக்களில் ஒருவரான வள்ளுவர் சொன்னதையே மறந்து போய், அவரது குறட்பாவைத் தவறாகப் படித்தும் பொருள் சொல்லியும் வாழ்கிறது மனித இனம். இவர்கள் வாய்ச்சொல் வீரர்கள் என்கிறான் முருகன்.

பல புராணக் கதைகளின் இணைப்பில் கற்பனை கலந்து புனையப்பட்ட இக்கதை புலால் மறுத்தல், இல்லற தர்மம், பெண்ணுரிமை, மனித இயல்பு, ஆராய்ச்சித் திறன் இல்லாத கல்வி எனப் பலவற்றையும் சுட்டிக் காட்டுகிறது.

வில்லன் பாரதம்

சிவன் பார்வதி இருவருக்கும் தனித்தனிச் சன்னதிகள் இருப்பதற்கும் பல்வேறு புராணக் கதைகள் சொல்லப்படுகின்றன. ஆசிரியர் தனது கற்பனையைப் புகுத்தி இதற்கொரு கதை சொல்கிறார். ஆதிகாலத்துக் கோயிலில் சிவனும் பார்வதியும் ஒரே கோயிலில் ஒரே சன்னதியில் மனித உருவத்தில் இருந்தனர். அப்போதிருந்த மனிதர்கள் இவர்களுக்கு உணவு படைத்தபின் உணவு உண்டனர். தேவி மனிதர்கள் நல்லவர்கள் என்று சொல்ல இறைவன் மனிதர்கள் வைக்கும் உணவில் எதையாவது ஒருநாள் எடுத்துப்பார் புரியும் என்றார். தேவி விளையாட்டாக ஒரு நாள் இரண்டு வாழைப்பழங்களை எடுத்துக் கொண்டாள். இதைப் பார்த்த குருக்கள் துணுக்குற்றார். குருக்கள் தர்மகர்த்தா இவர்களின் வழியாக இது ஊருக்குத் தெரிந்தது. ஒருநாள் கடவுளின் நகைகள் காணாமல் போயின. உண்டியல் கொள்ளை போனது. தர்மகர்த்தாவும் குருக்களும் பணக்காரர் ஆனார்கள். கோயிலுக்குத் திருட்டுக் கோயில் என்றும் அம்மனுக்குத் திருட்டு அம்மன் என்றும் பெயர் வந்தது. மனிதர்கள் நல்லவர்கள் என்று சொன்ன தேவியிடம் சிவன் நான் தான் வென்றேன் என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டினார். கோபம் கொண்ட தேவி இனி நீங்கள் இப்படியே இருங்கள். நான் உங்களுடன் இருக்க மாட்டேன் என்று சபித்தாள். சிவன் லிங்க வடிவமானார். இக்கதை மனித சமுதாயத்தின் சுயநலம் பேராசை திருட்டுப்புத்தி ஆகியவற்றை எள்ளி நகையாடுகிறது. மனித குணங்கள் கடவுளின் மேல் ஏற்றப்பட்டுள்ளன. தோல்வி தரும் அவமானம், கோபம் தொடர்சிக்கல்களை விதைக்கிறது என்பதும் உணர்த்தப்படுகிறது.

மண்ணில் தெரியும் வானம்

மெக்காலே கல்வி முறை நமது இந்திய மரபு சார்ந்த கல்வியை அழித்துவிட்டது. விவசாயம் உள்பட பாரம்பரியத் தொழில்களின் நசிவிற்கு இக்கல்விமுறையும் ஒரு காரணம். பட்டப்படிப்புப் படித்தவர்கள் மண்ணில் இறங்கி வேலை செய்யத் தயங்கும் நிலை இன்றும் உள்ளது. சிவன் சிலைகள் விபூதி அணிந்த கோலத்தில் வெட்டவெளிகளில் இருப்பது, விநாயகரும், முருகனும் கடவுளாக வழிபடப்படுவது, லவகுசர்கள் ராமாயணம் சொன்ன கதையைத் தவிர வேறு எதுவும் அவர்களைப் பற்றித் தெரியாமல் போனது, கிருஷ்ணனின் மகன்கள் அனைவரும் போரில் மடிந்தது என்ற புராணக் கதைகளின் வழியாக உழுதொழிலின் உயர்வு எடுத்துச் சொல்லப்படுகிறது. கதையில் வரும் விவசாயி முத்து தன் மகன்களிடம் விநாயகருக்கும் முருகருக்கும் வழிபாடு ஏன்? லவகுசர்களை நாம் ஏன் கடவுளாக ஏற்றுக் கொள்ளவில்லை? என்று கேட்கிறார். அதற்கு அவர் சொல்லும் காரணம், சுயநலமின்றி மண்ணோடு தன்னை இணைத்துக் கொண்ட சிவனின் குடும்பம் கொண்டாடப்படுகிறது. தன் மக்களுக்கே அரசாட்சி என்று பட்டம் கட்டிய பெருமாளின் பிள்ளைகளுக்கு வழிபாடு இல்லை. மண் தன்னை நம்பி வந்தவர்கள் கடவுளாக இருந்தாலும் காப்பாற்றி விடுகிறது என்பது.

கடவுள் வழிபாட்டுப் புராணக் கதைகள் மேல்நாட்டுக் கல்வி முறையின்மேல் கொண்டிருக்கும் தாக்கத்தைக் குறைக்க உதவி செய்வதை இக்கதையில் காண முடிகிறது.

அவன் அவனில்லை

நரகாசுரன் வதைக்கப்பட்ட நாளை, அவன் தாய் பூமாதேவி விரும்பிப் பெற்ற வரத்தின்படி நாம் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடுகிறோம் என்பது புராணக்கதை. பள்ளி மாணவன் வரதன். எதற்கும் குதர்க்கமாகப் பதில் சொல்பவன். ஆசிரியர் தீபாவளித் திருவிழா பற்றிக் கேட்டபோது, அது காட்டுமிராண்டிகளின் பண்டிகை. பண்பற்றவர்களின் திருவிழா. ஒருவன் அரக்கனே ஆனாலும் தவறுகளுக்காகத் தண்டிக்கப்பட்டு இறந்தால் அந்த நாளை எப்படிப் பண்டிகையாகக் கொண்டாடுவது

நாகரிகமற்றது, மனித நேயமற்றது என்று வாதம் செய்கிறான். அந்த வரதன் பிற்காலத்தில் அரசுப் பேருந்தில் நடத்துநராக வேலை செய்யும் காலத்தில், வண்டியில் பிக்பாக்கெட் அடிக்கும் அரசியல் செல்வாக்குடைய பேட்டை ரவுடி ஒருவனின் மரண ஊர்வலத்தைக் கண்டதும் பேருந்தைப் பாதிவழியில் நிறுத்தி இறங்கி, கோவிலில் சாமி கும்பிடுகிறான். தேங்காய் உடைக்கிறான். இக்கதை புராணக்கதைகள் வெறும் கட்டுக்கதைகள் இல்லை, அவை எத்தனை காலங்கள் சென்றாலும் உண்மையானவை என்ற நீதியைச் சொல்கின்றது.

அரிதார புருஷன்

காதர்கான் ஒரு நடிகர். ராமாயணம் திரைப்படத்தில் ராமராக நடிக்க ஒப்பந்தம் செய்யப்படுகிறார். யாஸ்மின் அவரது மனைவி. காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். அப்ஸல் காதர்கானின் நண்பன். ஒரு நாள் இரவு மதுவிருந்தில் அப்ஸல் ஏதோ ஆபாசமாக ஜோக்கடிக்கவே, இருவரின் நட்பும் முறிந்திருந்தது. யாஸ்மின் அப்ஸலிடம் காதர்கானுக்குத் தெரியாமல் உருது கற்றுக் கொள்கிறாள். எதிர்பாராமல் பாதி ஷூட்டிங்கில் திரும்பி வந்த காதர்கான் இருவர் மீதும் சந்தேகம் கொள்கிறார். அன்றைய படப்பிடிப்பில் அகலிகை சாப விமோசனம் எடுக்கப்பட இருந்தது. அந்தக் கதையைத் தனக்குக் கதை சொல்லும் பெரியவரிடம் விரிவாகச் சொல்லும்படி அவர் கேட்டுக் கொண்டார். உதவிக்கு இருந்த பையன் அவசரப்பட்டு ரேணுகாதேவியின் கதையைச் சொன்னான். பெரியவர் மறுத்து விட்டு அகலிகை கதையைச் சொல்லி முடித்தார். காதர்கானின் கேள்வி, இரண்டு கதைகளிலும் பெண்கள் தண்டிக்கப் படுகிறார்கள். தெரிந்தே தவறு செய்த அகலிகை சாப விமோசனம் பெறுகிறார். தவறு செய்யாத ரேணுகா மகனாலேயே தண்டிக்கப் படுகிறாள். ஏன்? பெரியவர் இதைப் பரிணாம வளர்ச்சி என்கிறார். பரசுராமன் கதை ராமன் கதைக்கு முன் நடந்தது. அதில் பெண் தெரியாமல் தவறு செய்தாலும் தண்டனை உண்டு. ராமன் கதையில் தெரிந்தே தவறு செய்தாலும் பாவ மன்னிப்புப் பெற முடியும் என்கிற கோணத்தைப் பதிவு செய்கிறார். காதர்கான் தன் மனைவி மீது கொண்ட சந்தேகத்தை விட்டொழிக்கிறார்.

இங்கும் ஆசிரியர் ரேணுகா, அகலிகை இருவரின் கதைகளையும் தமது திறனாய்விற்கு உட்படுத்தி விடை காண முயற்சி செய்திருக்கிறார். ஆண் செய்யும் குற்றங்களை விடப் பெண் செய்யும் குற்றங்கள் அதிக விமர்சனங்களுக்கு உள்ளாகின்றன. அவை காலம் கடந்தும் கதைகளாக நிலைத்து, கற்புக் கோட்பாட்டில் பல வரையறைகளை, வற்புறுத்தல்களைப் பெண்ணின்மேல் சுமத்துகின்றன.

இந்த ஐந்து கதைகளின் வழி, கதை ஆசிரியரின் முன்வைக்கும் சிந்தனைகள்:

- புராணங்கள் கற்பனைகள் அல்ல. சமுதாய விழுமியங்களை உணர்த்தப் பயன்படும் ஊடகங்கள்.
- புராணக்கதைகளைப் புதிய கோணங்களில் அணுகுவதன் மூலம் புத்தியலக்கியங்களை உருவாக்க முடியும்.
- மண் தன்னை மதிப்பவர்களை மதிக்கிறது. மற்றவர்களை மறக்கிறது.
- பெண் மீது ஏற்றப்பட்டிருக்கும் கற்புக் கோட்பாட்டு மாற்றங்கள் மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கான சான்றுகளாக உள்ளன.
- கல்வி, சிந்தனைத் திறனை, ஆராய்ச்சி அறிவை வளர்ப்பதாக இருக்க வேண்டும்.
- மனிதன் குறையுடையவன். அவனை நிறையுடையவனாக்குவது இல்லறமே!

துணைநின்றவை

ராஜ் (ஏ.வி.ராஜகோபால்). (டிசம்பர் 1995). *நிழல் கோபுரம் - சிறுகதைத் தொகுப்பு.* சுஜயா பப்ளிகேஷன்ஸ்.

ராஜ் (ஏ.வி.ராஜகோபால்). (டிசம்பர் 1996). *காகிதப் புலிகள் - சிறுகதைத் தொகுப்பு.* சுஜயா பப்ளிகேஷன்ஸ்.

ராஜ் (ஏ.வி.ராஜகோபால்). (ஜூலை 2000). *வெள்ளை யானையும் கருப்புத் தந்தமும் - சிறுகதைத் தொகுப்பு.* சுஜயா பப்ளிகேஷன்ஸ்.

Wikipedia. (தே.இ). *Wikipedia*. Wikipedia: https://ta.wikipedia.org/s/a9 -இல் இருந்து எடுக்கப்பட்டது

Inam: International E_Journal of Tamil Studies is a quarterly, bi-lingual journal in Tamil and English that publishes research articles, reviews and new manuscripts in the month of May, August, November and February.

Thank you, friends! Scholars! You are most welcome to send articles for the Tamil Journal from India, Inam //www.inamtamil.com. Our members are prominent to the article, which related to Tamilology, Philosophy, Linguistics, Folklore, Literature, Grammar, Archaeology, Religion, Arts, Science and Computer. Each publication is evaluated by outside Scholar who is a specialist in the related field.

This is an International E-journal. It should be intended to move the Tamil research into world Level Reading. Therefore, we believe that, it lends a hand to the readers and researchers can be easily read the articles and to make use the ideas of quotation from published articles.

……………………………………………………

Assure that, your research will be in a standard form after it was evaluated. Points to remember the following:

Manuscript must be in the original.

Must include your complete address and e-mail address on the first page of your article.

Your article should be eliminated from the website page, if it knows as the ideas of other.

Article should be in Unicode format.

Your research ideas must be standard and innovate one.

It should not be written as a note for classical Literature.

Your article must be in word and PDF format.

Quotation must be displayed in a special manner and not as a post as your own ideas.

Your article must submit through e-mail: **inameditor@gmail.com.**

Research articles of elderly Tamil scholars and selected segments of research books must be published in each journal.

A book review must be placed as a division of e-publication in each journal. Author must send two copies of book through post for a book review. For address cited the contacts sector.

Article may be published within the first week of quarterly.

சிற்றிலக்கிய வகை, வகைமைச் சிந்தனைகள்

Idea's of literary genres

பொ.புனிதா | P.Punitha[4]

Abstract: As the Tamil classic literature is called Perilakkiyankal, the Perilakkiyankal component from the literature that literary can be classified as fragments. Constitional Dhamma, Meaning, Pleasure, tenant All of the emerged Interpreted that come across are perilakkiyankal (gregarious) Only one of special these is a paaduporul Getting to work is called a literary. (lid.) AD Starting in the 8th century, the literarys began to grow the number of unrelated literarys has emerged. Such things are Signification Pillaitamil, Thoothu, Ula, Parani, Anthathi, Kovai, Kalambaham, Kuravanji, Pallu, Madal, Malai, Sadaham, Venba, Thogai and etc. The Literary environments take a fight and include the Literary Imagine, Epic Story; the rise is Uyarvu Navirchi Faction, Parable, distinguished by the radical teams and illustrations. The Literary of the grammatical texts suggests Sciences, Paatiyal Books. Literature with its character (Ethos) category. Explore type explanation. Before the Origin (emergence) of the Differentiability Research (fragrance) analyzing the type with news. The formation of the type of species is characterized by type and Category, Differentiability. The nature of literature molecules of type and classification can be indicated.

Date of submission: 2019-03-20
Date of acceptance: 2019-04-02
Date of Publication: 2019-05-02

Corresponding author's
Name: **பொ.புனிதா**
Email: ponpunitha@gmail.com

Keywords: Na.Vanamamalai, Palluppaattu aaraichi, Tamil Literature, Ethnology, பழந்தமிழ், வகைமைச் சிந்தனைகள், சிற்றிலக்கிய வகை, பேரிலக்கியங்கள், பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல்.

***

முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்களைப் பேரிலக் கியங்கள் என்று அழைப்பதைப் போல் பேரிலக்கியங்களிலிருந்து தோன்றிய இலக்கியங்களைச் சிற்றிலக்கியங்கள் என்று வகைப் படுத்திக் கூறலாம். யாப்பமைப்பில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய தன்மைகள் முழுதும் உள்ளடங்கித் தோன்றியவையெல்லாம் பேரிலக் கியங்களாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான காப்பியங்கள் இதற்குச் சான்றாகும். யாப்பமைப்பு மாறுபட்டு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய தன்மைகளில் ஏதேனும் ஒரு கூறினுள் சிறுபகுதியை மட்டும் அடிப்படையாகவும், கடவுளர்கள், மன்னர்கள், கொடை வண்மையில் சிறந்த வள்ளல்கள், புகழில் நிலைக்கும் தலைவர்கள் போன்ற பிறவுமான ஒருவரின் வாழ்வின் சிறுபகுதியை மட்டும் பாடுபொருளாகவும் கொண்டவை சிற்றிலக் கியங்கள் என்பதன் பாற்படும். இதனை, பிரபந்தங்கள் என்றும் அழைப்பதுண்டு. கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல் தமிழில் சிற்றிலக்கிங்கள் வளரத் தொடங்கி எண்ணிக்கையில் அடங்காத இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இவற்றில் பிள்ளைத்தமிழ், தூது, உலா, பரணி, அந்தாதி, கோவை, கலம்பகம், குறவஞ்சி, பள்ளு, மடல், மாலை, சதகம், வெண்பா, தொகை போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. உலகியல் கடந்த கற்பனை நிகழ்ச்சிகளும், புராணக் கதைகளும், உயர்வுநவிற்சி அணிகளும், திரிசொல்லாட்சிகளும், இல்பொருள் உவமை களும் நிறைந்து சிற்றிலக்கியங்களை வளம் சேர்க்கின்றன. சிற்றிலக்கியங்களைத் தொண் ணுற்றாறு வகைப்படும் என்று இலக்கண

---

[4] உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, திருமங்கலம். +91 94877 30426, ponpunitha@gmail.com

நூல்களும், பாட்டியல் நூல்களும் குறிப்பிடுகின்றன. பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்கள் சிற்றிலக்கியத்திற்கு இலக்கணம் கூறுபவை. இவற்றில் தொண்ணூற்றாறு வகை பிரபந்தங்கள் என்று குறிப்பிடுகிறதே தவிர, அவற்றினைப் பற்றிய பட்டியல்களைக் குறிப்பிடவில்லை. தொண்ணூற்றாறு என்ற வரையறைக்குள் அடங்காத நொண்டி நாடகம், கப்பற்பாட்டு, ஆநந்தக் களிப்பு, கிளிக் கண்ணி, விலாசம் புலம்பல் உந்தி பறத்தல், சாழல், தெள்ளேணம், வள்ளைப்பாட்டு, கவசம், ஓடப் பாட்டு, காதல், ஏற்றப்பாட்டு முதலான பல சிற்றிலக் கியங்கள் உள்ளன. இத்தகைய கருத்து நிலைகளில் சிற்றிலக்கியங்களின் வகை எண்ணிலடங்காதது எனத் தெரிகிறது. இத்தகைய சிற்றிலக்கியங்கள் முகிழ்த்தது என்பது பண்டைய இலக்கண, இலக்கிய நூல்களாலேயே என்பதனை இக்கட்டுரை நிறுவ முயலுகிறது.

இலக்கிய வகை குறித்த சிந்தனை

இலக்கிய வகை என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையாக Genre என்ற ஆங்கிலச் சொல் கையாளப்படுகிறது. இது இலத்தீன் சொல்லின் வேர்ச்சொல்லாகக் குறிக்கப் படுகிறது. இலக்கண இலக்கியங்களில் வகுக்கப் பட்டுள்ள சான்றுகளிலிருந்தே வகைமை மூலக்கூறுகள் தோன்றுகின்றன. ஓர் இலக்கியம் முகிழ்ப்பதற்கான மூலக்கூறுகள் பல்வேறு பண்புகளைக் கொண்டவை. அதுவே பின் இலக்கிய வகையாக உருப்பெறுகிறது. இலக்கிய மூலக்கூறினை இலக்கிய வகையாக வளர்த்துக் காட்டும் பண்புக்கூறுகளே இலக்கிய வகைமைகள்[1] என்று கி.ராசா விளக்குகின்றார். “இலக்கியத்தை இனம் பிரித்துப் பண்பு அடிப்படையில் அதன் உள்ளும் புறமும் உணர வழிசெய்யும் வாயில்களாக இலக்கிய வகைகள் அமைகின்றன”[2] என்று தமிழண்ணல் குறிப்பிடுகிறார். இலக்கிய வகை வகைமைகளைத் தோற்றம், வளர்ச்சி, மலர்ச்சி, தளர்ச்சி போன்ற படிநிலைகளில் குறிப்பிடலாம். சங்க இலக்கியப் பாடல்களை அகம், புறம் ஆகிய தன்மைகளில் நூற்றுக்கணக்கானப் புலவர்கள் பாடியுள் ளனர். அகத்துறைப் பாடல்கள் நாடக வழக்காகவும் அமைந்துள்ளன என்பதற்குக் கலித்தொகையைச் சான்றாகக் கொள்ளலாம். கி.பி. ஐந்து ஆறு நூற்றாண்டுகளில் பக்திப் பாடல்கள் தோன்றின. பின் காப்பியங்களும், புராணங்களும் எழுந்தன. அதன்பின் சிற்றிலக்கியங்கள் தோன்றின என்று இலக்கிய வரலாற்றாய்வுகள் இலக்கியங்களை வரிசைப் படுத்துகின்றன.

இலக்கிய வகை, வகைமைக் கோட்பாடு

வகை பற்றியதான ஆய்வும் வகைமை பற்றியதான ஆய்வும் வேறுவேறானதாகத் தெரிகிறது. இலக்கியத்தினை அதன் பண்பமைதியுடன் விளக்குவது வகை ஆய்வு. அதன் தோற்றத்திற்கான முன்பின் செய்திகளுடன் ஆராய்வது வகைமை ஆய்வு. வகைமை ஆய்வை இலக்கிய மூலக்கூறு ஆய்வு என்றும் குறிப்பிடலாம். உதாரணமாக, பிள்ளைத்தமிழ் நூல்களைத் திரட்டி, வகுத்தும் தொகுத்தும் தருவது வகை ஆய்வு என்றும், பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி முதலியவற்றை விளக்குவதும் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை உய்த்துணர்த் துவதும் வகைமை ஆய்வு என்றும் தெளியமுடிகிறது.

இலக்கியத்தின் வகையைப் பகுப்பு என்றும் கூறுவர். தொல்காப்பியர் காலத்திலேயே இலக்கிய வகைமைப் பகுப்புமுறை தோன்றிவிட்டது. தொல்காப்பியர் செய்யுளி யலில் குறிப்பிடும் பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல்[3] ஆகியன பிற்காலத்தில் தனித்த இலக்கிய வகைகளாகக் கருதுவதும் வளர்வதுமாக இருந்துள்ளதைக் காணமுடிகிறது. “பாட்டு என்பது தனிப்பாடல், காப்பியம், இலக்கியம் என உருவெடுப்பது என்றும், உரை என்பது நான்கு வகை என்றும், நூல் என்பது இலக்கணம் என்றும், வாய்மொழி என்பது மந்திரம் முதலியன என்றும், பிசி என்பது விடுகதை என்றும், அங்கதம் என்பது சித்த வைத்தியம், இலக்கணம் முதலியன என்றும், முதுசொல் என்பது பழமொழியால் அமைந்த இலக்கிய வகை”[4] என்று ச.வே. சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். மேலும், எண்வகை வனப்பான, அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன்,

இழைபு என்பதும் இலக்கிய வகைகளில் இடம்பெற்றதைக் காணமுடிகிறது. இதில் "அம்மை என்பது அறநூல் வகை இலக்கியத்தையும், தொன்மை இதிகாச வகை இலக்கியத்தையும், தோல் மகா காவிய வகை இலக்கியத்தையும், விருந்து பிரபந்த வகை இலக்கியத்தையும், இயைபு காப்பிய வகை இலக்கியத்தையும், புலன், கூத்துவகை இலக் கியத்தையும், இழைபு, இசைவகை இலக் கியத்தையும் குறிப்பிடும்"[5] என்று ச.வே. சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். இதனை யன்றி, தன்னுணர்ச்சிப் பாடல்கள், இறைநெறி பாடல்களை, தாம் கலந்து பாடிய இலக்கிய வகைகள் என்றும், காப்பியம், நாடகம் ஆகியவற்றை பிறர் அனுபவம் பற்றிய இலக்கிய வகைகள் என்றும், நாடகத் தன்னுணர்ச்சிப் பாடல்களை இரண்டும் கலந்தவை என்றும் வகைப்படுத்துகின்றனர்.

சிற்றிலக்கியம் எனும் சொல்லாட்சியும் பாடற்பொருண்மைகளின் அமைப்பும்

சிற்றிலக்கியம் என்பது தொடக்க காலத்தில் பிரபந்தம் என்று அழைக்கப்பட்டது. பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது எனப் பொருள். இதனை தா.ஈசுவரபிள்ளை, பிரபந்தம் என்ற சொல் சிற்றிலக்கியம் என்பதை மட்டும் குறிப்பிடாமையை உணர்ந்து சிற்றிலக்கியத்தைச் சுட்டச் சிறுபிரபந்தம் அல்லது சில்லறைப் பிரபந்தம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தத் தொடங்கினர்"[6] என்று குறிப்பிடுகிறார். இதன் விளக்கமாக ந.வீ.செயராமன் "தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, காப்பியங்கள், பக்தி நூற்கள் ஆகியன இலக்கியம் என்னும் சொல்லால் குறிப்பிடப்பட்டமையால் அந்தாதி, சதகம், பிள்ளைத்தமிழ், பரணி போன்ற இலக்கியங்கள் எழுந்த காலத்தில் அவைகளைக் குறிக்கப் பிரபந்தம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது என்றும், பிரபந்தம் என்ற சொல் இலக்கியம் என்பதைக் குறிக்கும் என்ற பொருளு ணர்ச்சியின் விளைவாக அந்தாதி முதலியவற்றைச் சிறு பிரபந்தங்கள் அல்லது சில்லறைப் பிரபந்தங்கள் என அடை கொடுத்து வழங்கும் வழக்காறு ஏற்பட்டது என்றும், தனித்தமிழாட்சி வளர்ச்சியுற்ற காலத்தில் சிறு பிரபந்தங்கள் என்ற சொல்லால் குறிப்பிடப்பெறும் அந்தாதி முதலியவற்றைச் சிற்றிலக்கியம் என்று கூறும் வழக்கு ஏற்பட்டது"[7] என்று குறிப்பிடுகிறார்.

பிரபந்தம் என்னும் சிற்றிலக்கியத்தைத் தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல். இலக்கியத்தின் ஒரு பகுதியான ஒரு துறையை மட்டும் பாடுபவை. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருட்களைக் கொண்டுள்ள பேரிலக் கியத்திலிருந்து வேறுபட்டு அதன் ஒரு கூறினை மட்டும் கருப்பொருளாகக் கொண்டுள்ளது. தெய்வங்கள், மன்னன், வள்ளல், தலைவன் ஆகியோர;களின் மீதுள்ள அருள் குறித்தும் பொருள் குறித்தும் கொடை குறித்தும் பாடியவை. அதன், பாடுபொருள் அகமாகவோ அல்லது புறமாகவோ அல்லது அகப்புறமாகவோ இருக்கலாம். இதனை, ஆசிரியம் தொடங்கி கலிவெண்பா ஈறாக தொடர்ந்தும் கலந்துமான யாப்பமைப்பில் பாடப்பட்டுள்ளது. அதாவது, 5,8,20,40,70,400 ஆகிய எண்ணிக்கையிலும் வரையறுத்துப் பாடப் பட்டுள்ளது. இதனைத் தமிழண்ணல், "நெடும்பாட்டு போல்வன. முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேலன. பலதுறை சார்ந்த பெருநூல்கள் போலாது ஒரு சில துறைகளைப் பற்றிய செய்திகளை முடிக்கக்கூடியன. இவை வட்டாரச் சார்பு மிக்கன. சங்க காலத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை, மன்னனை, வள்ளலைப் பற்றிப் புகழ்வதற்காகச் சிறப்பாக எடுத்துரைப்பதாக எழுதப்பட்டன"[8] என்று விளக்கமளிக்கிறார்.

சிற்றிலக்கியங்கள் அகப்பொருள், புறப் பொருள், துதிப்பொருள் ஆகிய பொருள் களின் அடிப்படையில் பாடப்பெற்றுள்ளன. பத்து, பதிகம், சதகம், பஞ்சகம் ஆகிய எண்ணிக்கையில் பாடப்பட்டுள்ளன. அந் தாதி, ஊர்வெண்பா, ஊரின்னிசை, ஊர் நேரிசை ஆகிய யாப்பமைவிலும், ஆசிரியம் முதல் கலிவெண்பா ஈறாகவும் இவற்றின் கலப்பாகவும் பாடப்பெற்றுள்ளன. தூது, உலா, பிள்ளைத்தமிழ் ஆகியன பொருள் அடிப்படையில் பாடப்பெற்றுள்ளன. ஊசல், அம்மானை, சிற்றில், சிறுதேர், கழங்கு போன்றன விளையாட்டு அடிப்படையில் பாடப்பட்டுள்ளன. பள்ளு, குறவஞ்சி, குறம் போன்றன நாட்டுப்புறத் தன்மையில் பாடப்பட்டவை. அல்லி, அரசாணி மாலை

போன்றன கதைப்பாடல் அமைப்பில் உள்ளன. புகழ்ச்சி மாலை, தாரகை மாலை போன்றன பெண்களை முன்னிறுத்தியவை. தெம்மாங்கு, கும்மி, சிந்து, கீர்த்தனை போன்றன இசையின் தன்மையில் பாடப்பட்டவை. பள்ளு, குறவஞ்சி போன்றன இசையோடு நாடகத் தன்மையும் பெற்றவை. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்றன பக்தி அடிப்படையில் பாடப்பட்டுள்ளன. நெஞ்சு விடு தூது, பழையது விடு தூது, செருப்பு விடு தூது போன்ற தூது இலக்கியங்கள் தத்துவ அமைப்பில் உள்ளன. ஒடப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு போன்றவை தொழில் அடிப்படையில் அமைந்தவை.

சிற்றிலக்கியங்களின் தோற்றச் சூழல்

சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்குப் பல்வேறு காலத்தின் அரசியல், பொருளாதார, சமூக, சமயக் காரணிகளைச் சுட்டலாம். இலக்கண, இலக்கிய மூலங்களை அடியாகக் கொண்டும், அரசியல், சமூக மாற்றங்கள் காரணமாகவும் சிற்றிலக்கிய வகைகள் தோன்றலாயின. உதாரணமாக, அரசனைப் பாடும் நிலையிலிருந்து மாற்றம் பெற்று, இறைவனைப் பாடும் நிலை ஏற்பட்டதும், துயிலெடை நிலை என்ற இலக்கிய வகையிலிருந்து பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வகை தோன்றியதாகக் கூறலாம். பரணி இலக்கியங்கள், மரபு வழியாக வந்த இலக்கியங்களை இணைத்துப் புதிய இலக்கியம் படைக்கும் ஆவலில் தோன்றியது எனலாம். பின்பு சங்கப்பொருள் இலக்கியங்களைத் தனித்தனியாக படைக்கும் சிந்தனையில் நெஞ்சுவிடு தூது, வேனில் மாலை, கோவை, எண் செய்யுள் போன்றன தோன்றியதாகத் தெரிகிறது. பிள்ளைத்தமிழ், உலா, கலம்பகம், அந்தாதி போன்றன சமய உணர்வை வெளிப்படுத்துவதற்காகத் தோன்றிய சிற்றிலக்கியங்கள் எனத் தெரிகிறது. தல இறைவனைப் புகழும் நோக்கில் தலபுராணம், தலக்கோவை போன்றன பாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இலக்கியத்தின் உள்ளடக்கத்தினைக் கொண்டு சிற்றிலக்கியங்கள் தோன்றியன. புறப்போர், அகப்போராக மாற்றம் கொண்ட நிலையின் வெளிப்பாடுதான் இரணியவதைப் பரணி. உலா மடல் என்பது பாட்டுடைத் தலைவனின் இயற்பெயருக்கு ஏற்பப் பாடுவது வளமடல் இலக்கிய பண்பாகும். ஓர் இலக்கிய வகைக்குப் போட்டியாக இன்னோர் இலக்கிய வகை தோன்றியதைக் குறிப்பிடலாம். அத்தகைய வடிவில் நாமமாலை தோன்றியது. இது ஆடவரைப் புகழ்ந்து பாடும் மரபில் தோன்றியது. இதன் எதிரிடையாக புகழ்ச்சி மாலை தோன்றியது. இது பெண்டிரைப் புகழ்ந்து பாடுதலாகத் தோன்றியது என அறியமுடிகிறது. மரபு வழிப்பட்ட உறுப்புக்களையும் நாட்டுப்புற உறுப்புக்களையும் பல்வேறு பாவினங் களையும் கலந்து பாடும் புலமை விளையாட்டின் விளைவாகத் தோன்றிய இலக்கியம் கலம்பகமாகும். மடக்கு, திரிபு, யமகம் முதலிய சொல்லணிகளை அமைத்துப் பாடும் புலமை விளையாட்டின் அடிப்படையில் தோன்றியது வருக்கக் கோவை என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சிகளைப் பள்ளு, குறவஞ்சி இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

ஊசல், கழங்கு, அம்மானை போன்றன மகளிர் விளையாட்டினைப் பாடுகின்றன. சதகம், பல்லாண்டு, குறத்திப்பாட்டு ஆகியவை சமுதாயத்தில் காணப்படும் வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைக்கப்பட்டுள்ளன. அட்ட மங்கலம், நவமணி மாலை, தாரகை மாலை ஆகியவை குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாடப்பட்டவையாக அமைகின்றன. இரட்டை மணிமாலை, இணை மணிமாலை, நான்மணி மாலை ஆகியவை வேறு வேறு பாக்களை இணைத்துப் பாடுபவையாக அமைவ னாகின்றன. பன்மணி மாலை பல்வேறு யாப்புக்களை பயன்படுத்தும் புலமையில் பாடப்பட்டுள்ளது. நூற்றந்தாதி ஒரே யாப்பைப் பயன்படுத்தி நூறு பாடல்களில் பாடப்பட்டுள்ளன. தசாங்கம், தசாங்கத்தயல் ஆகியவை ஒரே பொருண்மையை யாப்பினால் வேறுபடுத்திப் பாடும் தன்மை கொண்டவை. இவை ஒரே பொருண்மையில் பல்வேறுபட்ட இலக்கிய வகைகளைக் கொண்டவை. அலங்காரப் பஞ்சகம் பல்வேறு பாவகைகளை அமைத்துப் பாடப்பட்டது. நாற்பது, இருபது, பத்து போன்றவை குறிப்பிட்ட எண்ணிக்கையில் பாடப்பட்டவை. சிற்றிலக்கிங்கள் பல்வேறு சூழல்களில், பொருளமைப்பில்,

யாப்பமைப்பில் பாடப்பட்டவை என்பது புலனாகிறது.

இலக்கண இலக்கியங்களில் சிற்றிலக்கிய வகைக்கான குறிப்புக்கள்

இலக்கியங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றியவை. ஒன்றிலிருந்து வேறொன்றாக மாறியவை. வெவ்வேறு வடிவங்களைப் பெற்றவை என்பதான கொள்கைகளை முன்னிறுத்தியவை. தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலம் இன்னதென்று வரையறுத்துச் சொல்லமுடியாத போதிலும், பண்டைய இலக்கியங்களாக இன்றளவும் அடையாளம் காணப்பட்டவை சங்க இலக்கியங்களே. முதுநாரை, முதுகுருகு, பரிபாடல், களரியாவிரை, அகத்தியம், மாபுராணம், பூதபுராணம், பெருங்கலி, வெண்டாழி, அகவல், குருகு, வியாழமாலை ஆகியவை சங்க இலக்கியத்திற்கு முந்தைய நூல்களாக அறியப்பட்ட போதிலும் அவை முழுவதுமாக கிடைத்தில. தொல்காப்பியத் திற்கு முந்தைய பழமையான இலக்கண நூல்கள் உண்டென்று தொல்காப்பியத் திலேயே குறிப்புக்கள் இருந்தபோதிலும் அவற்றை அறிதற்கியலவில்லை. ஆகையால் இன்றளவும் நமக்குக் கிடைக்கப் பெற்ற இலக்கிய, இலக்கணங்களில் தொன்மை யானது தொல்காப்பியமும், சங்க இலக்கிய முமாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு மாகிய பதினெட்டு நூல்கள் சங்க இலக்கியங்கள். பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களின் தோற்றத்தினையும், அவை தோன்றியதற்கான மூலக்கூறுகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங் களிலும் விரவிக் கிடக்கின்றன. தொல்காப் பியத்திலிருந்து தோன்றிய இலக்கிய வகைமைகளைக் கி.ராசா, “தொல்காப்பியர் காலத்திலேயே மூலக்கூறு அளவில் நின்றவை. அவர் காலத்திலேயே வகைமைப் பண்பினைப் பெற்றவை. வகைகளாக எய்தியவை.”[9] ஆகிய மூன்று நிலைகளில் பாகுபடுத்துகிறார்.

தொல்காப்பியர் அகமரபுகளை நாடகவழக்கு என்றும், களன் என்றும், முன்னம் என்றும், நோக்கு என்றும் பாகுபடுத்தியுள்ளார். இதில் நாடகவழக்கு என்பதற்கு இளம்பூரணர், “நாடக வழக்காவது, சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத் தானும், அன்பினாலும், ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப்போருமின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வளர்ந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவன வெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்”[10] என்று குறிப்பிடுகிறார். அகத்திணையில் நிகழும் அகமாந்தர்களின் செயல்களை உள்ளத்தின் வேட்கை என்று குறிப்பிடுகிறார். மேலும், அதனை, களவொழுக்கம் நிகழ்த்தும் வாழ்வில் இலக்கண வகை என்று குறிப்பிடுவது கருதத்தக்கது. இதனை, வகைமை நோக்கில் தோன்றும் சிந்தனை என்றே கருதமுடிகிறது.

பொருட்கூறுகளின் கருத்தியலுக்குக் களன் முக்கியத்துவம் வாய்ந்தது. களனைத் தொல்காப்பியர்,

> “ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியுங்
> கரும நிகழ்ச்சி யிடமென மொழிப”[11]

என்று குறிப்பிடுகிறார். இதற்குப் பேராசிரியர், “ஒரு நெறிப்படுத்த லென்பது, ஒருவழிப் பலவுந் தொகுத்தல். ஓரிய லென்பது அவற்றுக்கெல்லாம் இலக்கண மொன்றாதல்: அஃதாவது காட்சியும் ஐயமுந் துணிவும் புணர்ச்சியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையுமென்று இன்னோ ரன்ன எல்லாம் ஒருநெறிப்பட்டு இயற்கைப் புணர்ச்சி யென்னும் ஓரிலக்கணத் தான் முடியும்”[12] என்று தம் உரையில் குறிப்பிடுகிறார். இதில் காட்சி, ஐயம், துணிபு, புணர்ச்சி, நயப்பு, பிரிவச்சம், வன்புறை ஆகிய களன்கள் இயற்கைப் புணர்ச்சி தொடங்கிய களவின் செல்நெறிகள் அனைத்தும் உள்ளடக்கியதாக பேராசிரியர் விளக்கத்திலிருந்து தெளிகிறது. இதனை இறையனார் களவியல் உரை முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், தலைவன் தலைவியும் உள்வழி வரவுணர்தல் ஆகிய மூன்று நிலைகளில் இயற்கைப் புணர்ச்சியின் போது தோழியின் உணர்ச்சியாகக் குறிப்பிடப்படுகிறது. இக் கருத்தினை உணர்த்தும் பாடல் வருமாறு;

> “முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்
> இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென்று
> அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி”[13]

திணை, துறை அமைப்பில் பாடப்பட்ட அகத்திணை இலக்கியங்கள் புதிய பொருண்மையில் சிற்றிலக்கியத்தில் பாடப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் அகத்திணைப் பாடல்களுக்கு அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், உவமவியல், மெய்ப்பாட்டியல் ஆகிய பகுதிகளில் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. புறத்திணைப் பாடல்களுக்குப் புறத்திணையியலில் இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. செய்யுளியல், மரபியல் ஆகியவை பாடல்களின் அமைப்பைப் பற்றி குறிப்பிடுகிறது. அகத்திணைப் பாடல்களில் உள்ள திணை, துறை பகுப்பு குறிப்பிடத் தக்கது. துறைகளை முதன்மையாகக் கொண்டு கோவை இலக்கியங்கள் வளர்ச்சி யுற்றன. கோவை நூல்கள் நாடகப்போக்கில் அமைந்துள்ளன. துறை வகைகளுக்கு ஒத்தது.

'கனவும் உரித்தால் அவ்விடத்தான'[14] எனவரும் பொருளியல் நூற்பா பாங்கனொடு கழறல் என்னும் அகப்பொருள் துறையில் தோன்றியதாக அநுராக மாலை என்னும் இலக்கிய வகை தோன்றியுள்ளதை அறிய முடிகிறது. 'நன்னயம் உரைத்தல்'[15] என்னும் களவியல் நூற்பா வரி புகழ்ச்சி மாலை என்னும் இலக்கியம் தோன்ற வித்தாக அமைந்ததைக் குறிக்கிறது. 'பெற்றவழி மகிழ்ச்சி'[16] என்னும் களவியல் நூற்பா இயற்கைப்புணர்ச்சியிலும், இடந்தலைப்பாட்டிலும் தலைவன் தலைவியைப் பெறுவதும், தலைவி தலைவனைப் பெறுவதுமான சூழலைக் குறித்தது. இது பெருமகிழ்ச்சி மாலை என்னும் இலக்கிய வகை தோற்றத்திற்கு காரணமாக உள்ளது. 'வேனில்'[16 (1)] என்னும் பாலைத்திணையின் பெரும் பொழுதினைக் குறிப்பிடும் சொல் வேனில் மாலை என்னும் இலக்கியத் தோற்றத்திற்கு வழிவகுத்தது. 'ஊரும் பேரும் வினவுதல் உண்டு'[16 (2)] என்னும் களவியல் நூற்பா எண், செய்யுளிசை, பெயரின்னிசை, பெயர் நேரிசை, ஊர் நேரிசை, ஊர் இன்னிசை என்னும் இலக்கியங்கள் தோற்றத்திற்கு வழி வகுத்தன.

'கனவும் உரித்தால் அவ்விடத்தான'[17] என்னும் பொருளியல் நூற்பா அநுராக மாலை என்ற இலக்கிய வகை தோன்ற வழிவகுத்திருந்த போதிலும், உலாமடல் என்னும் இலக்கிய வகை தோன்றவும் காரணமாகியது. 'மடல்மா கூறும் இடனுமா ருண்டே'[18] எனவரும் களவியல் நூற்பாவும் உலாமடல் இலக்கியத்திற்கும், வரிமடல் என்னும் இலக்கிய வகை தோன்றுவதற்கும் காரணமாக இருந்ததைக் காணமுடிகிறது.

தலைவியின் விழிகள் பேசும் மொழியின் சிறப்பு, கொங்கைகளின் சிறப்பை உணர்த்தும் விதமாக நயனப்பத்து, பயோதரப் பத்து தோன்றியுள்ளதாக அறியமுடிகிறது. இதற்குச், 'சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப'[19] என்னும் களவியல் நூற்பா வித்தாக அமைகிறதாகக் கருதமுடிகிறது.

"கிழவோன் அறியா அறிவினள் இவளென
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவி அறிதலும் உரித்தே"[20]

என்னும் களவியல் நூற்பா தலைவன் தலைவியின் பிரிவுக்காலத்தில் ஏற்பட்ட ஆற்றாமையால் பசலை மிகுந்த தலைவியின் துன்பத்தை அறிய, செவிலித்தாய் கட்டு வைத்தும், கழங்கு வைத்தும் காண்பாள் என்ற செய்தியின் மூலமாக குறத்திப்பாட்டு என்னும் இலக்கிய வகை தோற்றம் பெற்றதாக அறியமுடிகிறது. இவ்வாறாக அகப்பொருள் இலக்கணங்கள் கலம்பகம், பன்மணி மாலை, நாம மாலை ஆகிய இலக்கிய வகைகள் வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியம் புறத்திணையியலில் வரும் திணை, துறை அமைப்புக்கள் பிற்காலத்தில் தனித்த இலக்கிய வடிவங்களாக மாறியுள்ளதைச் சிற்றிலக்கியங்களின்வழி அடையாளம் காணமுடிகிறது. பாடாண் திணையில் வரும் 'குழவி மருங்கினும் கிழவ தாகும்'[21] என்ற துறையும், வாகைத்திணையில் வரும், 'களவழி தேரோர் தோற்றிய வென்றி (மறக்களவழி'[21(1)] என்னும் துறையும், காஞ்சித் திணையில் வரும், 'முதுமொழிக் காஞ்சி, பொருண்மொழிக் காஞ்சி' [21(2)] ஆகிய துறைகளும், 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப'[22] என்னும் துறையும், 'துயிலெடை நிலை'[23] என்னும் துறையும், ஆற்றுப்படை[23 (1)] அறத்தொடு நிற்றல்[24] ஆகிய துறைகளும் சிற்றிலக்கியங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இலக்கிய மாற்றத்திற்கும் வழிவகுக்கும் மூலக்கூறுகளாகின்றன எனத் தெரிகின்றது.

சங்க இலக்கியங்களில் சிற்றிலக்கியக் கூறுகள்

எட்டுத்தொகை நூல்களில் அகத்திணை நூல்களான கலித்தொகை, குறுந்தொகை,

ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை ஆகியவற்றின்வழிச் சிற்றிலக்கியங்கள் முகிழ்த்துள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் தன்மைகளில் சிற்றிலக்கியக் கூறுகள் மிகுதி யாகும். அத்தகைய சிற்றிலக்கியங்களைத் தொகைவழி, இலக்கியங்கள், கதைவழி இலக்கியங்கள் என்று பாகுபடுத்தலாம். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைப்படுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை ஆகிய ஆற்றுப்படை நூல்களிலும், மதுரைக் காஞ்சி ஆகிய புறப்பொருள் நூல்களிலும், முல்லைப் பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, நெடுநல் வாடை ஆகிய அகப்பொருண்மை இலக்கியங்களிலும் சிற்றிலக்கியக் கூறுகள் விரவிக் காணப்படுகின்றன.

பத்துப்பாட்டு நூல்களில் பாதாதிகேசம், கேசாதிபாதம் பற்றிய சிந்தனைக் கூறுகளும், ஐங்குறுநூற்றில் அமைந்த தொண்டிப் பத்தில் அந்தாதி இலக்கியக் கூறுகளும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு கலித்தொகை ஆகிய நூல்களில் தூது இலக்கியக் கூறுகளும், குறத்தி, குறி பார்த்துக் கூறுவதாக குறவஞ்சி இலக்கியப் பொருண்மையும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. ஆற்றுப்படைப் பாடல்களில் இயன்மொழி வாழ்த்து, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, கையறுநிலை ஆகிய வஞ்சிப்பா கூறுகளும் காணமுடிகின்றன.

சங்கப் பாடல்கள் மிகுதியானது நாடகத் தன்மையிலானது என்று கைலாசபதி, கார்த்திகேசு சிவத்தம்பி, தெ.பொ.மீனாட்சி சுந்தரம், வ.சுப.மாணிக்கம் உள்ளிட்ட பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் நிறுவியுள் ளனர். அகப்பொருள் இலக்கியங்களில் திணை, துறை பகுப்பு, கூற்று போன்றவை நாடகத் தன்மைக்கு வழிவகுக்கின்றன. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், கண்டோர் ஆகியோர்களின் கூற்றும் உரையாடல் நயமும் நாடகத்திற்கு வித்தாக அமைகின்றன. நாடகப்பாங்கும் மிகுதியாக உள்ளதைக் காணமுடிகிறது. இதனைத் தொடர்ந்து பிற்காலத்தில் தோன்றிய சிற்றிலக் கியங்களும் நாடகத்தன்மை கொண்டதோடு, ஒரு தொடர்ச்சியை மையமாகக் கொண்டு உரையாடல் தன்மையில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவனின் புகழைப் பாடுவதற்காக மகளிர் பலர் குழுமி ஆடிப் பாடி ஊஞ்சலில் ஏறி விளையாடுகின்றனர். அம்மானைக் காய் களை வைத்து மூவர் மூவராகப் பாடுகின்றனர். ஆடுகின்றனர். வட்டமாக நின்று கும்மியாட்டம் ஆடிப் பாடுகின்றனர். பந்தை அடித்துப்பாடி விளையாகின்றனர். எழுவர் அல்லது ஒன்பதின்மராகக் கூடி கையைப் பிணைத்துக் குரவையாடி மகிழ்கின்றனர். வள்ளைப்பாட்டு பாடுகின் றனர். இத்தகைய விளையாட்டுக்களையும் செயல்களையும் கொண்டு ஒவ்வொரு விளையாட்டிற்கும் தக்கவாறு தனித்த சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன.

அதாவது ஊசல், அம்மானை, கும்மி, ஒயில் கும்மி, பந்தடிப்பாட்டு, குரவைப்பாட்டு, வள்ளைப்பாட்டு போன்றவை சிற்றிலக்கிய வகைகளில் தோன்றி ஒரு தனித்த கூறாக உருவாகியுள்ளன. உலா வந்த தலைவனைக் கண்டு காதலுற்ற தலைவி, தலைவனை மீண்டும் காணாமல் காதல் நோயால் வருந்தி தனது ஆற்றாமையைப் புலப்படுத்த உயர்திணை மனிதர்களிடத்தும், அஃறிணைப் பொருள்களிடத்தும் கூறிப் புலம்புவதும், அப்பொருட்களைப் பாட்டுடைத் தலைவனி டத்துத் தூது விடுப்பதுமாக அமைவதைத் தூது இலக்கியங்கள் எனலாகிறது.

உலா வந்த தலைவனிடத்தில் காதல் கொண்ட தலைவி, தன் காதலால் ஆற்றாமைத் துயரில் வருந்துகிறாள். மலைவளம் மிக்க குறிஞ்சி நிலத்தினைச் சேர்ந்த குறப்பெண், அவளைக் கண்டு விரைந்து தலைவனைச் சேருவாள் என்று குறி கூறுகிறாள். தலைவியின் ஆற்றாமை மிகுதியைக் கண்டு குறி கூறும் குறப்பெண் தன்மைகளையும் குறத்தியின் தன்மை களையும் எடுத்துக் கூறும் இலக்கிய வகை குறிவஞ்சி என அழைக்கலாயிற்று. தலைவன் தலைவியைக் கண்டு அவளிடம் ஐம்புல இன்பங்களை அடையுமாறு கனவு காண்கிறான். பின்பு இதனைத் தன் பாங்கனிடம் கூறுகிறான். மகிழ்கிறான். தன் தலைவியைக் காண்பது, கனவில் அவளிடம் இன்பம் துய்ப்பது போன்றவைகளைப்

பாங்கனிடம் கூறி மகிழ்வதுமான செயல்களை இலக்கியத் தன்மையாகப் பெறும் இலக்கிய வகை அநுராக மாலை எனப்படுகிறது. கனவில் இன்பம் கொண்ட பெண்ணைக் காமம் மிகுதியால் மணமுடிக்க விரும்பிய தலைவன் அவளுக்காக மடலேறுகிறான். இதனை உலாமடல் என்னும் இலக்கிய வகையில் காணமுடிகிறது. இவ்வாறாக சிற்றிலக்கியங்கள் உலாவி லிருந்து, குறவஞ்சி, அநுராக மாலை என்று தனக்குள்ளேயே பல்வகை இலக்கியங்களை உள்ளடக்கியும், வேறுபட்டு புதிய வகைமைத் தோற்றத்தையும் கொண்டுள்ளதைக் காண முடிகிறது.

சிற்றிலக்கியங்களிலிருந்து கிளர்ந்தெழுந்த சிற்றிலக்கியங்கள்

தெய்வத்தன்மை மிக்க திருக்கோயில்களைக் களமாகக் கொண்டு கோயில்களில் வீற்றிருக்கும் அருட்கடவுளர்களையே பாடு பொருளாகக் கொண்டு எழுந்த சிற்றிலக்கியங் களே மிகுதியானது. இத்தெய்வங்களில் பெரும்பாண்மையானது மக்களின் நடை முறையோடு கூடிய மனித வரலாற்றைக் கொண்ட கருத்துருக்களையே பாடல்களாகக் கொண்டன. ஒட்டக்கூத்தர், உமாபதி சிவாச் சாரியார், குமரகுருபரர், தாயுமானவர், பட்டினத்தடிகள், சொக்கநாதர், பகழிக்கூத்தர், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, வெள்ளைவாரணர் போன்ற புலவர்கள் சிற்றிலக்கிங்களில் நுட்பமும், இலக்கிய நயமும் பொருந்தப் பாடியுள்ளனர்.

சிற்றிலக்கியங்கள் பண்டைய இலக்கியங்களி லிருந்து கிளர்ந்து எழுந்தவை என்று அறியப்பட்ட போதிலும் சிற்றிலக்கியங் களிலிருந்து கிளர்ந்தெழுந்த சிற்றிலக் கியங்கள் மிகுதியாக உள்ளன. சிற்றிலக் கியங்கள் என்பதே ஒன்றிலிருந்து ஒன்றாக உதித்தெழுவது என்பது பொதுப்பண்பாகிறது. அம்மானை என்னும் விளையாட்டு வகையை அம்மானை என்றும் சிற்றிலக் கியங்களில் குறிப்பிடுவதும் உண்டு. “மகளிர் மூவர் கூடியிருந்து ஆடுவதாக வரும் பொருண்மை இச்சிற்றிலக்கியத்திற்கு உரியது. கலம்பகம் என்னும் பொருளுறுப்புக்களுள் ஒன்றாக அம்மானையும் அமைந்துள்ளது. மேலும் பெண் மக்களைத் தலைவியாக வைத்துப் பாடப்பெறும் பெண்பாற் பிள்ளைத் தமிழில் இறுதியில் அமையும் மூன்று பருவங்களில் ஒன்றாக அம்மனைப் பருவமும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் உலா இலக்கியங்களில் தலைவன் உலா வருமுன்னர் எழுபருவப் பெண்டிரும் விளையாடும் விளையாடல் வகைகளில் ஒன்றாகவும் அம்மானை விளையாடலும் குறிப்பிடப்பட்டுள்ளது.”[25] என்று ந.வீ. செயராமன் குறிப்பிடுகிறார்.

ஊசல் என்ற விளையாட்டும் மகளிர் ஆடும் விளையாட்டுக்களுள் குறிப்பிடத்தக்கது. கலம்பம், பிள்ளைத்தமிழ், உலா ஆகிய இலக்கியங்களில் ஊசல் என்னும் விளை யாட்டு முக்கியத்துவம் பெறுகிறது. ஊசல், அம்மானை, கும்மி, பந்தடிப் பாட்டு, குரவைப் பாட்டு, வள்ளைப்பாட்டு முதலான விளையாட்டுக்கள் உலா இலக்கியத்திலும் மற்றைய சிற்றிலக்கியங்களிலும் குறிப்பிடத் தக்கது. இத்தகைய இலக்கிய வகைகளை வகைப்பிரிவு என்று அடக்கலாம். இலக்கிய வகைகளின் தோற்றத்திற்கு இலக்கிய வகைகளின் கூறுகள் சில வழிவகுக்கின்றன. ஓர் இலக்கிய வகையின் கூறுகள் சிலவற்றில் புதிய வளர்ச்சி எய்துவதும், பிறிதொரு இலக்கிய வகைகளின் கூறுகள் தோன்றியும் இணைந்தும் மற்றொரு கூறுகளுள் உருவா வதும் இயல்பாகிறது. இதனை, வகைப் பிரிவு, வகை இணைவு என்று பகுப்பர்.[26] “கோவை இலக்கியத்திலிருந்து பாடப்பெறும் நானூறு துறைகளிலிருந்து ஒருதுறை மட்டும் பிரிந்து ‘ஒருதுறைக் கோவை’ என்னும் கிளை வகையாக வளர்வதும், தூது இலக்கிய வகையினின்று ‘விறலிவிடு தூது’ எனும் இலக்கிய வகை கிளைப்பதும் வகைப் பிரிவுக்குச் சான்றுகளாகும். வகை இணைவு வகைக்குக் குழமகன் எனும் இலக்கிய வகையைச் சான்று காட்டலாம். பாட்டுடைத் தலைவனைப் பிள்ளைப்பருவத்தானாக எண்ணி உருவகித்துப் பாடுதல் பிள்ளைத் தமிழ் எனும் இலக்கிய வகையாகும்”[27] என்று இலக்கிய வகை இணைவு பற்றி கி.ராசா குறிப்பிடுவது கருதத்தக்கது. வீதியில் உலா வரும் தலைமகனைக் குழவிப் பருவ முடையனாக அமைத்துப் பாடும் இலக்கிய வகை குழமகன் என்று குறிப்பிடப்படும். குழவியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட குழமகன் இலக்கியம் பிள்ளைத்தமிழையும் தூதினையும் ஒத்தது. பிள்ளைத் தமிழில் ஒரு பருவமாகவும்

குழமகன் உள்ளது. இவ்வாறு சிற்றிலக் கியங்கள் வெவ்வேறு இலக்கியங்களிலிருந்து முகிழ்த்ததாகவும், சிற்றிலக்கியத்திற்குள்ளே உருவான சிற்றிலக்கியங்களாகவும் அடை யாளம் காணப்படுகின்றன.

முடிவுரை

சிற்றிலக்கியங்கள் சங்க காலத்திலிருந்தே தோற்றம் பெற்றவை. பல்வேறு இலக்கிய வகைகளையும் மூலக்கூறுகளையும் உள்ளடக் கியவை. இலக்கியப் பண்புகளில் பேரிலக் கியங்களுக்கு நிகரானவை. சமயங்களின் அமைப்பையும் பண்பையும் உள்ளடக் கியவை. இவை அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகிய பல்வேறு கூறுகளில் பாடப்பெற்று இலக்கிய நயம் பெறுகின்றன என்று அறிய முடிகிறது. சிற்றிலக்கியங்களின் தோற்றம் என்பது சங்ககாலம் முதற்கொண்டு இருந்தபோதிலும் அது தற்காலத்திலும் அதே இலக்கியக் கூறுகளையும் தன்மைகளையும் பெற்றுப் புதிதாகத் தோன்றிய வண்ணம் உள்ளன என்பதையும் அறிய முடிகிறது. இத்தகைய வளர்ச்சிப்போக்குகள் குறித்து விரிவான ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

சான்றெண்விளக்கம்

1. கி.ராசா, தொல்காப்பியமும் இலக்கிய வகை வளர்ச்சியும், ப.3.
2. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.3.
3. தொல். பொருள். செய். நூற். 75.
4. ச.வே. சுப்பிரமணியன், இலக்கிய உணர்வுகள், ப. 1-2.
5. ச.வே. சுப்பிரமணியன் (ப.ஆ.), இலக்கியக் கொள்கைகள் (தொகுதி - 1), ப.10.
6. தா. ஈசுவரபிள்ளை, தமிழில் சிற்றிலக்கிய வரலாறு - முதல் பகுதி, ப.18.
7. ந.வீ. செயராமன், சிற்றிலக்கியத் திறனாய்வு, ப.12.
8. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.275.
9. கி.ராசா, தொல்காப்பிய இலக்கிய வகை வளர்ச்சி, ப.2.
10. மு.அருணாச்சலம் பிள்ளை, தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், ப.585.
11. தொல். பொருள். செய். நூற்.113.
12. க.வெள்ளை வாரணர், தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம், ப.948.
13. இறையனார் களவியல் உரை, நூற்.121.
14. தொல். பொருள். பொருளி. நூற்.3.
15. தொல். பொருள். கள. நூற்.10.
16. மேலது, நூற்.11.
17. தொல். பொருள். பொருளி. நூற்.3.
18. தொல். பொருள். கள. நூற்.11.
19. மேலது, நூற்.3.
20. மேலது, நூற்.25.
21. தொல். பொருள். புறத். நூற்.24.
22. மேலது, நூற்.25.
23. மேலது, நூற்.30.
24. மேலது, நூற்.49.
25. ந.வீ.செயராமன், சிற்றிலக்கியத் திறனாய்வு, ப.62.
26. மேலது, ப.149.
27. கி.ராசா. தொல்காப்பியமும், இலக்கிய வகை வளர்ச்சியும், ப.10.

துணைநூற் பட்டியல்

அருணாச்சலம் பிள்ளை, மு. (1994). *தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம்.* மதுரை: பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

இளம்பூரணர், (. (1969). *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* சென்னை: கழக வெளியீடு.

ஈசுவரப்பிள்ளை, த. (2005). *தமிழில் சிற்றிலக்கிய வரலாறு (முதற்பகுதி).* தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்.

சுப்பிரமணியன், ச. &. (1980). *தமிழ் இலக்கியக் கொள்கை.* தரமணி, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சுப்பிரமணியன், ச. (1984). *தமிழ் இலக்கிய வகையும் வடிவும்.* சென்னை: தமிழ்ப் பதிப்பகம்.

செயராமன், ந. (1980). *சிற்றிலக்கியத் திறனாய்வு.* சென்னை: இலக்கியப் பதிப்பகம்.

தமிழண்ணல். (1979). *சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்).* 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

தமிழண்ணல். (1992). *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.* 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

ராசா, க. (1991). *தொல்காப்பியமும் இலக்கிய வகை வளர்ச்சியும்.* A-12, எல்.ஐ.சி. காலணி, திருச்சி: பார்த்திபன் பதிப்பகம்.

வெளியீடு, க. (1953). *இறையனார் களவியல் என்னும் இறையனார்அகப்பொருள்.* சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

வெள்ளைவாரணர், க. (1996). *தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்.* மதுரை: பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

Announcements

The next publication will be released in August 2019. Send their Research articles within the 20th of June. Please, note that, the researcher compulsory follows research methodology and given your address with email Id, Whats up mobile number and Abstract in English script.

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் காலாண்டுக்கு ஒருமுறை மே, ஆகட்டு, நவம்பர், பிப்புருவரி ஆகிய திங்கள்களில் வெளிவரும்.

அருமைத் தமிழ்ச் சொந்தங்களே! ஆய்வு நண்பர்களே! இந்தியாவிலிருந்து வெளிவரும் இனம் //www.inamtamil.com தமிழாய்விதழில் கட்டுரைகள் வெளியிடுவதற்குத் தங்களை அன்புடன் வரவேற்கிறோம். எங்கள் குழு தமிழியல், மானுடம், மொழியியல், சமயம், நாட்டுப்புறவியல், தொல்லியல், இலக்கியம், இலக்கணம், கலை, கணினி தொடர்பான தொழில் நுட்பம் போன்ற துறைசார் ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கும். ஒவ்வொரு கட்டுரைகளும் ஆசிரியர் குழுவினரால் துறைசார் வல்லுநர் குழுவால் மதிப்பீடு செய்யப் பெற்ற பின்னரே இதழில் வெளியிடப் பெறும்.

இவ்விதழ் ஒரு பன்னாட்டு ஆராய்ச்சி இதழ் ஆகும். இவ்விதழின் மூலம் தமிழாய்வுகளை உலகளாவிய வாசிப்புக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பது நோக்கம். எனவே, தங்களின் ஆய்வுச் சிந்தனைகளை அனைவரும் வாசிக்கவும் மேற்கோள் காட்டவும் இவ்விதழ் உறுதுணை நல்கும் என உறுதியளிக்கின்றோம்.

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ் ISSN : 2455-0531 மே 2019 மலர்:5 இதழ்:17 29

மதிப்பிடப்பெற்றது

தொல்லியல் நோக்கில் பண்டைத் தமிழர்களின் அணிகலன்கள்

Tolliyal nōkkil paṇṭait tamiḻarkaḷiṉ aṇikalaṉkaḷ

பா.அருண்ராஜ் | P.Arunraj[5]

Abstract: The many research in various dimensions of history of early Tamils have been undertaken in full swing for more than two hundred years. Sangam literature acted as a only Primary Sources before the Past Century without proper filed visits and Archaeological excavations. They were considered to be much of exaggerations and also heroic poetries. Ancient Tamils various ornaments, such as the forehead ornaments, neck wear ornaments, rings from the evidences of Archaeological excavations in Tamilnadu and from the Sangam Literatures had been discussed elaborately in this article. The ornaments mentioned in Sangam literature and with the so far excavations in Tamilnadu with archaeological evidences were expressed in this article.

Date of submission: 2019-03-14
Date of acceptance: 2019-03-17
Date of Publication: 2019-05-02

Corresponding author's
Name: பொ.அருண்ராஜ்
Email: adhavan.balu@gmail.com

Keywords: Sangam Literature; Archaeology; Early Tamils; Ornaments; Exploration; Excavation; Conch; Shells; Gold; Copper; Terracotta; Carnelian; Quartz; பண்டைத் தமிழர், அலெக்ஸாண்டர் ரீ, அரிக்கமேடு, காவேரிப்பூம்பட்டினம், அழகன்குளம், கொற்கை, கொடுமணல், கரூர், பொருந்தல், கீழடி, பொன், செம்பு, சுடுமண், சங்கு, சிப்பி, தொடி, வளை, கடகம், வளை, கைவந்தி, சங்கு, முத்து, பவளம், பொன், இரத்தினங்கள்.

***

பண்டைத் தமிழர்களின் வரலாறு தொடர்பான ஆய்வுகள் பல பரிமாணங்களில் கடந்த இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக வெளிவந்த வண்ணம் உள்ளன. சென்ற நூறாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் பெரிய களஆய்வோ, தொல்லியல் அகழாய்வோ இல்லாமல் சங்க இலக்கியங்களை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு ஆய்வு செய்துவந்த நிலையில், சங்கப் பாடல்கள் உணர்ச்சிக் குவியல்களாகவும், வீரநிலைக் கதைப்பாடல்களாகவும் பேசப்பட்டு வந்தன. 1876ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆதிச்சநல்லூரில் ஜாகர் என்பார் அகழ்வாய்வை மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து 1903இல் எம்.லோனிசு லாபி அகழாய்வு செய்தார். 1899-1906இல் அலெக்ஸாண்டர் ரீ ஒரு விரிவான அகழாய்வை மேற்கொண்டதன் மூலம் இலக்கியங்கள் குறிப்பிடும் செய்திகள், பண்டைத் தமிழரின் நாகரீகங்கள் ஆகியவற்றைத் தொல்லியல் சான்றுகளுடன் நிரூபிக்க முடிந்தன. அதன் பின்னர்த் தமிழகத்தில் அரிக்கமேடு, காவேரிப் பூம்பட்டினம், அழகன்குளம், கொற்கை, கொடுமணல், கரூர், பொருந்தல், கீழடி மற்றும் கேரளத்தில் பட்டனம் போன்ற இடங்களில் நடைபெற்ற தொல்லியல் அகழாய்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும்.

---

5 விரிவுரையாளர், வரலாறு மற்றும் சுற்றுலாத்துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். adhavan.balu@gmail.com

இக்கட்டுரை இதுவரை தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வையும் சங்க இலக்கியம் குறிப்பிடும் பண்டைத் தமிழர்களின் அணிகலன்ளையும் ஒப்பிட்டுத் தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் விளக்க முற்படுகிறது.

மனிதன் உறுப்புகளில் முக்கியப் பங்கு வகிப்பது நெற்றி. சங்க இலக்கியங்கள் நெற்றியை நுதல் என்று பதிவு செய்கிறது. சங்ககால மகளிர் நெற்றியில் அணியக்கூடிய அணிகலன்களை நுதலணி என்று அழைத்தனர். இவ்வணியை நெற்றிச்சுட்டி[6] (An ornament of the forehead) என்று அழைப்பதும் வழக்கம். நெற்றிப்பட்டம், திலகம் ஆகிய நுதலணிகளைப் பெண்கள் அணிந்துள்ளனர். இதனை திருமுருகாற்றுப் படை

'திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்' (முரு.24)

எனப் பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களைச் சூரர மகளிர் பலரும் ஒன்றுகூடி அணிந்து நின்றதனைக் கூறுகிறது. கலித்தொகை (92:35-36, 97:11) நுதலணி பற்றிக் குறிப்பிடுகிறது. ஆதிச்சநல்லூரில் அலெக்ஸாண்டர் ரீ ஆய்வு செய்தபோது இருபத்துமூன்று பொன்நெற்றிப் பட்டங் களைக் கண்டறிந்தார். பெரும்பான்மை யானவை முட்டை வடிவத்தில் சிறுசிறு புள்ளிகளைக் கொண்டு காணப்பட்டன. நெற்றிப் பட்டங்கள் இரண்டு கிராம் முதல் நாற்பத்து ஏழு கிராம் எடை கொண்டதாகக் காணப்பட்டன.

காதணிகளைத் தொடக்க காலத்தில் பூ, ஓலைகளில் பயன்படுத்தினர். பிற்காலத்தில் பொன், செம்பு, வெள்ளி, சங்கு, மணிகள் போன்றவற்றில் பயன்படுத்தலாயினர். சங்க மகளிர் காதணியாகப் பொலங்குழை, ஒண்குழை, கங்குழை, சிறுகுழை, மகரக் குழை, கொடுங்குழை, தோடு ஆகியவற்றை அணிந்தனர் (பதி.86:11, பெரு.161,312, மது.709). பெண்கள் காதில் பூங்குழை, பொலங்குழை, சிறுகுழை, ஒண்குழை ஆகிய அணிகள் அணிந்துள்ளனர். மதுரைக் காஞ்சியில் மதுரை நகரச் செல்வ மகளிர் ஒண்குழையையும், தோட்டையும், பாண்டி மாதேவி மகரமீன் வடிவுடைய மகரக்குழை அணிந்ததையும் விவரிக்கிறது. தமிழகத்தில் காதணிகள் பற்றி அகழாய்வுச் சான்றுகள் 1950க்குப் பிறகு நான்கு இடங்களில் கிடைத்ததற்கான குறிப்புகள் உள்ளன. 1987-1988, 1988-1989 ஆகிய ஆண்டுகளில் கடலூர் மாவட்டத்தில் குடிக்காட்டில் அகழாய்வில் தலா ஒரு காதணியும்,[7] 2006-2007 ஆண்டில் விழுப்புரம் மாவட்டத்தில் மேலச்சித்தாம்பூர் எனும் ஊரில் நடைபெற்ற அகழாய்வில் ஒரு காதணியும்,[8] 2010-2011 ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆர்பாக்கம் அகழாய்வில் ஒரு காதணியும் கிடைத்துள்ளன.[9] இதுவரை தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் பொன், செம்பு, சுடுமண், சங்கு, சிப்பி ஆகிய பொருட்களில் கிடைத்துள்ளன என்பதும் நோக்கத்தக்க தாகும்.

சங்ககால மக்கள் கைகளில் அணிகள் அணியும் பழக்கத்தினைக் கொண்டவர்கள் ஆவர். தொடி, வளை, கடகம், கைவந்தி ஆகிய பெயர்களில் கையணிகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.[10] அணிகள் சங்கு, முத்து, பவளம், பொன், இரத்தினங்கள் ஆகிய வற்றால் வளையல்கள் செய்ப்பட்டன. பண்டைய இந்தியாவில் சிந்துவெளி மக்கள் சங்கினாலான வளையல்கள், சரமணிகள், தொங்கணிகள் ஆகியவற்றைப் பயன்படுத் தினர் என்பதற்கு ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பெற்ற அகழாய் வுகளில் தொல்பொருள்கள் கிடைத்துள் ளதைச் சான்றாகக் கொள்ளப்படுகிறது. மகளிர் அணிந்த வளையல்களில் எல்வளை, எரிவளை, இலங்குவளை, வரிவளை, செறி வளை, நிரைவளை, சில்வளை, ஆய்வளை, வரிவளை எனப் பல வகைகள் காணப்படுகின்றன.[11] சங்க இலக்கியங்களில் கையணிகளில் வளையல்களே முக்கிய இடம் பெறுகின்றன. சங்கப்பாடல்கள் வளையல்கள் பற்றியும், சங்க காலத்திய மகளிர் வளையல் அணியும் விதம் பற்றியும், அறுக்கப்பட்ட

[6].Tamil Lexicon, Vol.IV, p.2321

[7] IAR.1987-1988, p.103, 1988-1989, p.80.

[8] IAR.2006-2007, p.120.

[9] IAR.2010-2011, p.90.

[10] க.திலகவதி, சங்ககால மகளிர் வாழ்வியல், ப.352

[11] ந.அதியமான், சங்கு, ப.68

சங்கு வளையல் கண்போல் உள்ளதையும் உவமையாகக் கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது. அக்குறிப்புகள் வருமாறு: புறம்.24:9, 53:3, 60:5, 64:2, 90:1, 103:4, 135:4, 140:3, 237:11, 253:5, 254:4, 344:2, பதி.23:23, 27:7, 29:2, 40:21, 57:6, 78:3, பெரு.304, மது.316, மலை.46,519.

சங்க இலக்கியப் புறப்பாடல்கள் வளை யலணி பற்றிய குறிப்புகளைத் தருகின்றன. சங்க இலக்கியத்தில் புறப்பாடல்களை விட அகப்பாடல்களில் அதிக அளவில் வளையல் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் பேசப்படுகின்றன. இவற்றில் குறிப்பிடும் வரிவளை என்பது வளையல்களில் உள்ள வேலைப்பாடுகளைக் கொண்ட வளையல் ஆகும்.

சங்க காலத்தில் வேளாளப் பார்ப்பான்[12] என்போர் சங்கறுக்கும் தொழிலில் ஈடுபட்டனர் என்பதை அகநானூறு (24:1) காட்டுகிறது. இவர்கள் யாகம் செய்யாத ஊர்ப்பார்ப்பான் என அழைக்கப் பட்டுள்ளனர். "வேளாண் பார்ப்பான் கூரிய வாள் அரத்தினால் அறுத்தெடுத்த வளையல் போக மீதி சங்கின் தலையைப் போன்று அரும்புகள் முன்பனியின் கடை நாளில் மலர்ந்தன" என்பதிலிருந்து இவ்வகைப் பார்ப்பான் என்போர் சங்கறுக்கும் தொழில் ஈடுபட்டனர் எனத் தெரியவருகிறது. சங்கு வளையல் செய்வோரை 'கோடு போல் கடையினர்' எனக் குறிப்பிடுகிறது மதுரைக்காஞ்சி(மது.511). சங்க இலக்கியத்தில் சங்கு 'கோடு' என்றே குறிப்பிடப்படுகிறது.

பதி.46:11-13, 50:22-26, மது.401,511, அகம்.23:6, 162:1-3, குறு.11:1,2, 31:4-6, 356:1,2, 365:1,2, நற்.159:3,4, 172:7-8, 203:2-5, 372:5-6, ஐங்.191:1, 192:1, 194:1,2, 196:1 ஆகிய பதிவுகளில் சங்கு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வலம்புரி உழுத வார்மணல் வலம்புரிச் சங்கினை ஐங்குறுநூறு (193:1) குறிப்பிடுகிறது. நெய்தல் நிலப் பரதவர்கள் கடலில் முத்து, சங்கெடுக்கச் செல்லும்போது அச்சம் தரும் சுறாக்கள் வராமல் தடுப்பதற்குரிய மந்திரம் கற்றிருந்தனர் என்று வி.கனகசபை குறிப்பிடுகிறார்.[13] வெனிஸ் நாட்டுப் பயணியான மார்க்கோபோலோ சுமார் பொ.ஆ.1293ஆம் ஆண்டு தென்னிந்தி யாவின் வருகையின் போது பாண்டியர்கள் பற்றியும் அவர்கள் நாட்டில் முத்தெடுக்கும் தொழில் பற்றியும் குறிப்பிடுகிறார். பாண்டிய நாட்டில் முத்தெடுக்கச் செல்லும் தொழிலா ளர்கள் நீரில் மூழ்கி முத்துச் சிப்பிகளைத் தேடி எடுக்கின்றனர். அப்பொழுது ஆட்களைக் கொல்லும் பெருமீன்கள் கடிக்காத வண்ணம் தங்களுடைய மந்திர சக்தியால் அவற்றைக் கட்டுப்படுத்தும் மந்திரவாதிகளுக்கு இருபதில் ஒரு பங்கு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.[14]

தமிழகத்தில் சங்ககால மக்கள் சங்கு பயன்படுத்தியதற்கு முன்பாகவே வட இந்தியாவில் மொகஞ்சதாரோவில் சங்கினா லான வளையல்கள், மோதிரங்கள், மணிகள், தொங்கணிகள், துளையிடப்பட்ட வட்டத் தகடுகள் போன்றவை கிடைத்துள்ளன.[15] தக்காண பீடபூமிப் பகுதியில் வாழும் சௌராஷ்டிர மக்கள் இன்றளவும் சங்கு மற்றும் சிப்பிகளில் அலங்கார வேலைப் பாடுகள் கொண்ட அணிகலன்களை உருவாக்கு கின்றனர் என்று A.L.பாஷ்யம் குறிப்பிடு கிறார்.[16] மோதிரங்கள் சங்கின் சுருள் பகுதியிலும், சுருளச்சில் துளையிடப்பட்ட உருளைகள், உருளை மணிகள் ஆகியனவும் குழி, குமிழ் வட்டத்தின் தகடுகள், பெரிய வட்டத்தகடுகள் ஆபரணங்களாகப் பயன் படுத்தியிருக்கலாம் என்று ந.அதியமான் களஆய்வுகள் மேற்கொண்டு பதிவு செய்துள்ளார்.[17] தாழ்நிலை வகுப்பினரிடையே சங்கு வளையல், வெண்மணி, நீலமணி களாலான கழுத்துமாலை, முதலிய மலிவான

[12] Tamil Lexicon, Vol.VI., P.3843

[13] வி.கனகசபை, 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப.86

[14] K.A.Nilakanda Sasthiri, Foreign Notices of South India, p.163

[15] Rama Shankar Tripathi, History of Ancient India, p.19

[16] A.L.Basham, The Wonder that was India, p.19

[17] ந.அதியமான், சங்கு,ப.67

பொருள்களை அணிந்தனர் என்று வி.கனக சபை குறிப்பிடுகிறார்.[18] இக்கருத்தை உற்று நோக்கும்போது பொருளாதாரம் குறைந் தவர்களிடம் இப்பயன்பாடு இருந்திருக்குமே தவிர தாழ்நிலை எனக் கருதப்பெறும் மக்கள் மட்டும் சங்கு அணிகளைப் பயன்படுத்தி யிருந்தனர் என்று குறிப்பிட முடியாது.

சிந்துசமவெளி, கொடுமணல் ஆகிய பகுதிகள் பன்னாட்டளவில் வணிகம் செய்யக் கூடிய நகரமாகும். அப்பகுதியில் சங்கு வளையல் முக்கிய வியாபாரமாக இருந் திருக்கிறது என்பதையும் இங்குச் செய்யப் பட்ட அகழாய்வில் சங்கறுக்கும் தொழிற் சாலை இருந்திருக்கிறது என்பதையும் அறிவதன் மூலம் அனைத்து மக்களும் சங்கு, சிப்பி அணிகலன்கள் அணிந்திருக்கின்றனர் என்பது உறுதியாகின்றது. எனவே, தாழ்நிலை மக்கள்தான் சங்கு அணியைப் பயன் படுத்துவர் எனும் கருத்துப் பிழைபடு கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த ஆதிச்சநல்லூர் அகழாய்வில் சங்குப் பதக் கங்கள் கிடைத்தன. இவை காதணியாகவோ கழுத்தணியாகவோ இருந்திருக்கலாம். சங்க காலத் துறைமுக நகரங்களான அரிக்கமேடு, அழகன்குளம், கொற்கை, மந்திரிப்பட்டினம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய் விலும், வணிக நகரங்களான சானூர், உறையூர், திருக்காம்புலியூர், அழகரை, கொடு மணல் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளிலும் சங்கு வளையல்கள், மணிகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. திருக்காம்புலியூர் அகழாய்வில் கிடைத்த சங்கு சிவப்புநிற வண்ணம் கலந்து காணப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டம், வேம்பக்கோட்டை என்னும் இடத்தில் மிகப் பெரிய சங்குத் தொழிற்சாலை இருந்திருந் ததைக் களஆய்வின் மூலம் எம்.ராஜேஷ் மற்றும் ஆர்.பாலசந்திரன் ஆகியோர் கண்டறிந் தனர்.[19]

இவ்வாய்வு தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் பெரும்பான்மையான இடங் களில் வேலைப்பாடுகள் கொண்ட வளையல்கள் அதிக அளவில் கிடைத்துள் ளமையைக் குறிப்பிடுகிறது. சங்க காலத்தில் மகளிர் பெரும்பாலும் சங்கு வளையல் களையே அணிந்துள்ளனர் என்பதற்குத் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடைப்பெற்ற அகழாய்வுகள் வெளிப்படுத்து கின்றன (அட்டவணை, காண்க : 1).

அழகுக்காக மகளிரும், ஆடவரும் விரலணியை அணிந்துள்ளனர். விரல்களில் அணிகள் அணிவது பண்டைக் காலம் தொட்டு வழக்கத்தில் இருந்து வருகிறது. சங்ககாலத்தில் விரலணிகள், மோசை, செங்கேழ் விளக்கம், மோதிரம், விரலணி, ஆழி என்னும் பெயர்களில் அழைக்கப்பட்டு வந்தன. கலித்தொகை (84:23) மோதிரம் எனவும், நற்றிணை (188:3-4) மோசை என்றும், நெடுநல்வாடை (143-144) செங்கேழ் விளக்கம் எனவும் விரலணி பற்றிக் குறிப்பிடுகின்றன. பாண்டியன் நெடுஞ் செழியன் தேவி முடக்கென்னம் மோதிரத் தையும், அவள் கணவன் பொன்னால் செய்யப்பட்டுப் பொலிவுமிக்க மணிகள் பதிக்கப்பெற்ற மோதிரத்தையும் அணிந்திருந் தமையை மதுரைக்காஞ்சியில் காணமுடி கிறது (மது.719-720). தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து பல்வேறு இடங்களில் மோதிரங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் முத்திரை மோதிரங்களில் குதிரை, சேவல், மீன், பெருக்கற் குறியீடு, ஸ்வஸ்திக் ஆகியவையும் காணப்படுகின்றன. இலச் சினை பொறித்த மிதுனம், சாரட்டு, ரோமானியக் கடவுள், ரோமானியப் பெண், சிங்கம், சிங்க மனிதன், மகரமீன், குதிரை, சேவல் போன்ற உருவங்கள் பொறித்த மோதிரங்கள் கரூர் அருகே அமராவதி ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் அதிக அளவில் மோதிரங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.[20] தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புள்ள

[18] வி.கனகசபை, 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப.161

[19] ந.அதியமான், சங்கு, ப.67

[20] ஆறுமுக சீதாராமன், சங்கர ராமன், தமிழக முத்திரைகள் மோதிரங்கள், ப.159-168

மோதிரங்கள், தமிழகத்தில் கிடைத்திருக் கின்றன. பெருங்கற்காலம் தொடங்கி மோதிரம் அணியும் பழக்கம் இன்றுவரையில் தமிழகத்தில் மரபுத் தொடர்ச்சியாகவே இருந்து வருகிறது (அட்டவணை காண்க : 2).

சங்ககால மக்கள் மணிகளை அணிகலனாக அணிந்துள்ளனர். பலவகைப் பொருள் களிலும், பல வண்ணங்களிலும் மணிகள் அணிந்திருக்கின்றனர். மணிகளில் வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம் என ஒன்பது வகையான மணிகள் இருந்திருக்கின்றன.[21] இவற்றுள் வைரம், முத்து, மரகதம், மாணிக்கம் ஆகிய நான்கும் தலைமணிகளாகவும், நீலம், புட்பராகம், வைடூரியம் என்ற மூன்றும் இடை மணிகளாகவும், பவளம், கோமேதகம் என்னும் இரண்டும் கடைமணிகளாகவும் இருந்தன என்று சொல்லப்படுகிறது. அரசன், அரசியர், செல்வர் ஆகியோர் மணிகளை அணிந்தனர். இவர்களைத் தவிர புலவர், பாணர், கூத்தர், விறலியர் என்போரும், வெற்றிப் பெற்ற வீரர்களும் அரசர் களிடையே பரிசு பெற்று மணிகளை அணிந்தனர். மணி என்னும் சொல் சங்க இலக்கியங்களில் மாலையாகக் கோர்த்து அணிந்து கொள்ளும் அணிகள் என்ற நிலையிலேயே பொருள் கொள்ளப்படுகிறது.

மணி என்ற சொல் இயற்கையாகக் கிடைக்கும் கற்களையே குறிக்கிறது. சங்க இலக்கியங்களில் மணியைக் குறிக்க பளிங்கு (புறம்.137:11, மலை.250, அகம்.56:2, 167:1, 368:10, நற்.92:6, 112:6, கலி.33:3, 35:5), மாணிக்கம் (புறம்.172:7, முல்.63, மது.438, குறி.13, பட்.187, மலை.516, கலி.135:18, பரி.21:57), பவளம் (குறு.198:4, அகம்.5:25, 16:3,66:14, கலி.79:8, 81:1, 103:59), கருமை நிற மணி (புறம்.340:1), மோதிரம் பதிக்கப்பெற்ற மணி (அகம்.386:13), முத்து (நற்றி.208:2, பரி.1:16, 9:10) ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பெற்றுள்ளன. தமிழ கத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் சங்க காலத்திலும் பல்வேறு வகையான மணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகள் மெய்ப்பிக்கின்றன.

சங்ககாலத்தில் சிறந்து விளங்கிய தொழில் களில் மணிகள் செய்யும் தொழில் முக்கிய இடம்பெறுகிறது. தமிழகத்தில் நிகழ்ந்த அகழாய்வுகளில் பெருங்கற்காலப் பண்பாட்டு ஈமச்சின்னங்களில் மணிகளே அதிக அளவில் கிடைத்திருக்கின்றன. சங்ககால மக்கள் மணிகள் பயன்படுத்தியிருப்பதைக் கொடுமணல் அகழாய்வு நன்கு புலப் படுத்தும். சங்காலத்தில் அரிதான மணிகள் வட இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தனர் என கா.இராஜன் குறிப்பிடுகிறார். கொடு மணல் அகழாய்வில் கிடைத்த சூதுபவள மணிகள், அகேட், வைடூரியம் ஆகிய மணிகள் வட நாட்டில் மட்டும் விளைபவை என்ற கருத்தை முன்வைக்கிறார்.[22] சங்க இலக்கியங்களில் காணலாகும் மணி, காசு, காணம் என்ற சொல்லாட்சியை உற்று நோக்குவது அவசியம் என்கிறார் கா.இராஜன். காசு என்பதற்கு இறையனார் களவியல் உரை மணி என்று குறிப்பிடுகிறது. Gem Crystal Bead - மணி[23] எனவும், காணம் என்பதற்குப் பொற்காசு - An ancient gold coin[24] எனவும் தமிழக மக்கள் கையாண் டுள்ளனர் என்பது புலனாகிறது.

சங்ககாலத் தமிழகத்தில் மணிகள் செய்யும் தொழிலுக்குப் பெயர் போன ஊர்கள் இருந்திருப்பதையும், கொடுமணம் என்னும் ஊரை மணி அணி செய்யும் தொழிலுக்குப் புகழ்பெற்று விளங்கியதைப் பதிற்றுப்பத்துக் காட்டுகிறது (பதி.67:1-4, 74:5-6). கொடுமணம் என்ற கொடுமணல் மணிகள் செய்யச் சங்ககாலத்தில் சிறந்த ஊராக இருந்திருக்கின்றது. சங்ககால மக்கள் மணிகள் பயன்படுத்திய விதத்தினை சங்க இலக்கியங்கள் பல்வேறு இடங்களில் பதிவு செய்கின்றன. பொன், மணி, முத்து பவளம் ஆகியவற்றைக் கொண்டு விலைமதிப்புடைய

[21] Tamil Lexicon,Vol.V., p.3040

[22] கா.இராஜன்,தொல்லியல் நோக்கில் சங்ககாலம், ப.119

[23] Tamil Lexicon, Vol.II., p.846

[24] Ibid, Vol.II., p.859

ஆபரணங்களைச் செய்தனர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல் சான்றுகளுடன் தெளிவுப்படுத்துகிறது (புறம்.218:1-5). நீண்ட நாக்கினை உடைய மணி நடுயாமத்தில் ஒலிக்கப்பட்ட செய்தியினைக் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது (முல்.50). தமிழகத்தில் சங்ககால இடங்களான கொடுமணல், கொற்கை, மாங்குளம், தாண்டிக்குடி, அரிக்கமேடு ஆகிய பகுதிகளில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த சூதுபவள மணிகள், அகேட் போன்ற மணிகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அணிகலன்களில் முத்து முக்கியப் பங்கு வகிக்கின்றது. நெய்தல் நிலத்தில் வாழ்ந்த பரதவர்கள் மீன்பிடித் தொழிலோடு முத்து, சங்கெடுக்கும் தொழிலையும் செய்து வந்தனர். சங்ககாலத்தில் மன்னார் வளைகுடாவில் எடுக்கப்பெற்ற முத்துக்கள் வட இந்தியா மற்றும் கிரேக்க, ரோமானிய நாடுகளில் புகழ்பெற்று விளங்கின. தமிழகத்தில் முத்துப்பற்றி முதன்முதலில் மெகஸ்தனீஸ் தன்னுடைய பயணக்குறிப்பில் குறிப்பிடுகிறார்.[25] வடமொழி நூலான அர்த்தசாஸ்திரம், பாலிமொழியில் எழுதப்பட்ட இலங்கை நூலான மகாவம்சம் ஆகிய நூல்களில் முத்துக்கள் பற்றிப் பேசப்படுகின்றன. பெரிப்ளூஸ், ஸ்ட்ராபோ, பிளினி, தாலமி ஆகியோரின் குறிப்புகளில் மன்னார் வளைகுடாப் பகுதிகளில் விளைந்த முத்துகள் பற்றிப் குறிப்பிடப்பட்டுள்ளன.[26] சங்க இலக்கியத்தில் முத்துக்குளிக்கும் தொழில்கள் பற்றிப் பேசப்பட்டுள்ளது. சங்க காலத்தில் முத்துக்குப் பெயர்போன துறைமுகமாகக் கொற்கை விளங்கியது. கடலில் முத்துக்கள் அதிகமாக இருப்பதால் அலைகள் அவற்றை அள்ளிக் கரையில் வீசுவதையும்; கடற்கரை வெண்மணற் பரப்பில் அம்முத்துக்கள் ஒளி வீசியதையும் ஐங்குறுநூறு (185:1-2, 105:1-2) மூலம் அறியமுடிகிறது. ஆழ்கடலில் கிடைக்கும் முத்துக்களைக் கொண்டு வந்து பரதவர்கள் பங்கிட்டுக் கொண்டதை அகநானூறு (அகம்.280:11-14) குறிப்பிடுகிறது. பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகத்தில் முத்துக்குளித்தல் பணியில் ஈடுபட்டிருந்ததைக் கலித்தொகை (131:22), சிறுபாணாற்றுப்படை (56-58) போன்ற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வெளிநாட்டவர் குறிப்பு, இலக்கியங்களில் காணலாகும் செய்திகள் தவிரக் கல்வெட்டுக்களிலும் முத்துக் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன.

பொ.ஆ.மு.2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மாங்குளம் தமிழி(பிராமி) கல்வெட்டில் 'கணிஇ நதஸிரிய் குவ[ன] ... வெள் அறைய் நிகமது காவிதிஇய் காழிதிக அந்தை அஸுதன் பிண உ கொடுபிதோன்' என்று முத்து வணிகம் செய்வோர் பற்றிக் குறிப்பு உள்ளது. இக்கல்வெட்டில் 'காழ்' என்பதை முத்து என்றும் 'அதிக' என்பதை அதிகாரி என்றும், வெள்ளரையைச் சார்ந்த வணிகனான முத்துக்குளித்தலின் கண்காணிப்பாளனைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் குறிப்பிடுகிறார்.[27] சங்க இலக்கியத்தில் முத்துக்குளித்தல் பற்றிய செய்திகள் குறைந்த அளவே காணப்படுகின்றன. இருப்பினும் சங்ககாலத்தில் பாண்டிய நாட்டுத் துறைமுகமான கொற்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியான முத்துப் பற்றி வெளிநாட்டவர் குறிப்புகளிலிருந்து அறியமுடிகின்றது.

பண்டைய காலத்தில், பொன் என்பது ஐம்பொன்னைக் குறித்தது. தற்காலத்தில் பொன் என்பது தங்கத்தை மட்டுமே குறிக்கிறது. பொன்தொழிலில் ஈடுபட்டவர்கள் பொற்கொல்லர் என அழைக்கபட்டனர். இலக்கியங்களில் பொன்வேலை பற்றியும், பொற்கொல்லர் பற்றியும் பேசப்படுகிறது. பொன் நான்கு வகைப்படும். சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் ஆகியவை யாகும்.[28] இந்நான்கில் சாதரூபம் தெய்வத் தன்மை கொண்டது, சிவபெருமானிடமிருந்து

[25] K.A.Nilakanta Sastri, Foreign Notices of South India, p.41

[26] N.Athiyaman, Pearl and Chank Diving of South Indian Coast, pp.24-25

[27] Iravatham Mahadevan, Early Tamil Epigraphy, p.122

[28] த.சாமிநாதன், சங்க காலத் தொழில் நுட்பம், ப.105

பெறப்பட்டது என்பர். புறநானூற்றில் காட்டிலிருந்து பெறப்பட்ட பொன் பற்றிப் பேசப்பட்டுள்ளது (புறம்.377:16-17). சிவந்த நிறமுடைய கிளிச்சிறை என்ற பொன்னினால் இயற்றிய பாவையை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது (மது.410). திருமுருகாற்றுப் படையில் சம்பு என்ற நதிக்கரையின் இருமருங்கிலும் நாவல் மரங்கள் இருப்பதால் அதன் கனிகள் நீரில் விழுந்தது. அவை பொன் ஆதலின் சாம்பூதநம் என்ற பெயர் பெற்றதைச் சுட்டுகிறது (முரு.18). பொன்னால் செய்யப்பட்ட கலத்தில் கள் உண்ணப்பட்ட செய்தியை அறியமுடிகிறது (பொரு.84-88). பாண்டியன் நெடுஞ்செழியன் பொன்னால் செய்த மாலையை அணிந்திருந் தான் என்ற செய்தியை அறியமுடிகிறது (பொரு.156-157). தன்னிடம் வந்தவர் களுக்குப் பொன்னாற் செய்த தாமரைப் பூவைச் சூட்டிய, பல அணிகலன்களை வேந்தன் வழங்கிய செய்தியினை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம் (மது.103-104). பண்டைத் தமிழர் பொன் பற்றி அறிந்து இருந்ததும் அவர்கள் பொன்னின் நிறத்தை மகளிரின் நிறத்துக்கு ஒப்பிட்டுக் கூறிய தையும் அறியமுடிகின்றது (மது.410). பண்டைக் காலத்தில் பூ வேலைப்பாடமைந்த ஆடைகளைப் பொன்னிட்ட உடை வாளொடு சேர்த்துக் கட்டி இருந்தனர் (மது.433-434).

ஒலிக்கக்கூடிய மணிகளைக் கொண்டு பொன்னால் செய்யப்பட்ட காற்சிலம்பு பற்றிய செய்தியினையும், பொன்னை நெருப்பிலிட்டுப் பல அணிகலன்கள் செய்தனர் என்ற குறிப்பையும் காணலாம் (மது.443-445). பொன்னைச் சுட்டுப் பல அணிகலன்கள் செய்வதும் இத்தகைய பொன்னால் ஆன ஆபரணங்கள் செய்பவர்களைப் பண்டைக் காலத்தில் தட்டார்கள் என்றும் அழைத்தனர். பொன்னின் தரத்தை மதிப்பிடுதலும் பண்டைக் காலத்திலிருந்துள்ளது என்ப தையும் இவர்களைப் பொன் வாணிகரென்று அழைக்கப்பட்டதையும் மது.512-513 எனும் இப்பாடல் வாயிலாக அறியலாம். பொன்னால் செய்யப்பட்ட தொடியினையும், பூணினையும் மகளிர் அணிந்திருந்தனர் என்ற செய்தியை அறியலாம் (மது.579). திருமால் பொன்னால் செய்த மாலையினை அணிந்த செய்தியினைக் காண இயலுகிறது (மது.590-591).

பொன்னாற் செய்த தொடியினை அணிந்து புதல்வர்கள் விளையாடினர் (பட்.295). பரிசிலர்க்குப் பொன்னால் செய்த தாமரை மலரையும், விறலியர்களுக்குப் பல்வேறு அணிகலன்களையும் கொடுத்தனர் (மலை. 569-570). புதல்வர்கள் காலில் பொன் அணிந்திருந்தனர் (பட்.24). இரும்பு மட்டுமல்லாது பொன்னால் ஆன பல பொருள்களையும் செய்திருந்தனர். பண்டைக் காலத்தில் பொன்கம்பி செய்ததை உவமைவழி அறியலாம் (சிறு.34). பொற்கம்பி யானது முறுக்கடங்கியது போன்ற நரம்பின் ஓசை என்று பொற்கம்பியின் பயன்பாடு பண்டையோரிடத்தில் இருந்ததைச் சிறுபா ணாற்றுப்படைவழிக் காணலாம். பொன் அணிகலன் கொண்டு குதிரைகளை அழகுபடுத்திய செய்தியைக் காட்டுகிறது (மலை.574). பொன்னாற் செய்த தாமரை மலரைப் பண்டைக்காலத்து மன்னர்கள் கலைவாணர்க்குப் பரிசாக அளித்தல் மரபு (மலை.568-570, புறம்.11:17-18, 29:1-5, பதி.88, பொரு.159-162, பெரு.485-486). பொன்னால் தாமரைமலர் சூடியமையும் பொன்னாலான பொருள்கள் செய்து பயன்படுத்தியதையும் அறிய முடிகின்றது.

சங்ககாலத்தில் பொன்தொழிலைப் போன்று செம்புத் தொழிலும் சிறப்புற்று இருந்தது. சங்க இலக்கியங்களில் செம்புத் தொழில் செய்வோரை 'செம்பு செய்யும் கம்மியர்' என்று குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியங்களில் ஒக்கும் மதிலையுடைய செம்மல் மூதூர் (புறம்.37:11), செம்பாற் புனைந்து செய்தாலொத்த நெடிய மதிலை யுடைய துவராபதி (புறம்.201:9,10), கோயிலிடத்துச் செம்பாற் செய்தாலொத்த செவ்விய சுவர்களில் சித்திரம் எழுதப்பட்டது (மது.484, 485). செம்பு நிறுக்கப்பட்டதனை வாங்கிக் கொள்வோரும் பிறரும் மதுரை அங்காடியில் திரண்டு நின்றனர் (மது.514-518) எனப் புறப்பாடல்களில் சங்ககாலத்தில் மூதூரின் மதில்கள் செம்பால் செய்யப்பட்டது என்றும், செம்பாலான நெடிய மதிலை யுடைது என்றும், மதுரை மாநகரில் செம்பு

நிறுக்கப்பட்டு மக்கள் வாங்கியதைப் பற்றி அறியமுடிகிறது. தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் செம்பிலான அணிலன்கள், கருவிகள், பயன்பாட்டுப் பொருள்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் செம்பிலானவை என்பது குறிப்பிடத்தக்காகும். இவற்றில் முத்திரை நாணயங்கள், பெயர் பொறித்த நாணயங்கள் கிடைத்துள்ளன. செம்பை உருக்கி நாணய மாகவும், நாணயத்தில் பெயர்களை வடிக்கும் திறன் கொண்ட செம்பு செய்யும் கம்மியர்கள் இருந்துள்ளனர் என்பதிலிருந்து செம்புத்தொழில் சிறப்புற்றிருந்ததை அறிய முடிகிறது.

இரும்பு, செம்பு, தங்கம் முதலியவற்றைக் கொண்டு பல நுட்பமான பொருள்களைச் செய்து பயன்படுத்தியமை தெரியவருகிறது. இவை மூலம் சங்ககாலத் தொழில்நுட்ப வளர்ச்சி பண்டைத் தமிழகத்தில் நிலையாய் இருந்துள்ளதை அறியலாம். மேலும் சங்க காலத்தில் பொன் அதிகளவு பயன்படுத் தப்பட்டது. கள் உண்ணும் கலம், மகளிர் அணியும் தொடி, பூண் ஆகியன பொன்னால் செய்யப்பட்டிருந்தன. பொன்னை இழைக ளாகச் செய்யும் தொழில்நுட்ப வளர்ச்சி யையும் பெற்றிருந்தனர். திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வு பெரும்பாலும் பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்ததாக இருந்தாலும் சங்ககாலத்தின் தொடக்கக் காலமாகக் கொள்வதும் ஏற்புடையதாகும். இங்குக் சூதுபவள மணிகள், வெண்கலத்தால் செய்யபட்ட காதணி, மோதிரம், மகுடங்கள் பல விதமான விலங்கினங்களின் உருவங்கள் (சேவல் போன்று) ஆகியன கிடைத்திருக்கின்றன.[29]

அலெக்ஸாண்டர் ரீ 1899 முதல் 1906 வரையில் மேற்கொண்ட அகழாய்வுகளில் இருபத்து மூன்று பொன்னாலான நெற்றிப் பட்டங்கள் கிடைத்திருக்கின்றன. இவை இரண்டு கிராமிலிருந்து நாற்பத்து ஏழு கிராம் வரை இருக்கின்றன. பெரும்பாலான பட்டங்கள் இருபது கிராம்களுக்கு மேல் எடையுடையதாக உள்ளன. சுமார் ஓர் அங்குலம் உள்ள நீண்ட சதுர வடிவிலான ஆறு பட்டங்கள் மடித்து வைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.[30]

கொடுமணல் அகழாய்வில் அதிக அளவில் பொன் அணிகலன்கள் கிடைத்திருக்கின்றன. பொன்னால் செய்யப்பட்ட மணிகள், வளை மோதிரம், செம்பினால் செய்து பொன்னால் முலாம் பூசப்பட்ட மோதிரம் கிடைத்துள்ளன.[31]

மேற்குறித்த அகழாய்வுச் சான்றுகளும், சங்க இலக்கியச் சான்றுகளும் பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய அணிகலன்கள் பற்றி ஓரளவு இக்கட்டுரை மெய்ப்பிக்க முனைந்திருக்கின்றது. மேலும் இவ்வாய்வு இனிவரும் காலங்களில் நிகழும் தொல்லியல் அகழாய்வு போன்ற ஆய்வுகளுக்கு வலுச் சேர்க்கும் என நம்பலாம்.

2019 (AUGUST)

பதினெட்டாம் பதிப்பு ஆகஸ்ட் 2019இல் வெளிவரும். தங்களது ஆக்கங்களை சூன் 20ஆம் நாளுக்குள் அனுப்பி வைக்கவும். ஆய்வாளர்கள் ஆய்வுநெறியைப் பின்பற்றி ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பவும். தங்களது முகவரியையும் மின்னஞ்சலையும் செல்பேசி எண்ணையும் (புலனம்) குறிப்பிட மறவாதீர். ஆங்கிலத்தில் ஆய்வுச்சுருக்கத்தையும் (ஒரு பத்தி அளவில்) இணைத்து அனுப்பவும். முழுமையான ஆய்வுநெறியை அறிய நம் இணையப் பக்கத்தில் இருக்கும் குறிப்புகளைக் காணவும்.

[29] சு.இராசவேலு, கோ.திருமூர்த்தி, தமிழக தொல்லியல் அகழாய்வுகள், ப.75

[30] அ.இராமசாமி, தொன்மைத் தமிழர் நாகரிக வரலாறு, ப.53

[31] K.Rajan, Early Writing System - A Journey from Graffiti to Brahmi, p.15

அட்டவணை

எண் : 1 - சங்கு வளையல்

வஎண்.	ஊர்	மாவட்டம்	காலம்	நோக்கீடு
1	பல்லவன்மேடு	காஞ்சிபுரம்	…..	IAR.1953-1954
2	மோகனூர்	சேலம்	….	IAR.1961-1962
3	திருக்காம்புலியூர்	திருச்சிராப்பள்ளி	…..	IAR.1961-1962,p.25-28
4	காஞ்சிபுரம்	செங்கல்பட்டு	….	IAR.1962-1963,p.12
5	அப்புக்கல்லு	வேலூர்	பெருங்கற்காலம்	IAR-1976-77,1979-80
6	அப்புக்கல்லு	வேலூர்	சங்ககாலம்	IAR.1976-77,1979-80
7	அரிக்கமேடு	பாண்டிச்சேரி	சங்ககாலம்	AI,.1946Vol.2
8	அழகரை	திருச்சி	சங்ககாலம்	T.V.Mahalngam.1970
9	அழகன்குளம்	இராமநாதபுரம்	சங்ககாலம்	Abdul Majeed,et.al,1992
10	இடையர் பாளையம்	கோயம்புத்தூர்	சங்க காலம்	IAR-1989-90
11	ஈஞ்சார்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
12	உறையூர்	திருச்சி	சங்ககாலம்	K.V.Raman.1998
13	ஒடுகத்தூர்	வேலூர்	புதியகற்காலம், பெருங்கற்காலம்	இராஜவேலு, திருமூர்த்தி 1995:24
14	கம்பத்தப் பொருமாள்கோயில்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
15	கரிசல்குளம்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
16	கரூர்	கரூர்	சங்ககாலம்	Abdul Majeed,et.al,1987

17	கல்லேரிமலை	வேலூர்	பெருங்கற்காலம், புதிய கற்காலம்	இராஜவேலு, திருமூர்த்தி 1995:27
18	கன்னிசேரி	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
19	காரிசேரி	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
20	குட்டூர்	தருமபுரி	சங்ககாலம்	IAR-1982-83
21	குடிகாடு	கடலூர்	சங்ககாலம்	IAR-1987-88,1988-89
22	கொடுமணல்	ஈரோடு	பெருங்கற்காலம்	K.Rajan,1994
23	கொற்கை	திருநெல்வேலி	பெருங்கற்காலம்	Nagasamy,1970
24	கோவலன் பொட்டல்	மதுரை	பெருங்கற்காலம்	இராஜவேலு, திருமூர்த்தி 1995:45
25	சங்கரலிங்கபுரம்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
26	சானூர்	செங்கல்பட்டு	பெருங்கற்காலம்	AI Vol.15
27	சுக்கிரவார்பட்டி	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
28	செங்கமேடு	கடலூர்	சங்ககாலம்	இராஜவேலு, திருமூர்த்தி ,199514-03-2017:134-135
29	செங்குன்றபுரம்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
30	செட்டிக்குறிச்சி	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
31	டிகல்லுப்பட்டி .	மதுரை	பெருங்கற்காலம்	IAR-1976-77 1979-80
32	திருக்காம்புலியூர்	திருச்சி	சங்ககாலம்	இராஜவேலு, திருமூர்த்தி, 1995.135-141

33	திருத்தங்கள்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
34	பாளான்குளம்	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
35	பூம்புகார்	நாகப்பட்டினம்	பெருங்கற்காலம்	Soundarajan,1994
36	பெரும்போர்	செங்கல்பட்டு	பெருங்கற்காலம்	Rea,A.1945
37	பேரூர்	கோயம்புத்தூர்	பெருங்கற்காலம்	IAR-1970-71
38	மல்லபாடி	தருமபுரி	பொருங்கற்காலம்	-
39	வேம்பக்கோட்டை	விருதுநகர்	சங்ககாலம்	எம்.ராஜேஷ், தஞ்சாவூர் ஆர்.பாலசந்திரன், திருத்தங்கள்
40	ஆண்டிப்பட்டி	-	-	ஆண்டிப்பட்டி அகழாய்வு, 2004-2005, ப.43
41	தேரிருவேலி	இராமநாதபுரம்	சங்ககாலம்	Excavation of Tamil Nadu - 1999-2000, p.130

எண் : 2 - விரலணிகள்

வஎ.ண்	ஊர்	மாவட்டம்	உலோகம்	காலம்	எடை (கிராம்)	எழுத்து, சொல் & முத்திரை	நோக்கீடு
1	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு. 5 நூ (பெருங்கற்காலம்)	4.7	பெருங்கற்காலக் குறியீடுகள்	த.மு.மோ, 2016, ப.140
2	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	3.2	மிதுன சிற்பம்	த.மு.மோ, 2016, ப.145
3	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	3.6	மனிதன் தலையில் நந்திபாதம்	த.மு.மோ, 2016, ப.145

4	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	2.8	ஸ்ரீவத்ஸம்	த.மு.மோ, 2016, ப.145
5	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	9.6	பதினொன்று துளைகள் உள்ளன	த.மு.மோ, 2016, ப.146
6	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	12.5	மூன்று துளைகள் உள்ளன	த.மு.மோ, 2016, ப.146
7	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	12.9	பூ வடிவம்	த.மு.மோ, 2016, ப.146
8	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	8.7	எட்டு இதழ் பூ வடிவம்	த.மு.மோ, 2016, ப.146
9	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	10.7	பிறைவடிவம்	த.மு.மோ, 2016, ப.147
10	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	9.1	இரண்டு அவரை விதை போன்ற சின்னம்	த.மு.மோ, 2016, ப.147
11	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	7.8	இரண்டு கண்கள் வாய் போன்ற குறியீடு	த.மு.மோ, 2016, ப.147
12	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	12.6	வட்டத்தில் நான்கு துளைகள்	த.மு.மோ, 2016, ப.147
13	அமராவதி ஆறு	கரூர்	செம்பு	பொ.ஆ.மு.முதல் நூ	9.8	பூ முத்திரை	த.மு.மோ, 2016, ப.148
14	அமராவதி ஆறு	கரூர்	வெண்கலம்	பொ.ஆ.மு.முதல் நூ	12.9	பூ முத்திரை	த.மு.மோ, 2016, ப.148
15	அமராவதி ஆறு	கரூர்	வெண்கலம்	பொ.ஆ.மு.முதல் நூ	9.7	ஸ்ரீவத்ஸம்	த.மு.மோ, 2016, ப.148

16	அமராவதி ஆறு	கரூர்	வெண்கலம்	பொ.ஆ.மு.முதல் நூ	11.7	பூ வடிவம்	த.மு.மோ, 2016, ப.149
17	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	8.9	நான்கு தலைக் கொண்ட பாம்பு உருவம்	த.மு.மோ, 2016, ப.149
18	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	12	நான்கு இதழ் கொண்ட மலர்	த.மு.மோ, 2016, ப.149
19	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	7.1	பிறைவடிவம்	த.மு.மோ, 2016, ப.149
20	அமராவதி ஆறு	கரூர்	வெண்கலம்	பொ.ஆ.மு.முதல் நூ	11.6	பூவிதழ்	த.மு.மோ, 2016, ப.150
21	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	3.72	பிராமி (ஊபாஆன்)	த.மு.மோ, 2016, ப.151
22	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	7.022	பிராமி (தியன் ஓதலன்)	த.மு.மோ, 2016, ப.152
23	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	13.5	பிராமி (தியன்)	த.மு.மோ, 2016, ப.152
24	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	2.2	பிராமி (மிதிரான்)	த.மு.மோ, 2016, ப.153
25	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	5	பிராமி (அந்திகான்)	த.மு.மோ, 2016, ப.153
26	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	2.7	பிராமி (பேர் அவதான்)	த.மு.மோ, 2016, ப.154
27	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	1.3	பிராமி (வெள்ளி சாம்பான்)	த.மு.மோ, 2016, ப.154

28	அமராவதி ஆறு	கரூர்	வெள்ளி	பொ.ஆ.மு.முதல் நூ	740 மிகி.	பிராமி (தித்தன்)	த.மு.மோ, 2016, ப.155
29	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	6.4	பிராமி (பாத்தஸ)	த.மு.மோ, 2016, ப.155
30	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	-	பிராமி - பிராகிருதம் (ஸாதன் ஸாதிவேகி)	த.மு.மோ, 2016, ப.156
31	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	6.4	பிராகிருதம் (சிவதத்தஸ)	த.மு.மோ, 2016, ப.157
32	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ.மு.முதல் நூ	9	பாலி (அ) பிராகிருதம் (ப்ரம்ஹஸஹஸ)	த.மு.மோ, 2016, ப.157
33	அமராவதி ஆறு	கரூர்	பொன்	பொ.ஆ. இரண்டாம் நூ	-	தென்பிராமி (நல்வெளைஸ)	த.மு.மோ, 2016, ப.158

துணைநின்றவை

அதியமான், ந. (2005). சங்கு. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

இராகவையங்கார், ர. (. (1993). குறுந்தொகை. சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கழைக்கழகம்.

இராசவேலு, ச. த. (1995). தமிழ்நாட்டு தொல்லியல் அகழாய்வுகள். சென்னை: பண்பாட்டு வெளியீட்டகம்.

இராமசாமி, அ. (2013). தொன்மைத் தமிழர் நாகரிக வரலாறு. சென்னை: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.,.

இராஜன், க. (2010). தொல்லியல் நோக்கில் சங்ககாலம். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

கனகசபை, வ. (1962). 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். சென்னை: கழக வெளியீடு.

சங்க இலக்கியப் பொருள்களஞ்சியம் தொகுதி1-6,. (1988-2006). தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

சாமிநாதன், த. (2013). சங்க காலத் தொழில் நுட்பம். தஞ்சாவூர்: அன்னம்.

சீதாராமன், ஆ. ச. (2016). தமிழக முத்திரைகள் மோதிரங்கள். தனலட்சுமி பதிப்பகம்: தஞ்சாவூர்.

சோமசுந்தரனார், ப. (. (2008). பத்துப்பாட்டு (பகுதி-1,2). சென்னை: கழகவெளியீடு.

திலகவதி, க. (2001). சங்ககால மகளிர் வாழ்வியல். இறையருள் பதிப்பகம்: திருச்சிராப்பள்ளி.

துரைசாமிப் பிள்ளை ஔவை சு.(உரை.). (1957). ஐங்குறுநூறு. சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கழைக்கழகம்,.

துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. (1950(மு.ப.),1995). பதிற்றுப்பத்து. சென்னை: கழகவெளியீடு.

துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. (1951(மு.ப.), 2007). புறநானூறு (பகுதி-1,2). சென்னை: கழக வெளியீடு.

துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. (1968). நற்றிணை. சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ்.

நச்சினாக்கினியர் (உரை.). (1962). கலித்தொகை. சென்னை: கழகவெளியீடு.

பாலசுந்தரம் பாவலரேறு ச. (உரை.). (2012). தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்). சேலம்: பெரியார் பல்கலைக்கழகம்.

பாலசுந்தரம், ப. ச. (2012). தொல்காப்பியம் (எழுத்ததிகாரம்). சேலம்: பெரியார் பல்கலைக்கழகம்.

வேங்கடசாமிநாட்டார், ந. வ. (1969). அகநானூறு (தொகுதி.1,2,3). சென்னை: கழகவெளியீடு.

Athiyaman, N. (2000). Pearl and Chank Diving of South Indian Coast. Thajavur: Tamil Univesity.

Basham, A. (1991). The Wonder that was India. Rupa.Co.: New Delhi.

Indian Archaeology - A Review. (1903-1904,1987-1988, p.103,1988-1989, 2006-2007, 2010-2011.). New Delhi : Archaeological Survey of India.

Mahadevan, I. (2014). Early Tamil Epigraphy. Chennai: Central Institute of Classical Tamil.

Nilakanta Sastri, K. (2001 (3rd)). Foreign Notices of South India. Madras: University of Madras.

Rajan, K. (2015). Early Writing System - A Journey from Graffiti to Branmi. Madurai: Pandya Nadu Center for Historical Research.

Rama Shankar, T. (n.d.). History of Ancient India.

Tamil Lexicon, Vol.I -VI, . (1980-1982). Chennai: University of Madras.

கால்டுவெல்லும் தெலுங்குமொழிச் சாரியைகளும்

Caldwell and the Telugu language

மதிப்பிடப்பெற்றது

முனைவர் **சி.சாவித்ரி** | Dr.Ch.Savithri[32]

Abstract: *Caldwell, who is widely regarded as the fictional father. He first wrote "A Comparative Grammar of the Dravidian languages" which is on comparing Dravidian languages. In this book, Caldwell described the Telugu language and its grammatical features as one of the languages of Dravidian. The article discussing about the Telugu language caariyai as which he mentioned in his work.*

Date of submission: 2019-03-20
Date of acceptance: 2019-03-30
Date of Publication: 2019-05-02
Corresponding author's
Name: முனைவர் **சி.சாவித்ரி**
Email: savithritamiluniversity@gmail.com

Keywords: *A Comparative Grammar of the Dravidian Languages,* Caldwell Dravidian, கால்டுவெல்; ஒப்பிலக்கண நூல், கோத்த, கோண்டி, கூயி, கூர்க், ராஜ்மஹால், திரவிடியன்.

****

கால்டுவெல் திராவிட மொழிகளை ஒப்பிட்டு முதன்முதலாக A COMPARATIVE GRAMMAR OF THE DRAVIDIAN LANGUAGES என்ற ஒப்பிலக்கண நூலை எழுதினார். இந்நூலில் திராவிட திருந்திய மொழிகளில் ஒன்றான தெலுங்குமொழிச் சிறப்புக்களையும், அதன் இலக்கணக் கூறுகளையும் சான்றுகாட்டி விளக்கியுள்ளார். அவற்றில் கால்டுவெல் குறிப்பிட்டுள்ள தெலுங்குமொழிச் சாரியை களைப் பற்றி இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

சமஸ்கிருதத்தில் உள்ள த்ராவிட, த்ரவிட என்ற சொற்கள் தமிழ்மொழியினையும் தமிழர் களையும் குறிக்கின்றன. 'பஞ்ச திராவிட' என்ற சொல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, குசராத்தி ஆகிய மொழிகள் பேசுபவர்களைக் குறிக்கின்றது. இந்த திராவிட மொழிகளுக்கு முதன் முதலில் ஒப்பிலக்கணத்தை வகுத்தவர் கால்டுவெல்லாக இருந்தாலும் எல்லீஸ் முன்னோடி என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் முழுமையான ஆய்வைக் கொண்டு வந்ததில் பெரும்பங்கு கால்டுவெல்லைச் சாரும்.

திராவிடச் சொல்லில் இருந்து வந்த 'திரவிடியன்' என்ற சொல்லை இம்மொழிக் குடும்பத்திற்குச் சூட்டியுள்ளார் கால்டுவெல். இவரைப் பின்பற்றியே மற்ற மொழி அறிஞர்களும் இச்சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர் (பி.எஸ்.சுப்பிரமணியம், 2006, ப. 3).

கால்டுவெல் காலத்தில் தற்போது நாம் அறிந்த திராவிட மொழிகள் கண்டறியப்படவில்லை. அவர் 12 மொழிகளை மட்டுமே திராவிட மொழிகளாகக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, கொடகு மொழிகளைத் திருந்திய மொழிகளாகவும், கோத்த, கோண்டி, கூயி, கூர்க், ராஜ்மஹால் மொழிகளைத் திருந்தா மொழிகளாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிராஹுயி மொழியில் திராவிட மொழித் தன்மைகள் இருந்தபோதிலும், அம் மொழியைச் சிதியன் மொழியாகக் கருதி அதில் திராவிட மொழித் தன்மைகள் பிராஹுயியில் கலந்துவிட்ட பழங்கால திராவிட இனத்தின் எச்சங்களாக எண்ணி யுள்ளார். இருப்பினும் இம்மொழி திராவிட

[32] இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். savithritamiluniversity@gmail.com

மொழியாகக் கருதப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல் திராவிட மொழி ஒப்பிலக் கணத்தின் நோக்கங்களாகக் கீழ்வரும் நான்கு முக்கிய கருத்தியல்களைக் குறிப்பிடுகிறார் (பி.எஸ்.சுப்பிரமணியம், 2006, ப. 67).

1. கால்டுவெல் அவர் காலத்தில் கண்டறியப்பட்ட 12 மொழிகளை ஒரு மொழிக்குடும்பமாக உறுதி செய்து, அம்மொழிக் குடும்பத்திற்குத் ‘திராவிட மொழிக் குடும்பம்’ என்று பெயரிடுவது (சமஸ்கிருதத்தில் ‘திராவிட’ என்ற சொல் குறிப்பாக தமிழையும், தமிழர்களையும் மட்டுமே குறிப்பதாகும். அதைக் கால்டுவெல் மொழிக் குடும்பத்திற்குப் பயன்படுத்தியது).
2. திராவிட மொழிகளின் சிறப்புகளை விளக்கிக்கூறி திராவிட மொழிகளுக்கும், சமஸ்கிருதத்திற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கி, இவை சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தவை அல்ல என்று உறுதி செய்வது.
3. திராவிட மொழிகளுக்கு முதன்முதலில் மிகவும் விளக்கமான ஒப்பிலக் கணத்தை உருவாக்கியது.
4. சில திராவிடமொழிச் சொற்கள் சமஸ்கிருதத்தில் சேர்ந்துள்ளன என்ற கோட்பாட்டை உருவாக்கி இக்கருத் தியலில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது.

கால்டுவெல்லுக்குப் பிறகு 19ஆம் நூற்றாண்டில் எந்த ஒப்பாய்வுகளும் பெரிதளவில் நடைபெறவில்லை எனலாம். இதற்குக் காரணம் அக்கால இந்திய மக்களுக்கு இவ்விதமான ஆய்வுகளில் திறமையும் ஆர்வமும் இல்லாமல் போனதே. மேலும் கால்டுவெல் கோட்பாடுகள் ‘சமஸ்கிருதம்தான் அனைத்து மொழிகளுக்கும் தாய்’ என்ற பழைய கோட்பாட்டையே நம்பிய அக்காலப் பண்டிதர்களிடம் போய்ச் சேராமை, அக்காலத்தில் அயல் நாட்டவரான மிஷனரிகள், அரசு ஊழியர்கள் ஒப்பீட்டு ஆய்வுகளுக்குப் போகாமல் இருப்பது, இலக்கியம் அற்ற மொழிகளுக்கு சுருக்க இலக்கணங்கள், அகராதிகள் இயற்று வதிலேயே திருப்தி அடைந்தனர்.

கால்டுவெல் கப்பலில் பயணம் மேற்கொண்ட தருணத்தில் சி.பி.பிரௌன் என்பவரைச் சந்தித்தார். சி.பி.பிரௌன் ஆரிய மொழி யையும், தெலுங்கையும் நன்கு அறிந்தவர். அவர் தெலுங்கு மொழிக்கும் இலக்கியத் திற்கும் தொண்டாற்றியவர். அவரிடம்தான் கால்டுவெல் முதன்முதலில் ஆரியம் பயின்றார்.

கால்டுவெல்லும் தெலுங்கு மொழியும்

கால்டுவெல் தமிழ்மொழியின் தனித்தன்மை களை எடுத்துரைப்பதற்காக 1856ல் ‘எ கம்பரேடிவ் க்ராமர் ஆஃப் த்ரவிடியன் லாங்வேஜஸ்’ என்ற நூலை எழுதி இருக்கின்றார். இதற்காக அவர் ‘இடையன் குடி’யில் இருக்கும்போது 1840 - 1872 இடைப்பட்ட காலத்தில் தமிழோடு தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைக் கற்றார் (The Hindu, February 18, 2011. கலைஞர் கருணாநிதி அவர்களின் உரை).

கால்டுவெல், ஓசைநயத்தில் திராவிட மொழிகள் அனைத்திலும் தெலுங்குக்கே முதலிடம் பெறத்தக்க தன்மையுடையது என்றாலும், பழமைப் பெருமையிலும், சொற்பெருக்கத்திலும் திராவிட மொழி வரிசையில் தெலுங்கு, தமிழை அடுத்தே வைக்கப்படும் என்கிறார்.

இவர் தெலுங்கு தொடர்பான கருத்துக்களைத் தெளிவுபெறத் தம் நூலில் பதிவு செய்துள்ளார். அவை கீழ்வருமாறு :

- ஆலந்து நாட்டவர் மொழியிலிருந்து தோன்றியதான ‘ஜெண்டோ’ என்ற பெயரினாலும் ஒரு காலத்தில் இந்தியர் அனைவரையும் குறித்து, நாளடைவில் தெலுங்கரை மட்டுமே குறித்த ‘ஜெண்டில்ஸ்’ என்ற பெயரினாலும் இம்மொழி பெயரிடப்பட்டிருந்தது.

- தெலுங்கு பேசும் மக்களைக் குறிப்பிடும் பகுதிகளாகப் பல இடங்களைக் கூறியபோதிலும் குறிப்பாக உள்நாட்டில் மராட்டிய மொழி புலங்கும் மாவட்டங்களிலும் கிழக்கு எல்லை வரை பரவிய மைசூர் மாநிலம், கடப்பை, கர்னூல் மாவட்டங்கள், ஹைதராபாத், நாகபுரி மாவட்டங்கள், கோண்ட் வனத்தில் ஒரு பகுதி ஆகிய இப்பெருநிலப் பரப்பில் புலங்கியதும் தெலுங்கே.
- மேற்கூறிய நிலப்பரப்பை முகமதியர்கள் 'தெலங்கான' எனப் பெயரிட்டு அழைத்தார்கள்.
- தெலுங்குமொழி, சமஸ்கிருத எழுத்தாளர் களால் 'ஆந்திரம்' அதாவது ஆந்திரர் புலங்கும் மொழி என்று அழைக்கப் பெற்றுள்ளது. பண்டைய காலம்தொட்டே இரண்டு இனங்களாகப் பிரிந்து வாழ்ந்த தெலுங்கர்களில் ஓரினத்தவர் ஆந்திரர். மற்றோர் இனத்தவர் கலிங்கர்.
- ஆதி ஆரியர்க்கு கலிங்கரைக் காட்டிலும் ஆந்திரரே நன்கு அறியப்பட்டிருந்ததாகத் தெரிகின்றது. ஐத்தரேய பிராமணத்தில் ஆந்திர அரச இனத்தவர் இந்தியாவை ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது.
- மெகஸ்தனீஸுக்குப் பிறகு வாழ்ந்த பிளைனியால், ஆந்திரர் ஆற்றல் மிக்க இனத்தவர் எனக் கூறப்பட்டது.
- கங்கையின் வடதிசை நாடொன்றில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டின் ஆசிரியரால் அறியப்பட்ட பல்வேறு இனத்தவருள் ஆந்திரரும் ஒருவராக அக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளது.
- நான் அறிந்தவரையில் வெளிநாட்டவரால் இம்மொழி அறிந்து குறிப்பிடப்பட்ட முதல் நிகழ்ச்சி, கி.பி.ஏழாம் நூற்றாண்டின் இடையில் இந்நாட்டிற்கு வந்து, "ஆந்திரர் வழங்கும் மொழி மத்திய இந்திய மக்கள் வழங்கும் மொழிகளிலிருந்து வேறுபடு கின்றது. ஆனால், அவ்விருவரின் எழுத்துருவங்கள் மட்டும் பெரும்பகுதி ஒன்றாகவே உள்ளன" என்று கூறும் சீன யாத்திரிகன் யுவான்ஸ்வாங்கின் 'நினைவு அலைகள்' என்னும் குறிப்பில் இடம்பெற்றிருப்பதேயாகும். இதனால், தெலுங்கு மொழியின் நாகரிகம், சிறப்பாக ஆந்திரர் வழங்கும் தெலுங்குமொழியின் நாகரிகம், மதிக்கத்தக்க அளவு வளர்ந்திருக்கின்றது என்பது புலனாகும் என்று கால்டுவெல் கூறுகின்றார்.
- தெலுங்கர் தங்கள் மொழிக்கு இட்ட பெயர் 'தெலுகு'. அப்பெயரின் பிற வடிவங்கள் 'தெலுங்கு, தெலிங்க, த்ரிலிங்க, தெனுகு, தெனுங்கு' என்பனவாம்.
- தங்கள் மொழியை உணர்த்தும் பொதுவான பெயராகிய 'தெலுகு' அல்லது 'தெலுங்கு' என்பதற்கு அம்மொழிப் பண்டிதர்கள் விரும்பி மேற்கொள்ளும் பிறப்பியல் முறை, லிங்க வடிவம் அமைந்த மூன்று கோயில்களை எல்லைக் கற்களாகக் கொண்டு விளங்கும் 'த்ரிலிங்க' நாட்டு மொழி என்று பொருள்படும் 'த்ரிலிங்க' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகக் கொள்வதேயாகும். பேராசிரியர் கேம்பெல் அவர்கள் இக்கூற்றை ஏற்றுக் கொள்வார். ஆனால் பேராசிரியர் பிரௌன் அவர்கள் 'இக்கூற்று, இக்காலத்தவர் கண்டுபிடித்த ஒரு வெற்றுரை. 'தெலுகு' என்று அச்சொல்லுக்குத் தெரிந்த வேறுசொல் ஏதும் இல்லை' என்று கூறுகின்றார். கோயில்களின் பெயர்களோடு இணைத்துக் கூறப்பட்ட இக்கொள்கை பெரும்பாலும் பெயர் ஆராய்ச்சிக்கு உட்படாமலே தள்ளப்பட்டது போலும். ஆனால், லிங்கம் எனும் அச்சொல் எப்பொருளில் ஆளப்படுகின்றது என்பது குறித்து ஏதும் கருதாமல் 'த்ரிலிங்கம்' என்பதிலிருந்தே 'தெலுகு' பிறந்தது என்ற முடிவு அறவே கைவிடப்படும். அந்நிலை ஆராய்ந்து காணும் தகுதியுடையதே யாகும் என்று கால்டுவெல் தனக்குக் கிடைத்த தரவுகள் அடிப்படையில் தெலுங்குக்கு இணையான சொற்கள் பற்றிய கருத்தியல்களையும் தெலுங்கு மக்களின் பண்புகளையும் எடுத்துக் கூறியுள்ளார்.

- வடதிசையில் வாழும் மக்கள் என்பதால் தமிழர்கள் இவர்களை 'வடுகர்' என்று அழைத்தார்கள்.
- மேலும், ஐரோப்பியர்கள் மதத்தைப் பரப்புபவர்களாகவும், அரசு ஊழியர் களாகவும் பணிபுரியும் நிலையில் நம் நாட்டுக்கு வந்து அவர்கள் இந்திய மொழிகளைக் கற்றறிந்தனர். தெலுங்கு மொழியைக் கற்றறிந்த மிஷனரிகளும் சிவில் சர்வெண்ட்டுகளும் தெலுங்கு மொழி கற்பது மட்டுமின்றித் தெலுங்கு மொழிக்கு அகராதிகளையும் இலக்கண நூல்களையும், வாசகங்களையும் உருவாக் கினார்கள். இவற்றில் அவர்கள் இயற்றிய இலக்கண நூல்களின் தலைப்புகளை மட்டுமே ஆராய்ந்தால் அவர்கள் தெலுங்கு மொழியை என்னென்ன பெயர்கள் கொண்டு அழைத்தனர் என்பது புலனாகும். சான்றாகச் சில நூல்கள் இங்குக் குறிப்பிடப் படுகின்றன.

1. பெஞ்ஜமின் ஸ்கால்ஜின் 'வரூகியன் க்ராமர்' (1728), க்ரமடிக தெலுகிக (1728) (Grierson.G. A Linguistic survey of India - vol.IV,1967)
2. ஆசிரியர் பெயர் தெரியாத 'எ க்ராமர் ஆஃப் தி 'ஜெந்தோ' லாங்வேஜ்' (1807) (Grierson.G. A Linguistic survey of India - vol.IV,1967. page.581)
3. வில்லியம் கரியின் 'எ க்ராமர் ஆஃப் தி தெலிங்க லாங்வேஜ்' (1814). இவர் தெலுங்கைத் 'தெலிங்க' என்று குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமின்றி இவர் தெலுங்கு மொழி சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்தமொழி என்று கருதுவதால்[1] 'தேசிய'ச் சொற்களின் தோற்றம் தெரிய வருவதில்லை[33] என்று குறிப்பிட்டார். தெலிங்க, கர்னாடக, தமிளம், மலயாளம், சிங்கலீஸ் - இந்த ஐந்து மொழிகளில் தெலுங்கு மிகவும் வளர்ச்சி பெற்ற மொழியாகக் காணப்படுகிறது என்றும் தெலுங்கு மொழி கற்பதற்குக் கடினமாக இருந்த போதிலும் கற்கவேண்டிய மொழிகளில் ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளார். இது வேற்றுமைகளைக் கொண்டுள்ளதால், சரள சுந்தர பொருள் வெளிப்பாட்டிற்கு அனுகூலமாக உள்ளது என்ற தன் கருத்தை வெளிப்படுத்தினார்.
4. எ.டி.கேம்பெல்லின் 'எ க்ராமர் ஆஃப் தெலோகோ லாங்வேஜ்' (1816). இவர் தெலுங்கு இலக்கிய, வழக்கு மொழிகளை நன்கு அறிந்து 'ஆந்திர மொழி சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்தது அன்று' என்று உறுதி செய்து தம் கருத்தை வெளிப்படுத்துவதற்குத் தயங்கினார் (ஜி.லலித, 1996, ப. 245). இதற்குக் காரணம் தெலுங்கு மொழி தத்ஸமச் சொல்மயமாவதே. சமஸ்கிருத எழுத்து வடிவங்கள் தெலுங்கு எழுத்து வடிவங்களைக் காட்டிலும் மாறாக உள்ளதால் தெலுங்கு தனிமொழி என்று அவர் கூறுகின்றார்.
5. வில்லியம் பிரௌனின் 'எ க்ராமர் ஆஃப் தி ஜெந்தோ லாங்வேஜ்' (1817). இவர் தெலுங்குக்கு இணையான சொல்லாக 'ஜெந்து' என்று கூறினார். முதன் முதலில் தெலுங்கை 'ஜெந்து' என்று கூறியவர் இவரேயாவார். கி.பி. 1648-இல் இந்த ஜெந்து சொல் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது[34].

---

[33] "The languages of India are principally from the Sanskrit. The structure of most of the languages in the middle and north of India, is generally in the same, the chief difference in them lies in the termination of the nouns and verbs : and in those deviations form Sanskrit orthography which custom has gradually established in the countries where they are spoken ..." என வில்லியம் கேரியின் தெலுங்கு இலக்கண முன்னுரையில் உள்ளதாக டா.சல்லா ராதாகிருஷ்ண அவர்கள் 'தெலுகு விந்து' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (ஜி.லலித, 1996, ப. 244).

[34] According to Bishop caldwell (a. note furnished by C.P.Brown) Gentoo as a name of the Telugu people was first used

சி.பி.பிரௌன் இது பொருளற்ற சொல் என்று புறக்கணித்து விட்டார்[35].

6. ஜெ.ஸி.மொர்ரிஸிஸ் ‘தெலோகோ செலக்சன்ஸ் வித் ட்ரான்ஸ்லேஷன்ஸ் அண்ட் க்ரமடிகல் அனலைஸிஸ்’ (1823).
7. டபிள்யூ.எம்.ஹாவெல்லின் ‘கம்பெண்டியம் ஆஃப் தி ஆந்திர வியாகரணம்’ (1834).

கால்டுவெல்லின் தெலுங்குச் சாரியைகள்

சாரியை விளக்கம்

திராவிட மொழிகளில் பெயர்ச்சொற்கள் சிலவற்றுக்கு (எண், பதிலிடு பெயர்களுடன்) இரண்டாம் மற்றும் பிற வேற்றுமைகளில் சில உருபுகள் வந்து சேருகின்றன. இவற்றைத் தெலுங்கில் ‘ஔப விபக்திகாலு’ (துணை வேற்றுமைகள்) என்பர்.

இவற்றைக் கால்டுவெல் Inflectional increments என்று கூறியுள்ளார். சிலர் Augments என்று சொல்கின்றனர். தமிழ் இலக்கணங்கள் இவற்றைச் ‘சாரியை’ என்கின்றன. இவற்றுக்குத் தனித்த பொருள் ஏதுமில்லை. ஆனால் இவற்றின் பயன் இவற்றுக்குப் பின்பு வேற்றுமைகள் வரும் என்பதைக் காட்டுவதேயாகும் (பி.எஸ்.சுப்பிரமணியம், 2006, ப. 252).

தொல்காப்பியர் சாரியை வரும் இடத்தைப் பற்றிக் கூறுங்கால்-

“அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே”
(புணார்ச்சி:16)

(சொல்லப்பட்ட உயர்திணை அஃறிணைப் பெயர்களின் பின்பே சாரியைச் சொற்கள் வரும்)

(எ-டு) : ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, பலவற்றுக்கோடு

சாரியை வரும் இடங்களைப் பற்றிக் குறிப்பிட்ட தொல்காப்பியர் சாரியைகளின் வகைகளைப் பற்றி அடுத்த நூற்பாவில் கூறியுள்ளதாவது :

“அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே”
(புணரியல், 17)

இந்நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்ட சாரியைகள் இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக், இக், அன் என்ற ஒன்பதுமாகும்.

தெலுங்கு இலக்கண ஆசிரியர்களும் மொழியியலாளர்களும் இச்சாரியைகளை ‘ஔப விபக்திகாலு’ (துணை வேற்றுமைகள்) என்றே கூறுகின்றனர். தெலுங்குமொழியில் உள்ள சாரியைகள் மூன்று. அவை -இ, -டி, -தி என்பனவாகும். இவையல்லாமல் சில பெயரடிகளுக்கும் இரண்டாம் மற்றும் பிற வேற்றுமைகளுக்கும் வருகின்ற சில எழுத்துகளையும் துணை வேற்றுமைகளாகக் கொள்ளலாம் (பி.எஸ்.சுப்பிரமணியம், 2006, ப. 259).

தமிழ்மொழியில் பெயருக்கு முன்பு வரும் பண்புப் பெயர்களைப் பெயரடை என்றும் வினைக்கு முன்பு வருபனவற்றை வினையடை என்றும் கூறுவது போலத் தெலுங்கு அறிஞர்கள் வேற்றுமைகளுக்கு முன்பு வருவதால் சாரியைகளைத் துணை வேற்றுமைகள் என்கின்றனர்.

தமிழில் சுட்டிய ஒன்பது சாரியைகளையும் தெலுங்கில் சுட்டிய மூன்று சாரியைகளையும் கொண்டு கால்டுவெல் திராவிட மொழிகளில் குறிப்பிட்ட சாரியைகள், அவற்றுக்கு அவர்

in A.D.1648 in Jehan Van Twist’s General Beschrij of vinge van Indian. Printed in Amsterdam- Linguistic Survey of India. Vol.IV, 1967.

[35] It is high time to abolish the absurd name Gentoo which was introduced in the Portuguese” (C.P.Brown, A Grammar of telugu Language, Book First, Page.13)

தரும் விளக்கங்களை எடுத்துரைத்துக் கால்டுவெல் குறிப்பிட்ட சாரியைகளின் பின்புலம் என்னவாக இருந்திருக்கலாம் என்ற கருத்துக்கள் இங்குப் பதிவு செய்யப்படுகின்றன.

கால்டுவெல் குறிப்பிட்டுள்ள சாரியைகள்

கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் சாரியைகளைப் பற்றி விளக்கியுள்ளார் (Caldwell R. , 1856, pp. 321 - 341). அவர் குறிப்பிட்ட சாரியைகளின் வகைகள் மொத்தம் ஏழு. அவை :

1. 'இன்' சாரியை
2. 'அத்', 'அர்' சாரியைகள்
3. 'டி' சாரியை
4. 'அத்து' அல்லது 'அற்று'ச் சாரியை
5. ஈற்று மெய் இரட்டித்து வல்லொலியாதல்
6. 'இ' கரச் சாரியை
7. பன்மைச் சாரியை

என்பனவாம். அவர் குறிப்பிட்டுள்ள ஏழு சாரியைகளுள் 'இன்', 'அத்து' என்ற இரண்டும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. 'டி' 'இ' என்பவை தெலுங்கு மொழிக்குரியவை. ஏனைய நான்கு சாரியைகள் கால்டுவெல் குறிப்பிட்டவை. அவற்றின் விளக்கங்களை இனிக் காண்போம்.

'இன்' சாரியை

கால்டுவெல் திராவிட மொழிகளில் 'இன்' சாரியையைப் பற்றிக் குறிப்பிடும்போது முதலில் "இன்" வடிவம் தமிழ், கன்னட மொழிப் பெயர்ச்சொற்கள் சிலவற்றில் வரும் என்று கூறி இதற்கு ஒப்பாகத் தெலுங்கில் 'நு, நி' என்பவை சாரியைகளாக வரும் என்கின்றார். இவையனைத்தும் இயல்பால் ஒரே தன்மையுடையவை என்று கூறி, 'இன்' சாரியை தமிழில் ஒருமை, பன்மை ஆகிய இரண்டு இடங்களிலும் ஒரேவகையாக வருகின்றது என்றும் இவற்றின் வேலை உருபேற்கும் பெயரடிகளை உருவாக்குவதே என்கிறார்.

'இன்' என்பதன் இனமான தெலுங்குச் சாரியைகளாகிய 'நி, ந' இரண்டும் சில பெயர்ச்சொற்களில் உடைமைப் பொருள் உணர்த்துவதோடு சில பெயர்ச் சொல்லடிகளோடு அவை வேற்றுமை உருபுகள் ஏற்பதன்முன் சாரியைகளாக இணைக்கப்படுவது உண்டு என்று தீனிகி = இதற்கு, குருவுனகு = குருவிற்கு என்பனவற்றைச் சான்று காட்டியுள்ளார். இச்சாரியைகளெல்லாம் தெலுங்கில் ஒருமைப் பெயர்களோடு மட்டுமே இணைக்கப்பெறும். தெலுங்கின் 'நி' சாரியையும் தமிழ், கன்னடத்தில் 'இன்' சாரியையும் பிறப்பால் ஒரே தன்மை என்பதில் சிறிதும் ஐயமில்லை என்று கூறுகின்றார்.

அத், அர் சாரியைகள்

தெலுங்கில் அழகிய பெண் என்ற பொருளில் வரும் 'சொகஸுராலு' (சொகஸு + ர் + ஆலு) என்பது போன்ற சில இடங்களில் பெயரடியாக வரும் பண்புப்பெயரையும், பெண்பால் விகுதியாகிய 'ஆலு' என்பதையும் இணைக்க வரும் ஒலித்துணை கருதிய 'ர'கர மெய்யைக் கன்னட 'அர்' என்பதோடும், அதையொட்டி 'அத்' என்பதோடும் முடிவாக அஃறிணைச் சுட்டோடும் உறவு உடையதாகத் தொடர்புபடுத்தலாம். ஆனால் 'ர'கர மெய்யை உடம்படுமெய்யாகக் கொள்வதே சிறப்பு என்றார் கால்டுவெல். இவர் இவ்வாறு கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. இவர் தெலுங்கு மரபிலக்கணங்களை ஆராய்ந்து பார்த்திருக்கலாம். ஏனெனில் தெலுங்கு இலக்கணங்கள் 'ஆலு' என்பதைப் பெண்ணைக் குறிக்கும் சொல்லாக மட்டுமே பயன்படுத்தியுள்ளன.

சான்று :

'பேதாதி சப்தம்புலகு ஆலு சப்தம்பு பரம்பகுனபுடு கர்மதாரயம்புநந்து ருகாகமம்பகு'
(பாலவியாகரணம்: சந்தி-30)
(பேதா வாய்பாட்டிற்கு ஆலு சொல் சேரும்போது கர்மதாரய (பண்பு) தொகையில் 'ர'கரம் தோன்றும்)

கால்டுவெல் 'ர'கரத்தை உடம்படுமெய்யாகக் கூறுவதற்குக் காரணம்:

அ. தெலுங்கில் 'ஆலு' என்பது 'பெண்' என்பதற்கு நிகரான சொல். பெண்ணின் பண்புகளைக் கூறும் நிலையில் இந்த 'ஆலு' என்ற பெயர்ச்சொல் முன் 'ர'கரம் தோன்றியதால் இதை உடம்படுமெய் என்று கருதியிருக்கலாம்.

ஆ. தெலுங்கு இலக்கணங்கள் 'ஆலு' என்ற சொல்லை வேற்றுமை உருபாகக் கூறவில்லை. ஆகையால் அதற்கு முன் வந்த 'ர'கரம் சாரியையாக எண்ணலாகாது என்று நினைத்திருக்கலாம்.

2. சமஸ்கிருத்தில் இந்த அமைப்பு இருக்கிறது. 'பெண்' என்ற சொல்லுக்கு நிகராகச் சமஸ்கிருத்தில் 'அதிவ' என்ற சொல் உள்ளது. பெண்ணின் பண்புகளைக் குறிக்கும் நிலையில் பெயரடைகளாக வரும் நிலையில் "வ"கரம் உடம்படுமெய்யாக வருகிறது.

சான்று : சௌபாக்கியவதி
குணவதி
சௌந்தர்யவதி

கால்டுவெல் சமஸ்கிருத மொழி அமைப்பினை நன்கு அறிந்தவராக இருப்பதால் சமஸ்கிருதத்தில் 'வ' கரம் உடம்படு மெய்யாகவும், தெலுங்கில் 'ர'கரம் உடம்படுமெய்யாகவும் வந்திருகிறது என்பதை உணர்ந்திருக்கலாம். ஆகையால், 'ர' கரம் சாரியை என்று முதலில் கூறினாலும் பின்னர் அதை உடம்படு மெய்யாகக் கருதினார்.

'டி' சாரியை

தெலுங்கில் அஃறிணை ஒருமைப் பெயர்களின் சாரியையாக, முறையாகவும் பெரும்பான்மை யாகவும் பயன்படுவது 'டி' அல்லது 'தி'. தமிழில் 'அத்து'ச் சாரியை வருவது போல், இச்சாரியை தெலுங்கில் உருப்பெற்றும் பெயரடிகளோடும் இணைக்கப்பெறும் சாரியையாக மட்டுமே இல்லாமல் இடத்தின் தேவைக்கேற்ப ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருளும், பெயரடைப் பொருளும் உணர்த்தும் பெயரடியாகவும் காணப்படுகின்றது.

தெலுங்குமொழிச் சாரியையாகச் சொற்களின் ஈற்றில் வரும் சொல்லுருபு, தொடக்கத்தில் 'தி' என்பதே. 'டி' என்பதன்று. ஈற்றெழுத்து 'ர'கரம் அல்லது 'ல'கரமாக வரும் சொற்களை, 'ட'கரம் ஒன்றே தொடர்வதற்கு இதுவே காரணமாகும். 'த'கரம், 'ர'கரம் அல்லது 'ல'கரத்தின் பின்பு வந்தால், அவ்விரண்டு எழுத்துகளும் அம்மொழி இயல்பை யொட்டி இரண்டறக் கலந்து, 'ட'கரமாக மாறும்.

வல்லினமான 'த'கரம், ஏனைய மெய்யெழுத்துகளோடு இணைக்கப்பெறின் இயல்பாகவே நாவினமாகும். ஆனால் நாவினம் வல்லினமாக மாறுவது அரிது. இத்தெலுங்குச் சாரியை தொடக்கத்தில் 'தி' என்பதே, 'டி' என்பதன்று என்று முடிவு செய்தால் 'அத்' என்ற கன்னடச் சாரியையும் 'அத்து' என்ற தமிழ்ச் சாரியையும் தமிழ், கன்னட அஃறிணைச் சுட்டாகிய 'அது' என்பதோடு தொடர்புபடுத்துவதைப் போன்றே, 'தி' என்ற இத்தெலுங்குச் சாரியையும் அம் மொழி அஃறிணைச் சுட்டாகி 'அதி' என்ப தோடு தொடர்புபடுத்துவதும் பொருந்தும்.

ஈற்றுமெய் இரட்டித்து வல்லொலியாதல்

தமிழ்ப் பெயர்ச்சொற்கள் 'டு'வையும் 'று'வையும் ஈறுகளாகக் கொண்டு வேற்றுமை யுருபேற்க அவ்வீறு 'ட'கரமும், 'ற'கரமும் இரட்டிக்கப்பெறும் என்கிறார் கால்டுவெல்.

சான்று :

காடு - காட்டில்
ஆறு - ஆற்றில்

தெலுங்கில் இவ்வினப் பெயர்களின் ஈற்றுப் பெயர்கள், சாரியை அல்லது வேற்றுமை யடிகளாக மாறும்போது வல்லொலியாக ஆக்கம் பெறுகின்றன. ஆனால், இரட்டிக்கப் பெறுவதில்லை. ஆறு எனப் பொருள்படும் 'ஏறு' என்ற சொல், சாரியை ஏற்பின் 'ஏட்டி'

என ஆகாது 'ஏடி' என்றே ஆகும். சில இடங்களில் 'ற்ற்' என்ற மெய்களைக் கொண்ட பெயர்ச்சொற்களை உருபேற்கும் பெயரடி களாக மாற்றினால் அம்மெய்களை 'ற்த்' என மாற்றுவதில் தெலுங்கு, தமிழ் மொழியை அடியொற்றி நிற்கிறது. கழுத்து எனப் பொருள்படும் 'அற்று' என்ற சொல்லின் சாரியை வடிவம் 'அற்தி' என்று வரும்.

5. 'இ'கரச்சாரியை

தெலுங்கு உயர்திணை இருபாற் பன்மைச் சுட்டுப் பெயர்களின் சாரியையாக 'இ'கரம் வரும் என்கிறார் கால்டுவெல். அவர் எனப் பொருள்படும் 'அவரு' என்பதிலிருந்து பெற்ற 'வாரு' என்ற பெயர், வேற்றுமை உருபேற்கும் பெயரடியாக மாறி 'வாரி' என்றாகிறது. சாரியை ஏற்ற உயர்திணை ஆண்பாற் சொல் 'வானி' என்பதன் ஈற்று 'இ'கரம், தெலுங்கு மொழி ஆண்பாற் பெயர்களின் இயல்பான சாரியையாகிய 'னி' என்பதின் ஒரு பகுதியன்று. 'வாரி' என்பதன் ஈற்றில் வந்த 'இ'கரச் சாரியை போன்றதே இந்த 'இ'கரச் சாரியையாகும். அவர்களுடைய எனப் பொருள்படும் உடைமைப்பொருள் குறித்த சுட்டுப் பெயராகிய 'வாரிதி' என்ற சொல்லை, அதே பொருள்படும் 'அவரது' என்ற தமிழ்ச் சொல்லோடு ஒப்பிட்டு நோக்கின் இரு மொழிகளிலும் அச்சொற்களில் ஈறு, தமிழில் 'அது' எனவும், தெலுங்கில் 'அதி' எனவும் வரும் அஃறிணைச் சுட்டே ஆகும். இச் சொல்லின் ஈற்று 'இ'கரத்தின் முன் நிற்கும் 'இ'கரமும், தெலுங்குக்கே உரிய இயல்பாகத் தன்னைத் தொடர்ந்து வருவதும் 'அதி' என்ற அஃறிணைச் சுட்டின் ஈற்றெழுத்தாய் வருவது மாய் 'இ'கரத்தினின்றே பெறப்பட்டது என்பதும் அறியப்படும். ஆகவே, வாரி என்பதன் 'இ'கர ஈற்றினை, 'அதி' என்பதன் சுருங்கிய வடிவமாகவோ அதிலிருந்து தோன்றிய ஒரு சொல்லுருபாகவோ கொள்ளலாம்.

பன்மைச் சாரியை 'அ'

தெலுங்கு பேச்சுமொழியில் பெரும்பாலான பெயர்ச்சொற்களின் பன்மைச் சாரியையாக 'அ'கரம் வரும். தெலுங்குமொழியில் எல்லா அஃறிணைப் பெயர்களிலும் உயர்திணைப் பெயர்கள் சிலவற்றிலும் பன்மை விகுதியாக வருவது 'லு' என்பதே. 'லு' என வரும் அவ்வீற்றினை 'ல'வெனத் திரிப்பதால் அவை உருபேற்கும் பெயரடைகளாக மாறுகின்றன. இந்த 'அ'கரச் சாரியையின் பின்னரே, எல்லா வேற்றுமை உருபுகளும் இணைக்கப்பெறும். 'கத்துலு' (கத்திகள்), கத்துல (சாரியை ஏற்ற பெயர்) 'கத்துல சேத' (மூன்றாம் வேற்றுமை உடைமைப்பொருள் உருபாகிய 'அ'கரத்தோடு உறவுடையதாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை) நடைமுறையில் வெறும் சாரியை யாகவே பயன்படினும் இச்சாரியையும் தொடக்கத்திலே ஆறாம் வேற்றுமைப் பொருள் உடையதே.

இப்பொருள் பற்றிய ஆராய்ச்சியினை முடிப்பதன் முன் பெயரையும் சாரியையும் பெயரையும் வேற்றுமை உருபையும், சாரியையும் வேற்றுமை உருபையும் ஒன்றி ணைக்க அவற்றினிடையே நின்று உதவ வரும், ஒலிநயம் குறித்த சொல்லுருபு குறித்துச் சிலவற்றைக் கூறுகின்றார் கால்டுவெல்.

வகர உடம்படுமெய்

தமிழில் இரு உயிர்கள் இணையும்போது (முன் கூறியதைப் போல) அந்த உயிர்களிடையே உடம்படுமெய்யாக 'வ'கரம் அல்லது 'ய'கரம் தோன்றும். அம்முறையை யொட்டி உயிரீற்றுப் பெயர்களுக்கும், உயிர் முதற்சாரியை அல்லது உருபுகளுக்கும் இடையே அவ்வுடம்படு மெய்கள் தோன்றும். ஆனால் தெலுங்கில் 'வ'கரத்திற்குப் பதிலாக 'ன'கரம் உடம்படுமெய்யாக வரும் என்கிறார் கால்டுவெல்.

முடிவுரை

1. பிராஹுயி மொழியைத் திராவிட மொழிகளில் ஒன்றாகக் குறிப்பிடாமை. இன்றைய திராவிட மொழி அறிஞர்கள் ப்ராஹுயி மொழியைத் திராவிட மொழிகளில் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளனர்.

2. தெலுங்குக்கு உள்ள பெயர்களையும் தெலுங்கு மக்களைப் பற்றியும் சான்று காட்டிக் கூறியது.
3. தெலுங்கு மொழிக்குத் தெலுகு, ஆந்திரம், த்ரிலிங்க, ஜெந்து, வடுக போன்ற சொற்கள் உள்ளதாக அறிவது.
4. தெலுங்கு சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்தது அன்று என்ற கால்டுவெல்லின் கருத்தியலுக்கு எ.டி. கேம்பெல்லின் கருத்து ஒத்துப் போகிறது. ஆனால் விலியம் கேரி இதை மறுக்கின்றார்.
5. 'டி' சாரியையை 'தி' சாரியையாகக் குறிப்பிட்டு அதைத் தமிழ், கன்னட மொழிகளோடு தொடர்புபடுத்தி 'டி', 'தி' இரண்டும் ஒன்றே என்று கூறுவது. ஆனால் தெலுங்கு இலக்கணிகளும், மொழியியல் அறிஞர்களும் 'டி', 'தி' இரண்டையும் தனித்தனிச் சாரியைகளாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

சான்றாக :

"டிவர்ணம்பு கொன்னிடிகி அந்தாக்ஷரம்புநகு ஆதேசம்புனு, கொன்னிடிகி அந்தாகமம்புனு, கொன்னிடிகி பர்யாயம்புன ரெண்டுனு ப்ராயிகம்புகானகு (பாலவியாகரணம்-ஆச்சிக பரிச்சேதம் - 31)

ஆதெசம்-ஏறு-ஏடினி

ஆகமம்-எநிமிதி-எநிமிதிடிநி

இரண்டும்-ரெண்டு-ரெண்டிநி,ரெண்டிடிநி

"விபக்தி பரம்பகுநபுடு கோயி ப்ரப்ருதுலு துதி யக்ஷரம்பு தி வர்ணகம்பகு" (பால-ஆச்சிக-35)

(எ-டு) : கோயி - கோதுலு -கோதிநி, கோதுலநு சேயி - சேதுலு - சேதிநி, சேதுலநு

கால்டுவெல் குறிப்பிட்டுள்ள சாரியைகளை ஆராய்ந்து பார்க்கும்போது அவர் தெலுங்கு இலக்கண நூல்களைப் படித்ததாக எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. ஆகையால் அவர் வழக்கில் உள்ள மொழிகளை மட்டுமே நன்கு ஆராய்ந்து அதில் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆதாரமாக்கிக் கொண்டு சாரியைகளை விளக்கியுள்ளார் என்று கருதலாம்.

துணைநின்றவை

அப்பாதுரை, ச. க. (2011). *கால்டுவெல் ஒப்பிலக்கணம், க்ரியர்ஸன் மொழியாராய்ச்சிக் குறிப்புகள்.* சென்னை: சாரதா பதிப்பகம்.

சேதுப்பிள்ளை, ர. (தே.இ). *கிருஸ்துவத் தமிழ்த் தொண்டர்.* திருநெல்வேலி: எஸ்.ஆர்.சுப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ் .

பி.எஸ்.சுப்பிரமணியம். (2006). *திராவிட பாஷலு.* ஹைதராபாத்: பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்குப் பல்கலைக் கழகம்.

புலவை கோவிந்தன், (2011). *டாக்டர் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், நான்கு பாகங்கள்.* சென்னை: சாரதா பதிப்பகம்.

ஜி.லலித. (1996). *தெலுகு வ்யாகரணமுல சரித்ர.* சென்னை: தி வெலகபூடி ஃபௌடேஷன்.

Brown C.P. (1985). *A Grammar of the Telugu Language.* New Delhi: Asian Educational services.

Caldwell, R. (1856). *A comparative grammar of Dravidian on South - Indian Family of Languages.* Landon: Paa Mall.

Caldwell, R. (n.d.). *Wikipedia.* Retrieved from Wikipedia: https://en.wikipedia.org/wiki/Robert_Caldwell

மதிப்பிடப்பெற்றது

தாளி(ழி)யூரில் பெருங்கற்காலத் தொல்லியல் தரவுகள் கண்டுபிடிப்பு

Tāḷi(ḻi)yūril peruṅkaṟkālat tolliyal taravukaḷ kaṇṭupiṭippu

முனைவர் க. பாலாஜி | Dr.G.Balaji[36]

Abstract: This researcher has done a field work in megalithic period (cist, urns) at thaziyur pirivu in perur panchayat and found a sample of urns, cist, black and red earthen pots, urns stand and pot stand which was very well used by our ancient Tamil people since megalithic (BCE 1000-BCE300) stone age. This archaeological place located in kolrampatti pond(kanmai in tamil). Its related ancient Tamil tradition. The basic research which was done in the surface level resulted in findings of many artefacts. Hence the researcher insists and requests the Tamil Nadu Archaeological department to do further excavation to find more artefacts.

Date of submission: 2019-03-20
Date of acceptance: 2019-04-10
Date of Publication: 2019-05-02
Corresponding author's
Name: முனைவர் க. பாலாஜி
Email: balajiand@gmail.com

Keywords: thaziyur pirivu in perur panchayat; Archaeology; urns, cist, black and red earthen pots, urns stand and pot stand; Tamil tradition; BCE 1000-BCE300; kolrampatti pond(kanmai in tamil); கோயம்புத்தூர், பெருங்கற்கால எச்சங்கள், பேரூர், தாளி(ழி)யூர், கோல்ராம்பட்டிக் கண்மாய், கல்திட்டைகளும் முதுமக்கள் தாழிகளும், கருப்பு-சிவப்பு மண்பானை ஓடு.

******

கோயம்புத்தூர் மாவட்டத்தின் பலவிடங்களில் பெருங்கற்கால எச்சங்கள் வரலாற்று ஆர்வலர்களால் தொடர்ச்சியாகக் கண்டறியப் பெற்று வருகின்றன. அவ்வரிசையில் பேரூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தாளி(ழி) யூர் கிராமத்தில் அமைந்துள்ள கோல்ராம் பட்டிக் கண்மாய்ப் பகுதியில் பெருங்கற்காலக் கல்திட்டைகளும் முதுமக்கள் தாழிகளும் இருப்பது அண்மையில் களஆய்வின்வழிக் கண்டறியப்பெற்றது. அரசுத்திட்டத்தின்கீழ் இக்கண்மாய்ப் பகுதியினைத் தூர்வாரும் பணி சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்றது. அப்பொழுது இயந்திரங்களின் உதவியுடன் மண் அள்ளப்பெற்ற பொழுது பெருங்கல் திட்டைகள், முதுமக்கள் தாழி கள் வெளிப்பட்டன. உடைந்த நிலையில் பழமையான புழங்கு பொருட்களும் பானை ஓடு களும் இப்பகுதியில் மிகுதி யாகக் கிடைக்கப் பெறுகின்றன. இவை பெருங்கற்காலத்தைச் சேர்ந்தவை என்பதனை மேற்பரப்பாய்வில் சேகரிக்கப்பெற்ற பளபளப்பான கருப்பு-சிவப்பு மண்பானை ஓடுகளும் கனமான வாய்ப்பகுதியினை உடைய முதுமக்கள் தாழிகளும் உறுதிப்படுத்துகின்றன. பளபளப்பு மிக்க சிவப்புப் பானை ஓடுகள் மீது வெண்ணிறக் கோடுகள் பூவேலைப் பாட்டுடன் வரையப் பெற்றுள்ளன. பெருங்கற்காலப் பண்பாடு நிலவியிருந்த இத்தொல்லியல் களத்தினையும் அங்குக் கிடைக்கப்பெற்ற தரவுகளையும் அறிமுகப் படுத்தி விளக்குவதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

தாளி(ழி)யூர் - பெருங்கற்காலத் தரவுகளும் பெயர்க்காரணமும்

பெருங்கற்காலத்தைச் சேர்ந்த தரவுகள் கோல்ராம்பட்டிக் கண்மாயின் உட்புறம் முழுவதும் பரவிக் காணப்பெறுகின்றன. இவ்வமைவிடம் சரியாகப் பேரூரிலிருந்து வேடப்பட்டி செல்லும் வழியில் அமைந்துள்ள

[36] தமிழ் உதவிப் பேராசிரியர், பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641 014. balajiand@gmail.com

தாளி(ழி)யூர்ப் பிரிவில் அமைந்துள்ளது. இப்பகுதி இப்பொழுது நாகராஜபுரம் என வழங்கப்பெறுகின்றது. அருகில் தொன்மை யான ஏழுகன்னிமார் கோவில் ஒன்று அமைந்துள்ளது. தாளி(ழி)யூரில் காணப்படும் பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்து இப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியிருந்தது என அறியமுடிகின்றது.

தற்பொழுது பேச்சுவழக்கில் இவ்வூர் தாளி(ழி)யூர் என்று வழங்கப்பெறுகின்றது. இப்பெயரில் அமைந்த தாழி என்ற சொல்லின் ஒலிவடிவம் பிற்காலப் பேச்சு வழக்கில் தாளி என மருவி எழுத்து வடிவிலும் வழங்கப்பெற்று வந்திருக்கலாம். இன்றுவரை அவ்வூருக்கான எழுத்தாவணங் களில் 'தாளியூர்' என்றே குறிக்கப்பெற்று வருகின்றது. தாழி என்ற சொல் பெரிய மண்பாண்டங்களைக் குறிக்கும் சொல்லாகும். தமிழ்ச்செவ்வியல் பனுவல்களில் தாழி என்ற சொல் இறந்தவர்களை அடக்கம் செய்யும் முதுமக்கள் தாழியினைக் குறித்தமைகின்றது. இத்தாழிகள் பற்றிய குறிப்புகள் பனுவல்களில் மட்டுமின்றிப் பழைய உரையாசிரியர்களின் உரைக்குறிப்பிலும் தொடர்ச்சியாகக் குறிக்கப் பெற்று வந்துள்ளன. தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் 'தாழி கவிப்பத் தவம் செய்வார் மண்ணகவழி நோற்றன மால்வரையே' (கா.ராஜன்:2010) என ஆசீவகர்களின் ஈம அடக்க முறையினைக் குறிப்பிடுகின்றார்.

'சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்'

(மணி.6:66-67)

மணிமேகலையில் பழந்தமிழர்களின் மரபுவழிப்பட்ட ஈமச்சடங்கு முறைமைகள் ஒவ்வொரு சமூகங்களிலும் பல்வேறு நிலைகளில் பின்பற்றப் பெற்றிருந்தமை சுட்டப்பெறுகின்றது. பிணத்தைத் தாழியில் வைத்துக் கவிழ்த்த நிலையினை நற்றிணைப் பதிவின்வழி அறிய முடிகின்றது. புதுக் கோட்டைக்கு அருகில் அமைந்துள்ள திருக்கட்டளை சிவன் கோவிலின் தென் சுவரில் அமைந்துள்ள சோழர் கல்வெட்டில் எல்லைகளை வரையறுக்கும் பொழுது முதுமக்கள் தாழிகள் விரவிக்கிடக்கும் காட்டைக் கலசக்காடு என்று குறிப்பிடுவதாக கா.ராஜன் (தொல்லியல் நோக்கில் சங்ககாலம்:2010) தமது நூலில் குறிக்கின்றார். மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, இராமநாதபுரம் முதலான பாண்டியநாட்டுப் பகுதியில் கிடைக்கப்பெறும் பெருங்கற்கால நினைவுச் சின்னங்களில் முதுமக்கள் தாழிகளே பெரும்பான்மையாகக் கிடைத்து வருகின்றன.

'மாஇருந்தாழி கவிப்ப' (நற்.271)

'தாழிய பெருங்காடு எய்திய ஞான்றே'
(புறம்.364)

'அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி'
(புறம்.228)

'வியன்மலர் அகன் பொழில் ஈமத்தாழி'
(புறம்.256)

'கவிச்செந்தாழிக் குவிப்புறத்து இருந்த'
(புறம்.238)

'தாழிமுதல் கவித்த கோழிலைப்
பருத்தி' (அகம்.129)

'தாழிக்குவளை வாடுமலர் சூட்டி'
(அகம்.161)

'ஓங்குநிலைத்தாழி மல்கச்சார்த்தி'
(அகம்.275)

'தாழியும் மலர்பல அணியா
கேழ்கொள' (அகம்.369)

'மன்னர் மறைத்த தாழி' (பதிற்.44)

'இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ
படு வழிப்படுக' (புறம்.239:20-21)

தமிழ்ச் செவ்வியல் நூல்களில் மேற்கண்ட இடங்களில் முதுமக்கள் தாழிகள் பற்றிய பதிவுகள் காணப்பெறுகின்றன. தாழி என்ற சொல்லில் அமைந்த ஊர்ப்பெயர்கள் சில அறியப்படுகின்றன. சிவகங்கை மாவட்டத்தில் மாந்தாழி (க.பாலாஜி, பெருங்கற்காலப் பண்பாடு:2013) என்ற ஊர் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தாளி(ழி)யூரில் கிடைக்கப்பெற்ற தரவுகள்

இப்பெருங்கற்காலத் தொல்லியல் அமை விடத்தில் பெருங்கல்திட்டைகள், முதுமக்கள் தாழிகள், கருப்பு - சிவப்பு வண்ணப் பளபளப்பான பானையோடுகள், முதுமக்கள்

தாழியின் அடிப்புறத்தாங்கி ஆகியன மேற்பரப்பாய்வின்வழிக் கண்டறியப்பெற்றன. இப்பகுதியானது தூர்வாரும் பொருட்டு மண் அள்ளப் பெற்றமையினாலும் நீர்நிலையாக அமைந்த காரணத்தினாலும் ஈமச் சின்னங்கள் உடைந்த நிலையில் காணப்பெறுகின்றன. இதன் காரணமாக மேற்பரப்பாய்வு செய்து சேகரிக்கப்பெற்ற பொருட்களில் எழுத்து களோ குறியீடுகளோ இதுவரை கண்டறியப் பெறவில்லை. இப்பகுதியில் தமிழகத் தொல் லியல் துறையினர் முறைப்படி அகழாய்வு செய்யும் வேளையில் எழுத்துப்பொறிப்பு களும் குறியீடுகளும் கிடைக்கப்பெறலாம்.

1.பெருங்கல்திட்டைகள்

படம்:01, கல்திட்டையின் அடிப்பகுதி

படம்-2, பெருங்கல்திட்டையின் மேற்பகுதி.

இக்கல்திட்டைக்குக்கீழ் முதுமக்கள்தாழி ஒன்று சிதைந்த நிலையில் காணப் பெறுகின்றது. மேற்புறம் அமைந்த கல்லைத் தொப்பிக்கல் (capstone) என்பர். இதன் பக்கவாட்டில் நான்கு புறமும் பட்டியக் கற்கள் சிறிய அறை வடிவில் செங்குத்தாக நிறுத்தப்பெற்றிருக்கும். இந்நிலையில் இருந்தே பிற்காலத்தில் கல்லறை எழுப்பும் வழக்கம் தோன்றியிருக்க முடியும். இங்கு அமைந்திருக்கும் கல்திட்டையில் இருபுறம் மட்டும் முழுமையாகக் காணப்பெறுகின்றன. ஏனைய பகுதிகள் சிதிலமடைந்து விட்டன.

2.முதுமக்கள் தாழிகள்

படம்:3, முதுமக்கள் தாழியின் உடைந்த பக்கவாட்டுப்பகுதி.

படம்:4, உடைந்தநிலையில் முதுமக்கள் தாழியின் வயிற்றுப்பகுதி.

படம்:5, வேலைப்பாடமைந்த முதுமக்கள் தாழியின் வாய்ப்பகுதி

படம்:6, முதுமக்கள் தாழியின் அடிப்பகுதி(தாங்கி)

இவையனைத்தும் இத்தொல்லியல் களத்தின் மேற்பரப்பாய்வில் சேகரிக்கப்பெற்ற பொருட்களாகும். முதுமக்கள் தாழியின் உடைந்த பாகங்கள் இப்பகுதியில் மிகுதியாகக் காணப்பெறுகின்றன.

படம்:7, பூ வேலைப்பாடமைந்த பளபளப்பான பானை ஓடு

தமிழகத்தில் பெருங்கற்காலத் தொல்லெச் சங்கள் காணப்பெறும் பெரும்பான்மையான இடங்களில் பூவேலைப்பாடு அமைந்த இவ்வோடு காணப்பெறுவது குறிப்பிடத் தக்கது. பெருங்கற்காலத்தில் வாழ்ந்திருந்த பானை வனையும் குயவர்கள் இதை எவ்வாறு செய்தனர் என்பதை அறிய இயலவில்லை. பானை வனையும் குயவர்களைப் (கோவன்) பற்றிய குறிப்புகள் புறநானூற்றில் இடம்பெறுகின்றன.

‘கலம்செய் கோவே கலம்செய் கோவே
இருள் திணிந்தன்ன குரூஉத்திறள் பரூஉப்புகை’
(புறம்.228)

‘கலம்செய் கோவே கலம்செய் கோவே
அச்சுடை சாகாட்டு ஆரம் பொருந்திய’
(புறம்.256)

பானை வனையும் குயவர்களுடனான உரையாடல்கள் சில செவ்வியல் பனுவல் களில் பதிவாகியுள்ளன. பழந்தமிழ்ப் புலவர் ஒருவரும் கணவனை இழந்த பெண்ணொருத் தியும் குயவன் ஒருவனிடம் சில கோரிக்கைகளை முன் வைப்பதாக மேற்குறித்த சான்றுகள் அமைகின்றன. புறநானூறு 228ஆம் பாடலைப் பாடிய ஐயூர் முடவனார் குயவனைப் பார்த்து எனது மன்னனின் புகழுக்கு ஏற்ற அளவில் மிகப்பெரிய தாழியினை உன்னால் செய்ய முடியுமா? எனக் கேட்பதாக அமைகின்றது. புறநானூறு 256ஆம் பாடலில் பெண் ஒருத்தி போரில் இறந்துபோன தனது கணவனோடு சேர்த்துத் தன்னையும் அடக்கம் செய்வதற் கேற்ற பெரிய தாழியினைச் செய்யக் குயவனைப் பணிக்கின்றாள். இதன்மூலம் பெருங்கற்காலத்தில் பானை செய்யும் குயவர்கள் எத்தகைய தாழியினையும் புழங்கு பொருட்களையும் செய்யும் தொழில்நுட்பம் அறிந்தவர்களாக இருந்திருக்கின்றனர் என அறியமுடிகின்றது. தாளி(ழி)யூரில் கிடைக்கும் முதுமக்கள்தாழிகள், பழம் பானையோடுகள் உள்ளிட்ட ஈமப்பொருட்கள் பலதரப்பட்ட நிலைகளில் கிடைத்திருப்பது இவ்விலக்கியச் சான்றுகளை மெய்ப்பிப்பதாக உள்ளது. பெருங்கற்காலத்தைச் சார்ந்த தாழிகள் இப்பகுதியில் காணப்பெறுவதன் காரணமாகப் பிற்காலத்தில் இவ்வூர் தாழியூர் என அழைக்கப் பெற்றிருக்கலாம். தாழிகளைச் செய்யும் குயவர்கள் வாழ்ந்திருந்த பகுதியாகவும் அமைந்திருக்க இடமுண்டு.

படம்-8, பளபளப்பான கருப்பு - சிவப்பு மண்பாண்டங்கள்

நீரிடங்களும் பெருங்கற்கால எச்சங்களும்

இத்தொல்லியல் களம் நீர்நிலையான கண்மாய்ப் பகுதியில் அமைந்துள்ளது. தமிழகத்தில் கிடைக்கப்பெறுகின்ற பெரும்பான்மையான பெருங்கற்கால எச்சங்கள் நீரிடங்களில் அமைந்துள்ளன. இவை எதார்த்தமான நிகழ்வெனக் கொள்ள முடியாது. தொல்காப்பியர் சுட்டும் ஈமச்சடங்கு முறைமைகள் இங்கு மனங்கொள்ளத்தக்கன.

> காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
> சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல்
> (தொல்.பொருள்.2-5).

இந்நூற்பாவில் சுட்டப்பெறும் நீர்ப்படை என்பது இறந்தவர்களுக்குச் செய்யப்படும் நீரோடு தொடர்புடைய ஈமக்கிரியை எனலாம். இறந்தவர்களைக் குளிக்க வைத்தல், நீர் மாலை எடுத்தல் முதலிய ஈமச் சடங்கு முறைகள் தமிழகத்தில் தொன்றுதொட்டுச் செய்யப்பட்டு வருகின்றன. தொல்காப்பியத்தில் போரில் இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கப்பெறும் வீரக்கல்லிற்கு நீராட்டுச் செய்யப்பெறுவது சுட்டப்பெறுகின்றது. ஈமச் சடங்கு நிகழ்வுகளில் நீர்நிலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நீர்நிலை என்பது குறியீட்டு நிலையில் தாயின் கருவறையில் குழந்தை வளரும் நீர்க்குடத்தைக் குறிப்பதாக அமைகின்றது. பிறப்பும் இறப்பும் தத்துவ அடிப்படையில் நீரோடு தொடர்புடையதெனக் கருதலாம். இறந்து எரியூட்டப் பெற்றவர்களின் சாம்பல் நீரிடங்களில் கரைக்கப்படுவதும் இத்தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பெற்ற சில முதுமக்கள் தாழிகளின் வயிற்றுப்பகுதியில் களிமண்ணால் செய்யப் பெற்றுள்ள வளைகோடுகள் தாயின் தொப்புள் கொடியினைக் குறிப்பதாகத் தொல்லியலாளர் கருதுவர். முதுமக்கள் தாழிகளைச் சூல்கொண்ட தாயின் வயிற்றுடன் தொடர்புபடுத்துவர் மானிடவியலாளர்.

“இறந்த மனிதன் மீண்டும் கருவுற்றுப் பிறக்கிறான் என்ற நம்பிக்கை பழந்தமிழரிடையே இருந்திருக்கிறது. அதனால் அவன் மறுபிறப்புக்குத் தேவையான எலும்புகளையும், அவன் பயன்படுத்திய பொருட்களையும் அத்தாழிகளில் இட்டுப் புதைத்தனர். மேலும் அந்த தாழிகள் தாயின் கருவறை போலவே வடிவமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கிடைத்த ஈமத்தாழிகளின் கழுத்துப்பகுதியில் தொப்புள்கொடி போன்ற வடிவமைப்பு அக்கால மக்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக உள்ளது” (குணசீலன் இரா., 2009).

தாளியூருக்கான இன்றைய சுடுகாடும் (ஈமக்காடு) இவ்விடத்தில் அமைந்துள்ளது. இதன் மூலம் ஈராயிரம் ஆண்டுகளாக இவ்விடம் ஈமக்காடாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

களஆய்வு முடிபுகள்

தாளி(ழி)யூர் என்ற இத்தொல்லியல் களத்தில் பெருங்கற்காலத் தொல்லெச்சங்கள் களஆய்வின் வழியாகக் கண்டறியப் பெற்றுள்ளதன் மூலமாக இப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியிருந்தமையினை அறியமுடிகின்றது.

முதுமக்கள் தாழிகள் இப்பகுதியில் பரவிக் காணப்பெறுவதால் இவ்வூருக்குத் தாழியூர் என்ற பெயர் இடப்பெற்றிருக்கலாம். அப்பெயர் பேச்சுவழக்கில் தாளி என மருவி எழுத்துவழக்கிலும் வழங்கப்பெற்றிருக்கலாம்.

பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பெருங்கல் திட்டைகள், முதுமக்கள் தாழிகள், பளபளப்பான கருப்பு-சிவப்பு மண்பாண்டங்கள், உடைந்த முதுமக்கள் தாழியின் வாய்ப்பகுதி, தாங்கி (தாழியின் அடிப்பகுதி) ஆகிய பொருட்கள் மேற்பரப்பாய்வில் சேகரிக்கப் பெற்றன.

நீரிடப்பகுதியில் இத்தொல்லியல் களம் அமைந்துள்ளது. மனிதனின் பிறப்பு, இறப்பு, நீரிடம் முதலான தத்துவப் பின்னணியுடன் பெருங்கற்கால முதுமக்கள் தாழிகளை ஒப்பிட முடியும். ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இவ்விடம் ஈமக்காடாக அமைந்திருப்பது களஆய்வின் வழியாகத் தெரிய வருகின்றது.

பெருங்கற்காலத்திலிருந்து மண்பாண்டங்கள் செய்யும் குயவர்கள் சிறந்த தொழில் நுட்பத்தை அறிந்தவர்களாக இருந்திருக்கின்றனர். பழந்தமிழ் இலக்கியக் குறிப்பு

களும் இக்கள ஆய்வுத்தரவுகளும் அவற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளன.

உடைந்த நிலையில் கிடைக்கப்பெறும் இத்தரவுகளைத் தமிழகத் தொல்லியல் துறை கவனத்தில் எடுத்துக்கொண்டு அகழ்வாராய்ச் சியினை மேற்கொண்டால் புதிய வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொண்டுவர முடியும்.

குறிப்பு:

கள ஆய்வில் கலந்து கொண்டவர்கள்: அ.நூருல்லா, இளங்கலை தகவல் ஒழுங்குமுறை மேலாண்மை, கிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, கோவை.

முனைவர் க.பாலாஜி, தமிழ் உதவிப் பேராசிரியர், பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோவை.

களஆய்வு செய்த நாட்கள்: 23.02.2019; 24.02.2019; 23.03.2019; 24.03.2019; 31.03.2019; 06.04.19; 7.04.19.

துணைநின்றவை

இராசு, ப. (2009). பண்டைய தமிழக வரைவுகளும் குறியீடுகளும். தரமணி, சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இளங்கோ சி. (2011). “பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் தொல்லியல் தரவுகளை முன்வைத்து”. சென்னை:

குணசீலன் இரா. (2009, சூன் 30). “ஈமத்தாழி”. வேர்களைத்தேடி(வலைப்பூ): http://www.gunathamizh.com/ -இல் இருந்து எடுக்கப்பட்டது

குருமூர்த்தி செ. (2010). “பழம்பானைக் குறியீடுகளும் தமிழர் பண்பாடும்". உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு (ஆய்வுமலர்). கோவை.

சதாசிவப்பண்டாரத்தார். (2009). பாண்டியர் வரலாறு. சென்னை: செண்பகா பதிப்பகம்.

சீனிவாசன் இரா. (2011). “சிந்துவெளிக்குறியீடுகளை ஒத்த குறியீடுகள் வேலூர் மாவட்டத்தில் கண்டுபிடிப்பு”. புதியபனுவல், தொகுதி3, இதழ்4.

சேதுப்பிள்ளை ரா.பி. (2009). தமிழகம் ஊரும் பேரும். சென்னை: தமிழ் நிலையம்.

தாமோதரன் கு. (1999). தொல்லியல் நோக்கில் தமிழகம். தமிழ்நாடு: தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.

திருநாவுக்கரசு க.த. (1982). சிந்துவெளித்தமிழ் வடிவங்கள். சென்னை: மணியகம்.

நடனகாசினாதன். (2010). “தமிழக நில அகழாய்வுகள்”. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு (ஆய்வுமலர்). கோவை.

பாலாஜி க. (2013). பெருங்கற்காலப் பண்பாடு. சென்னை: காவ்யா பதிப்பகம்.

பாலாஜி க. (2015, August 5). “பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகமும் தமிழி எழுத்துப் பொறிப்புகளும்”. (&. S. Muneesmoorthy Dr.M., Ed.) இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ், 1(2), 17-25. Retrieved from https://www.inamtamil.com/megalithic-era-cist-aracheological-field-work/

பாலாஜி க. (2019). பெருங்கற்காலத் தமிழ்ச்சமூகம் : கீழிருந்து மேலெழும் வரலாறு. கோயம்புத்தூர்: இனம் பதிப்பகம்.

மதிவாணன் இரா. (2010). ”சிந்துவெளித் தமிழ் எழுத்துகள்”. உலகத் தமிழ்ச்

செம்மொழி மாநாடு (ஆய்வுமலர்). கோவை.

மாதையன் பெ. (2007). சங்க இலக்கியச் சொல்லடைவு. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக் கழகம்.

மாதையன் பெ. (2010). சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம். சென்னை: புதுயுக நூல் வெளியீட்டகம்.

ராஜன் கா. (2010). தொல்லியல் நோக்கில் சங்ககாலம். தரமணி, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

ராஜ்கௌதமன். (2009). ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும். சென்னை: தமிழினி பதிப்பகம்.

விசயவேணுகோபால் கோ. (2011, [நவம்பர்-திசம்பர்]). “தமிழகத்தின் எழுத்துவழக்கம் அசோகன் காலத்திற்கும் முந்தையது”. மணற்கேணி.

வையாபுரிப்பிள்ளை ச. (1967). சங்க இலக்கியம் பாட்டும் தொகையும். சென்னை: பாரி நிலையம்.

Rajan k. (2015). *Early Writing System (A journey from Graffitti to Brahmi).* Madurai: pandya nadu centre for Historical Research.

இனம் பதிப்பகத்தின் வெளியீடுகள்







மதிப்பிடப்பெற்றது

சாந்தி வனத்து வேர்கள்: நூலறிமுகம்

Cānti vaṉattu vērkaḷ: Nūlaṟimukam

முனைவர் **ச.முத்துச்செல்வம்** / Dr.S.Muthu selvam[37]

Abstract: The Novel 'Saanthivanathu Veargal' written by A.Thirunavukkarasan is the tragic story of cremator Sangili. who lives in thinnaiyadi valasai, a village in Ramanathapuram, tamilnadu.The author takes this novel as an opportunity to bring out the caste discrimination in the Indian society into lime light.

The caste discrimination is so transparent evidenced in most of the scenes in the novel. The rich upper caste people like Udaiyappan, pachaiyappan live in the car street and they impose heavy restrictions for the entry of lower caste people in the street.

All sorts of injustices are performed on the family of sangili. His son Karuppu is beaten, His daughter is raped and his wife is burnt to death. But no one questions these injustices. Even the government officials like the policemen turn deaf ear to his complaints.

The author ironically named the central character as sangili Which means chain. But he is nowhere found and connected in the village chain.

This novel has explained a cremator's sad life. while reading this story, as a part of the society. we should be ashamed of the caste system that exists in our society. Still, Many low caste peoples are falling in the problem of discrimination. The author has given a clear image of the life of such people in this society. Many low caste people are being abused physically and sexually by the people of their society. In this story the author had explained their suffering clearly. Finally, The author says that not only terrorism two sharp sider. But also repression has very two sharp sider.

Date of submission: 2019-03-20
Date of acceptance: 2019-03-28
Date of Publication: 2019-05-02
Corresponding author's
Name: முனைவர் **ச.முத்துச்செல்வம்**
Email: muthuselvam8122@gmail.com

Keywords: A.Thirunavukarasan, problem of discrimination, sexual, Santhivanathu Veargal, society, சாந்தி வனத்து வேர்கள், ஆ.திருநாவுக்கரசன், அணுப்பானடி, மதுரை, காட்டு மூங்கிலும் புல்லாங்குழலும், மரணம் வரை

நூல்: **சாந்தி வனத்து வேர்கள்**
ஆசிரியர்: **ஆ.திருநாவுக்கரசன்**
பதிப்பு: 2012, பாவை பப்ளிகேஷன்ஸ் வெளியீடு,
மறுபதிப்பு: சனவரி, 2018, செல்வி பதிப்பகம், கோவில்பட்டி.
விலை: உருபாய்140/-

******

தமிழ்ப் படைப்பாளர் ஆ.திருநாவுக்கரசன் மதுரை மாவட்டம் அணுப்பானடியைச் சார் ந் தவர். கனரா வங்கியின் கோவில்பட்டிக்

இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழுக்கு ஆய்வுக்கட்டுரை அனுப்ப -inameditor@gmail.com

[37] தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-09.

கிளையில் பணியாற்றி வருகிறார். கவிஞராக, "மரணம் வரை'' (2006), "தந்தை மகனக்கு'' (2007) ஆகிய கவிதைத் தொகுதிகள்வழித் தமிழ்ப் படைப்புத் தளத்தில் இயங்கியவர். "சாந்தி வனத்து வேர்கள்" (2012) என்னும் புதினப் படைப்பின் மூலம் கதையாசிரியராகப் பங்களிப் பாற்றியுள்ளார். அரசினால் கண்டுகொள்ளப் படாத சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் தியாகம் குறித்து வெளிப்படுத்தும் விதமாக, "காட்டு மூங்கிலும் புல்லாங்குழலும்'' (2017) என்ற புதினப் படைப்பினையும் படைத்துள்ளார். சாந்தி வனத்து வேர்கள் என்னும் படைப்பின்வழிச் சமூகத்தின் விளிம்புநிலை மனிதனான வெட்டியான் சங்கிலியின் சமூக இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் மேட்டிமைவாசிகளின் இழிநிலைச் சிந்தனைகளை அம்பலப்படுத்தியுள்ளார்.

சாந்தி வனத்து வேர்கள்

சாந்தி வனத்து வேர்கள் என்னும் புதினம் சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளான வெட்டியான் சமூக மக்களின் வாழ்வியல் போராட்டத்தைக் கதைக்களமாகக் கொண்டு படைக்கப் பட்டுள்ளது. இக்கதை இராமநாதபுரம் மாவட்டத்தில் திண்ணையடி வலசை என்னும் ஊரில் நிகழ்வதாகப் படைக்கப்பட்டுள்ளது. இவ்வூர் மேலத்தெரு, கீழத்தெரு மற்றும் ரதவீதி என்று மூன்று வீதிகளாக 510 வீடுகளைக் கொண்டதான ஊர். அங்குள்ள ரதவீதியில் எல்லோராலும் சென்றுவர முடியாத எழுதப்படாத சட்டம் உண்டு.

இக்கதையில் வரும் கருப்புவின் தந்தை சங்கிலி பிணம் எரிக்கும் தொழில் செய்பவராகப் படைக்கப்பட்டுள்ளார். அத் தொழிலுக்குத் துணையாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் ஈடுபடும் வகையில் படைக்கப் பட்டுள்ளனர். அதில், பிணம் எரிப்பது, புதைப்பது, எரித்தலுக்குத் தேவையான எருப் பொறுக்குவது, ஊர்ப்பறை அடிப்பது போன்ற தொழில்கள் சங்கிலியின் குடும்பத்தினர் மீது திணிக்கப்பட்ட தொழில்களாகும். இத்தொழி லினால் கிடைக்கும் வருவாயால் வாழ்க் கையை நகர்த்த வேண்டும். உண்ணும் உணவாகப் பல நாட்களில் வாய்க்கரிசியே பயன்பட்டிருக்கிறது.

> *''நெற்றிக்கண் இல்லை ஆனாலும் சுட்டெரிக்கும் வல்லமை பெற்றவன். இடுகாட்டைக் கட்டிக் காக்கின்றான். இருந்தாலும் இவன் சிவன் இல்லை. இவனை எப்படிச் சிவனோடு ஒப்பிடுவது? சிவன் வரம் கொடுத்தே பழக்கப்பட்டவன். இவனோ சாபம் வாங்கியே பழக்கப்பட்டவன்''(ப.7).*

என்று ஆசிரியர் குறித்துள்ளார்.

ரதவீதியில்தான் உடையப்பன் மற்றும் பச்சையப்பன் போன்ற பெரும்தனக்காரர்கள் வாழ்கின்றனர்.

> *''ஆடு, மாடு, கோழி, பன்றி இப்படி சகல ஜீவராசிகளும் தாம் விரும்பியபடி அந்த மூன்று தெருக்களிலும் சுதந்திரமாய் போய்வரும், ஓடித்திரியும். ஆனால் சங்கிலியோ அவனது வீட்டாரோ அந்த தெருக்களில் போய்வர முடியாது. அதற்கு ஏகப்பட்ட கட்டுப்பாடுகளும் நிபந்தனை களும் இருந்தன. அந்த ஊரின் ஜனத் தொகையில் சங்கிலி மனித வகையிலும் சேர்க்கப்படுவதில்லை மிருக வகையிலும் சேர்க்கப்படுவதில்லை. இரண்டிற்கும் இடைப் பட்ட ஒன்றாகவே நடத்தப்பட்டான்''* (ஆ.திருநாவுக்கரசன், 2018, பக். 6-7).

அதே தெருவில் தான் கிறித்துவ மதத்திற்கு மாறிய டேவிட் சிவதானும் இருக்கிறார். இந்த டேவிட் சிவதானு கருணையின் வடிவாகத் திகழ்பவர். இவரின் கருணையால் சங்கிலியின் குடும்பம் பலநிலைகளில் பயனடைந் திருக்கிறது.

> *''பெயர்தான் சங்கிலி, ஆனால் இவன் வாழ்க்கையோ ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாமல் அங்கங்கே அறுந்து போய்க் கிடந்தது. தொழில் வெட்டியான், வெட்டியாக ஒரு நாளும் இருந்ததில்லை. வெட்டி ஆட்கள்கூட இவனை*

மிரட்டுவார்கள். தங்களை வீரன் என்று காட்டிக்கொள்ள வேறு இடம் கிடைக்காவிட்டால் அவர்கள் வீரம் காட்டும் களமாக சங்கிலியின் மேனி ஆகி விடும்''(ப.7).

என்று குறிப்பிடுவதன்வழிச் சமூகம் பல அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுக் கிராமம் அமைந்திருந்தமையைக் குறிப்பாகக் காட்டு கிறார்.

இக்கதையில் பெருந்தனக்காரர்களாகக் காட்டப் பட்டுள்ள உடையப்பன், பச்சையப்பன் மூலமாகவே பல ஆக்கிரமிப்புகள் நிகழ்ந் தேறியுள்ளன. இதனை,

''சிலவேளைகளில் பச்சையப்பன் மற்றும் உடையப்பன் வீட்டுப் பகையாளிகள், வேண்டப்படாதவர்கள் இந்தக் கிணற்றில் தான் தற்கொலை என்ற பெயரில் மிதப்பார்கள். மூக்கன் மொட்டைக் கிணற்றின் தண்ணீர் போலவே வெளியே வராமலே கிடக்கிறது அதனுள்ளே மிதந்த பிணங்களின் மரணத்தைப் பற்றிய உண்மை''(ப.56).

என்று பதிவிட்டுள்ளார்.

எல்லாத் தொழில்களிலும் விலை நிர்ணயிக்கும் சக்தியாக உழைப்பவர் திகழமுடியாது. உழைப்பிற்கேற்ற ஊதியமும் பெறமுடியாது. அதற்குத் தாராளமான கட்டுப்பாடுகளும் இருந்தன. இந்நிலையில் தான் சங்கிலியின் குடும்பத்தைப் படைத்துள்ளார். இதனை,

"ஐயா பெரியவங்களே, பத்து நாளுன்னா பொழப்புக் கெட்டுப் போயிருமுங்க. ஏற்கனவே குடுக்குற கூலி கஞ்சிக்குக்கூட கட்டுபடியாகலீங்க ஐயா. அதுனால ஐயா பாத்து கூலிய கொஞ்சம் எச்சா (கூடுதலாக) போட்டு குடுத்தா...''(ப.70)

என்பதன்வழி உழைப்பின் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு விளிம்புநிலை மக்களுக்கு இச்சமூகம் உரிமை வழங்கவில்லை என்பதை அறியமுடிகின்றது. எனவே, பிச்சாயி முடிப் பதற்குள்ளே பெரும்பாலானோர் வெடித்துக் கிளம்பினர்.

இத்தனக்காரர்களில் உடையப்பனின் மூத்த மகன் வேங்கையன். எப்பொழுதும் வெட்டி யாக, சோட்டாளிகளுடன் (கட்டப்பாண்டி, குட்ட மூக்கன், மோழையன்) கள்ளச்சாராயம் விற்கும் பூச்சியிடம் பத்து ரூபாய் கப் வாங்கிக் குடித்துக்கொண்டு திரிபவன். கருப்பு பறை யடித்துக் கொண்டு ஆடும் பொழுதினில் லேசாக கை வேங்கையன் மீது பட்டதும்,

''நாய் ஓரசுரதப் பாரு ஓரசுரத, பட்டுத் துணியோட ஒட்டுத் துணி ஓரச நெனைக்கலாமா? எங்க வந்து யாரு ஆட்டம் போடுறது, அதுவும் எம்மேல ஓரசிக்கிட்டு. உசுரக் குடிச்சுப்புருவேன் குடிச்சு. இனிமே எங்கயாச்சும் ஆடுறதப் பாத்தேன் கால வெட்டிப்புருவேன் வெட்டி. நாயி தவ்வுற மாதிரி நாலு குதிகுதிச்சா அதுக்குப் பேரு ஆட்டமா''(ப.88).

எனக்கூறிச் சங்கிலியை எட்டி உதைத்திருக்கிறான். கருப்புச்சாமியை எட்டி உதைத்துப் பறையை உடைத்தெறிந்திருக் கிறான். ஆகையால் தன் குலத் தொழிலைச் செய்வதற்கு முன்வரவில்லை கருப்பு. அன்னை பிச்சாயியின் வார்த்தை களையும் அவன் பொருட்படுத்தவில்லை. எனவே, பிணம் எரிப்பதற்கு எருவினை மகள் பெருமாயியைக் கொண்டு செல்லச் சொன்னாள் பிச்சாயி.

''பெருமாயி தன் வீட்டில் இருக்கும் போது எப்போதும் ஜாக்கெட் அணிபவள், இப்போது ரத வீதிக்கு வந்ததனால் ஜாக்கெட் அணியாமல் வெறுமனே சேலையோடு வந்திருந்தாள்''(ப.90).

என்று கூறுவதன்வழி எழுதப்படாத கட்டுப் பாடுகளை அரங்கேற்றியுள்ளது இச்சமூகம். இத்தகைய,

''ஊர்க்கட்டுப்பாடு கருதி அவள் ஜாக்கெட் அணியாததும் உள்ளாடை இல்லாததும் வேங்கையனுக்கு வசதியாய் இருந்தது,

முதலில் வேங்கையன் குதறி முடித்து விட்டு எழுந்தான். இவன் வெறி தற்காலிகமாக அடங்கியதும் மற்ற மூவரையும் பார்த்து ஏதாவது செய்து கொள்ளுங்கள் என்று புறங்கையை அசைத்து சைகையால் கூறிவிட்டுக் கிளம்பினான் வேங்கையன்'' (ப.93).

அந்த நேரத்தில் கருப்புவின் தங்கை பெருமாயியின் கற்பினைக் கூட்டாளிகளோடு சூறையாடிருக்கிறான் வேங்கையன். வேங்கை யனின் சாதிய வன்மத்திற்கு எதிராகக் காவல்நிலையம் நோக்கிச் சென்று புகார் கொடுத்த பொழுது புகாரைக் கண்டு கொள்ள வில்லை.

> ''ஏலே ஒனக்கு என்னா கிறுக்கா புடிச்சிருக்கு உடையப்பன் மகன் மேல புகார் குடுக்குற. போடா அநியாயமா உசுர விட்டுராத''(ப.101).

என்று பதிவிட்டுள்ளார். இவ்வாறாக, காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகளும் உடையப்பன் குடும்பத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டனர். இதனால், கருப்பு கவலையுடன் காவல்நிலையத்தில் இருந்து திரும்பிவரும் வழியில் நக்சல் பாரி இயக்கத் தினரின் ஆதரவுக் கரம் கிடைத்தது. இதனால்,

> ''சாதி சனங்களே நல்லாக் கேட்டுக்கங்க நம்ம ஊரோட பெருமையை கொலைக்கிற வகையில நடந்துக்கிட்டான் இந்தச் சங்கிலி. இவனுக்குக் குடுக்கிற தண்டனைங்கிறது இந்த ஊருக்கு ஒரு பாடம். அதுனால இவனுக்கு ஒரு கொவள சாணிப்பாலும் அஞ்சு சவுக்கடியும் தண்டனையாக் குடுக்க ஊர் சார்பா பஞ்சாயத்தோட கட்டளை. அதோட இவன் குடும்பத்தோட ஊரவிட்டு வெளியேறிச் சுடுகாட்டுக்குக் கெழக்கிட்டு குடியேறனும். அதுக்கு ஒரு வார கால தவண'' (ப.121).

என்று பஞ்சாயத்தார்களால் தீர்ப்புச் சொல்லப் பட்டு, கருப்புவின் குடும்பத்தின் மீது சாதிய வெறியாட்டத்தைக் கிராமமே சேர்ந்து அரங்கேற்றியது. எனவே, கருப்பு தனது கிராமத்தின் மீது இருந்த வெறுப்பின் காரணமாகத் திண்ணையடிவலசை செல்ல வில்லை.

வேங்கையன், சௌந்தரவள்ளி என்ற அழகுடையாளின் மீது பாலியல் வன்முறையை நிகழ்த்திக் கொலை செய்துவிட்டான்.

> ''சௌந்தரவள்ளி என்ற ரோஜாமொட்டில் புதிதாக முளைத்திருந்த போராட்ட முட்கள் இந்தக் காம வண்டின் இறகுகளைக் காயப்படுத்தவே செய்தன. இருந்தாலும் அந்தக் காமுகன் உள்ளே நுழைந்து விடும் முயற்சியில் அந்த அழகிய மொட்டின் ஒவ்வொரு இதழாய் உதிர்த்தான். இறுதியில் அந்த அழகிய ரோஜா மொட்டின் உயிர்க்காம்பு உதிர்வதற்கும் இவன் எண்ணி வந்த காரியம் முடிவதற்கும் சரியாக இருந்தது. கையோடு ஒரு துணியை எடுத்து சௌந்தரவள்ளியின் அந்தரங்கத்தில் படிந் திருந்த இரத்தக் கறையைத் துடைத்து எடுத்துக்கொண்டு ஒன்றுமே நடக்காதவன் போல தெருமுனைக்கு வந்து விட்டான். உடலெங்கும் வியர்வை அரும்பி இருக்க வெற்றிக் களிப்பில் தன் நண்பர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டு மீண்டும் பழைய இடத்திற்கே அவர்களை அழைத்துக் கொண்டு சென்றான்''(*பக்.157-58*).

இதுபோல பல குடும்பங்களின் வாழ்க்கை யைப் பாலியல் வெறியால் சூறையாடியதை ஆண்மை எனவும் கொண்டான். சௌந்தர வள்ளியின் தந்தை வேதநாயகம் கொடுத்த புகாரில் வேங்கையன் சிக்கிக் கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்களில் எதிர்த்துத் தாக்கும் வன்மையில்லாச் சங்கிலியின் குடும் பத்தின் மீது தனது அட்டூழியங்களை அரங்கேற் றினான்.

சௌந்தரவள்ளியின் சடலத்தைத் தோண்டி எரித்து விட வேண்டும் என்ற முயற்சி தோற்றமை காரணமாக, வேறு வழியைச் சிந்தித்தான் வேங்கையன். அதில் சங்கிலியின் வீட்டுக்குத் தீ வைப்பது, தடயம் அழியாமல் பாதுகாத்த பிச்சாயியை நெருப்போடு கொளுத்

துவது என எல்லாத் தொல்லைகளையும் சங்கிலியின் குடும்பத்தினர் மீது கொடுத்தான்.

> "ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய் சொல்வதைப் போல ஒரு கொலையை மறைக்க இன்னொரு கொலை செய்ய ஆயத்தமாகி விட்டான் வேங்கையன்" (ப.165).

தன் தாயின் இறப்பிற்குக் காரணமாக இருந்த வேங்கையனின் கூட்டாளிகள் குட்டமுக்கன் மற்றும் மோழையனை மூக்கன் மொட்டைக் கிணற்றில் அடித்துக் கொன்று இறக்கினான் கருப்பு. தமது குடும்பத்தின் மீது நிகழ்ந்த வன்மத்தைப் பைத்தியக்காரனைப் போல இருந்து கவனித்தான். நக்சல்பாரி இயக்கத்தில் இணைந்த பின்பு புதுமனிதனாக வாழ்ந்த கருப்பு பழி தீர்த்துக் கொண்டான்.

டேவிட்சிவதானுவின் உதவியால் கல்லூரிப் படிப்பை எட்டி, நிலம் கையகப்படுத்தும் பிரிவிற்கு வட்டாட்சியரான வேலு,

> "சென்னை வந்த வேலு நில நிர்வாகத் துறை ஆணையர் அலுவலகம் சென்று தனக்குத் தேவையான விசயங்களைத் தேட ஆரம்பித்தான். ஒருவழியாக 30.09.1892 ஆம் ஆண்டு பிரிட்டீஷ் ஆட்சிக் காலத்தில் வெளியிட்ட அரசாணை எண்1010-ஐப் பார்த்தான். அவ்வளவு தான். ராஜவிருந்தில் கலந்து கொண்ட ஒரு பிச்சைக்காரனைப் போல் திக்குமுக்காடிப் போய் நின்றான். அந்தக் குறிப்பில் மொத்தம் பஞ்சமி நிலங்கள் 12 லட்சம் ஏக்கர் என்று இருப்பதைப் பார்த்ததால் தான் அவனுக்கு இந்த நிலை. இவ்வளவுக்கும் சொந்தக்காரர் கள்தான் இன்று பிச்சைக்காரர்களாக ஆக்கப் பட்டார்களா?" (ப.189).

உலகில் நிலமில்லாமல் பரதேசிகளாய் இருப்பதற்கு ஆக்கிரமிப்புதான் முதன்மைக் காரணம் என்பதை அறிந்து கொண்டான் வேலு.

> "சென்னையில் இருந்து புறப்பட்டு வந்தவன் மாவட்ட ஆட்சியரிடம் இதுபற்றிக் கலந்தாய்ந்தான். மாவட்ட ஆட்சியரிடம் மட்டும் கலந்து பேசிய விசயம் மறுநாளே உடையப்பனுக்குச் சென்றது. புறாக்குஞ்சின் இருப்பிடத்தைப் பருந்துக்குக் காட்டிக் கொடுத்தது போல ஆனது அந்த நிகழ்ச்சி"(ப.189).

நிலம் இல்லாதவர்களுக்காக உதவ முன்வருவார் என்று மாவட்ட ஆட்சியரிடம் கூறினான் வேலு. இதனை மாவட்ட ஆட்சியர் மூலமே அறிந்து கொண்டு, வேலுவையும் மணல் கொள்ளையின் போது கொலை செய்து விட்டான் வேங்கையனின் தந்தை உடையப்பன்.

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு திண்ணையடி வலசைக்குள் நுழைந்த கருப்பு பஞ்சாயத்துத் திண்ணையில் இப்பொழுதுதான் அமர்கிறான். பின்பு உடையப்பன் வீடு சென்று உடையப்பனையும் அவன் மனைவி முத்துராக்கையும் கொலை செய்தான்.

> "டேய் பொணத்த நல்லா குளிப்பாட்டுங்கடானு சொன்னா அந்தச் சிலுவைக்காரன் பேச்சக் கேட்டுகிட்டு அடையாளத்த பாதுகாத்து அப்படியே துணியில சுருட்டி வச்சா ஒம் பொண்டாட்டி. அதுக்கு அவளுக்குப் பரிசு குடுத்து அனுப்பிச்சோம். ஊர் கண்ணுல மண்ணத் தூவி விட்டுட்டு ஒன் எளைய மகன் படிச்சு அதிகாரியா வந்தான். வந்ததும் இல்லாம எங்க சொத்துலயே கைவைக்கப் பாத்தான். அதுக்குப் பரிசா அவன் எடத்த மாத்தி அவன உசுரோட மணல்ல பொதச்சோம். நீ ராக்காவல் காத்து போலிஸ்காரன் வந்ததும் சந்தோசமா பொணத்த தோண்டி தந்த. அதுக்குப் பரிசா இப்ப ஒன்னைய உயிரோட எரிக்கப் போறமுடா"(ப.197).

இதனால் வெம்பிய வேங்கையன் மற்றும் கட்டப்பாண்டி பிணம் எரித்துக் கொண்டிருக்கும் சங்கிலியைத் தீயில் தள்ளி

விடுகின்றனர். சங்கிலியின் அலறல் சப்தம் கேட்டு பைத்தியம் வந்தான். வந்தவன்

> “சங்கிலியின் உடலை நெருப்பிலிருந்து வெளியே இழுத்தான். உயிர் போய்விட்டது என்பதை உணர அவனுக்கு ஓரிரு விநாடியே போதுமானதாக இருந்தது. சங்கிலியின் உடலை அப்படியே போட்டுவிட்டு இவர்கள் இருவரையும் பார்த்தான். டேய் கட்ட அந்தக் கம்ப பைத்தியங் கையில் குடுத்திரு பழிய அவன் மேல போட்டுரலாம். உத்தரவு போட்டான் வேங்கையன்”(ப.199).

சுலபமாகக் கைக்கு வந்தது கம்பு. அக்கம்பை வைத்து கட்டப்பாண்டியை இதயத்திலும் மார்புக் கூட்டிலும் குத்திக் கொன்று உடையப்பன் மனைவியின் சிதையில் ஊன்றி விடுகிறான். உடனே, ஓட்டம் எடுக்கிறான் வேங்கையன். அவனைத் துரத்தி மூக்கன் மொட்டைக்கிணற்றில் மோத வைத்துக் கொன்று உள்ளே இறக்கினான். இப்பொழுது இக்கொலை ஆவியின் கணக்கில் சேர்ந்து கொண்டது. பின்பு,

> “சுடலைநோக்கி வந்தான். சங்கிலியின் உடல் ஒரு எரிமேடையிலும், கட்டப் பாண்டியின் உடல் ஒரு எரிமேடை யிலுமாக எரிந்து கொண்டிருந்தது. தந்தையின் உடலைப் பார்த்துக் கண்ணீர் உகுத்து விட்டு மொட்டைக்கிணறு நோக்கி நடந்தான்”(ப.200).

கிணற்றருகே வந்ததும் கிணற்றுக்குப் பக்கத்தில் இருந்த புதருக்குள் தேடி ஒரு பையை எடுத்தான். அதிலிருந்து கொஞ்சம் துண்டுக் காகிதங்களை எடுத்து அழியாத மையால் எழுதினான்,

> “‘வன்முறை மாத்திரமல்ல அடக்குமுறையும்கூட இருபக்கமும் கூரான ஆயுதமே’ என எழுதி கிணற்றைச் சுற்றித் தூவிவிட்டுச் சில அடிகள் நடந்திருப்பான். ஒரு கஞ்சன் வீட்டுக் கல்யாணத்தில் தெளிக்கப்படும் பன்னீர் போல வானம் ஒன்றிரண்டு லேசான தூறல் போட்டது. வேகமாக ஓடி வந்து எழுதிய காகிதத்தில் ஒன்றை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். பின்பு மனதுக்குள் சிரித்துக்கொண்டான். இது வெறும் மையினால் ஆன எழுத்துக்கள் அல்ல. இது காலத்தின் கல்வெட்டு. எந்த மழை வெள்ளத்தாலும், மானிட வெள்ளத்தாலும் அழிக்க முடியாது”(ப.201).

வன்முறை மாத்திரமல்ல அடக்குமுறையும் கூட இருபக்கமும் கூரான ஆயுதமே என்பதாகக் கதையை நிறைவு செய்கிறார் படைப்பாசிரியர்.

நிறைவாக,

இப்புதினத்தை வாசிக்கும் பொழுது அடக்குவோர்க்கு எதிரான அறைகூவலை விடுப்பது போன்று உருவாக்கியுள்ளார் படைப்பாசிரியர். தீதும் நன்றும் பிறர்தர வாரா என்றும், வன்முறை மாத்திரமல்ல அடக்குமுறையும் கூட இருபக்கமும் கூரான ஆயுதமே என்றும் குறிப்பிடுகிறார். மேலும், அடங்கிக் கிடந்தோரின் ஆன்மா நம்முடன் பேசுவதனைப் போன்ற உணர்வினையும் பெறமுடிகிறது. நீங்களும் பயன்பெற வேண்டுகின்றேன்.

மதிப்பிடப்பெற்றது

பள்ளு இலக்கிய வாசிப்பின் முக்கியத்துவம் : நா.வானமாமலையின் 'பள்ளுப்பாட்டு ஆராய்ச்சி' நூலை முன்வைத்துச் சில சிந்தனைகள்

Paḷḷu ilakkiya vācippiṉ mukkiyattuvam:

Nā.Vāṉamāmalaiyiṉ 'paḷḷuppāṭṭu ārāycci' nūlai muṉvaittuc cila cintaṉaikaḷ

முனைவர் **த.சத்தியராஜ்**/ Dr.T.Sathiyaraj[38]

Abstract: Na.Vanamamalay's Palluppattu Collective articles of research book is edited by Maharasan as the concept of ethnological aspects. The Palluppattu literature have seen as Tamil socio aspects, the definition of Pallar's human life style. But the literature can be easily understood the human life style of farmers (Uzhukudi). Let us reading with perspective, gives a lot of understanding about the Pallar's life style and Tamil Socio aspects.

Date of submission: 2019-03-20
Date of acceptance: 2019-04-27
Date of Publication: 2019-05-02
Corresponding author's
Name: முனைவர் **த.சத்தியராஜ்**
Email: sathiyarajt@skacas.ac.in

Keywords: Na.Vanamamalai, Palluppaattu aaraichi, Tamil Literature, Ethnology, பள்ளுப்பாட்டு ஆராய்ச்சி, நா.வானமாமலை, சிற்றிலக்கிய வகை, உழவர், களமர், கம்பளர், காராளர், கடைசியர், கடைஞர், வினைஞர், மேழியர், மள்ளர், வேளாளர்.

நூற்பெயர்: நா.வானமாமலையின் பள்ளுப் பாட்டு ஆராய்ச்சி, நூல்வகை: தொகுப்புநூல், தொகுப்பாசிரியர்: மகாராசன், பதிப்பாண்டு: டிசம்பர் 2017, வெளியீடு: ஆதி பதிப்பகம், 15, மாரியம்மன் கோயில் தெரு, பவித்திரம், திருவண்ணாமலை - 606 806, விலை:60.

மகாராசன் தொகுத்திருக்கும் நூல் நா.வானமா மலையின் பள்ளுப்பாட்டு ஆராய்ச்சி. இந்நூல் இனவரைவியலை அடிப்படையாகக் கொண்டது. பள்ளுப்பாட்டு என்றால் பள்ளர் களின் வாழ்வியலைக் காட்டும் நூல் என்பதாகப் பொதுப் புத்தியில் உறைந்துள்ளது. அதனால் என்னவோ அவ்விலக்கிய வாசிப்பை இந்தத் தமிழ்ச் சமூகம் குறைத்துக் கொண்டுள்ளமை ஒருவகைக் காரணம். பிறிதொரு வகைக் காரணங்களாவன: பாலியலை வெளிப்படையாகப் பேசுவது (இரா.அரிகரசுதன், 15.3.19, முற்பகல் 12.30-1.00), அடித்தட்டு மக்களின் வாழ்வியலைப் பேசுவது (இரா.அரிகரசுதன், 15.3.19, முற்பகல் 12.30-1.00) போன்றன. இங்கு அடித்தட்டு மக்கள் யார்? எனும் வினாவை எழுப்புவோமேயானால் அதற்கு விடை கூறுவது இயல்பானதன்று. ஏனெனில் காலந்தோறும் ஒவ்வோர் இனமும் மாறிமாறி வாழ்வாதாரத்தில் உயர்ந்தும் தாழ்ந்தும் தத்தமது வாழ்க்கைமுறையை அமைத்துக் கொண்டுள்ளன. இதனைப் பின்வரும் வரலாற்றுப் படிநிலை மூலம் உணரலாம்.

"இதுவரை நாம் ஆராய்ந்தவற்றுள், உலகத்தார்க்கு அச்சாணியாக விளங்கிய

---

[38] தமிழ் உதவிப்பேராசிரியர், ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641 042, 9600370671, sathiyarajt@skacas.ac.in

உழுகுடிகளில் ஒருசிலர் 'மள்ளர்' என்று அழைக்கப்பெற்றனர். அவர்களில் சிலர் சிறந்த போர்வீரர்களாகத் திகழ்ந்து, நாடாளும் வேந்தர்களுக்கு ஆதரவளித்தும், சிலரை எதிர்த்தும் போரிட்டிருக்கின்றனர். இம்மள்ளர் களிலேயே சிலர் குழுத்தலைவரானபோது 'மல்லர்' என்று அழைக்கப்பெற்றனர். இவர்கள் வாழ்ந்த ஊர், நகரம், மல்லன்மூதூர் என்றும் மல்லன் மாநகர் என்றும் பரவலாகப் பேசப் பட்டன.

சோழர் கல்வெட்டுக்களில் மல்லன் என்ற பெயர் கொண்ட பலர் பேசப்படுகின்றனர். அவர்களில் சிலர் உயர் அரசு அதிகாரி களாகவும் விளங்கியுள்ளனர். இதற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. திருவாஞ்சியம் உடையான் ஆட்கொண்டான் மல்லகோ (எஸ்.ஐ.ஐ.5, குலோத்துங்கன் 3, கி.பி. 1197), மல்லன் அப்பராயதன் (அப்பராஜிதன்) (எஸ்.ஐ.ஐ.7, ராஜராஜன் கி.பி.1 1003). நெய்தல் நிலத்தலைவன் பெயர்களில் ஒன்றாக 'மெல்லன்' என்னும் சொல், சேந்தன் திவாகரம், பிங்கல நிகண்டு, சூடாமணி நிகண்டு, கயாதரம் ஆகியவற்றில் காணப்படுகிறது. இம்மெல்லன் என்னும் சொல் மல்லனாக இருக்கலாம் என்று தெரிகிறது.

ஆனால் 'மள்ளர்' என்ற இனமோ, அல்லது ஒருவரின் பெயரோ காணமுடியவில்லை. மாறாகப் 'பள்ளர்' என்னும் சொல் சோழர், பாண்டியர், விசயநகர அரசர், நாயக்கர்காலக் கல்வெட்டுக்களில் காண முடிகிறது. மேலும் செப்புப் பட்டயத்திலும், கையெழுத்துப் பிரதியிலும் 'பள்ளர்' பெயர்தான் குறிக்கப் பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் ஆய்ந்து பார்க்கையில் தொடக்கத்தில் தாமே உழுதுண்ட இவ்வினம், சங்க காலத்திலும், சோழர் காலத்திலும் ஓரளவுக்கு உயர்நிலை அடைந்து, பின்னர் பிற்காலப் பாண்டியர் காலத்தில் மறுபடியும் உழுதுண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கின்றனர்.

அதன்பின்னர் 'பள்ளர்' இனம் தம் பழையை உரிமைகளைப் பெற உரிமைப்போராட்டம் நடத்தி வெற்றியும் ஈட்டியிருக்கின்றது. சில நேரங்களில் நாடாளும் வேந்தனுக்குத் தொல்லையும் தந்திருக்கின்றனர். அந்த அளவுக்கு வலிமை பெற்றவர்களாகவும் விளங்கியிருக்கின்றனர்.

இத்தகைய மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணம் இவர்கள் போர் வீரர்களாக மாறியபோது, உழுகுடியாக இருந்தவர்கள் மருதநிலப் பகுதியில் 'பறையர்' என்று அழைக்கப் பெற்றிருக்கின்றனர். அவர்கள் சங்கம் மருவிய காலத்தில் அதாவது பல்லவர் காலத்தில் போர் வீரர்களாகப் போர்புரிந்து மன்னனுக்காகப் போரில் உயிர் நீத்திருக்கிறார்கள். சோழர் காலத்தில் சிலர் பாடிகாவல் உரிமையைப் பெற்றிருந்திருக் கின்றனர். பிறகு மீண்டும் சில ஆதிக்கச் சக்திகளால் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்ட நிலை. இந்த ஆதிக்கச் சக்திகளையெதிர்த்து இவர்களும் குரல் கொடுத்திருக்கிறார்கள் என்பது கல்வெட்டுச் சான்றாலும், நந்தனார் சரிதை மூலமும், திருப்பாணாழ்வார் சரிதை மூலமும் நமக்குத் தெரியவருகிறது. நாளா வட்டத்தில் பறையர் சோழநாடு, தொண்டை நாட்டுப் பகுதிகளிலும், தேவேந்திர மக்கள் பாண்டி நாட்டிலும், சேரநாட்டிலும் பெரு வாரியாக வாழ்ந்திருக்கின்றனர். பின்னர் தேவேந்திர இனத்தார் விழிப்புணர்வு பெற்று கி.பி. 18 ஆம் நூற்றாண்டு முதலே தங்கள் உரிமைகளுக்குப் போராடி வெற்றியும் பெற்றி ருக்கின்றனர்'' (காசிநாதன் நடன., 2006, பக். 124-125).

இலக்கணப் பனுவல்களில் சிலவே பள்ளு இலக்கியத்தின் சிறப்பை எடுத்தியம்பியுள்ளன. அவற்றுள் தொல்காப்பியம், பன்னிரு பாட்டியல், பிரபந்த தீபிகை ஆகியன குறிப்பிடத்தக்கன. அவ்விலக்கணப் பனு வல்கள் ‘உழத்திப் பாட்டு’ எனும் தன்மையிலே குறித்துள்ளன. தொல்காப்பியம், பன்னிரு பாட்டியல் ஆகிய இரண்டு பனுவல்களும் முன்வைக்கும் கருத்துக்கள் வருமாறு:

“…

ஏரோர் களவழி அன்றி, களவழித்

தேரோர் தோற்றிய வென்றியும்
..."

(தொல்.பொருள்.75)

"புரவலற் கூறி யவன்வா ழியாவன்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
னெனவரு மீரைந் துழத்திப் பாட்டே"

(பன்.பாட்டி.335)

அவ்விரு பனுவல்களும் சுருக்கமாக விளக்கிச் செல்ல, பிரபந்த தீபிகை சாதிய அடிப் படையில் பதிவுசெய்கின்றது. அது வருமாறு

"கடவுளர் வணக்கமும் பள்ளனிரு பள்ளியர்கள்
வரவுமவர் கள்பெருமையைக்
கருதியவர் முறைவர லாறுநாட் டுளவளங்
கரியகுயில் கூவல்வேட்டல்
கார்மாரி வேட்டறெய் வத்துதி மழைக்குறிகள்
கழறனீ ராற்றின்வரவு

காண்டலு மதன்சிறப் புடனதற் கிடையிடைய
கப்பொருட் டுறைகள்கூறி
யிடமுறும் பண்ணையின் றலைவன்வர வும்பள்ளி
இருவர் முறை யீடுகண்டே
இளையபள் ளியைவெகுண் டோதலும் பள்ளனு
மில்விட்டு வெளிவருதலு .
மேர்நிலம் விரைவிவ லவனது வுரைத்திடல்பி
னிடையரை வருத்தலவர்கள்
இசைவிளம் பன்மூத்த பள்ளிமுறை யிடல்பள்ள
சேர்கிடையி னின்றுவரல்போல்
திடமுறு வருபள்ள னைத்தொழுவின் மாட்ட
றிகைத்துப் புலம்பலன்பு
சேர்பள்ளனுக் கடிசிலை கொடுமூத்த பள்ளிவரல்
தீமையவ ளோடுரைத்தல்
தீர்க்கும்வகை வேண்டலை மறத்தல்பின் சூளுறல்செய்
தல்பண் ணைத்தலைவனைச்
சீருடன் வழுத்திவிடு தல்விரை மாடுசஞ்
சீவமு மெடுத்து முதலின்
வடமற் றெருதுபாய வேகண்ட பள்ளியர்
மனத்துயர் தவித்தெழுந்து
வருபண்ணை யானறிதல் நாறுதல்
மணிகொய் தடித்தளக்கல்
வருமூத்த பள்ளிமுறை யீடுபள் ளியரேசல்
மன்னுசிந் தடி விருத்தம்
வகைவிரவி நாயகன் பெருமையைக் கூறியே
வருமுழத் திப்பாட்டிதே". (பிரபந்.29)

அடுத்து இலக்கிய வரலாற்று நூல்களில் பள்ளு இலக்கியத்தைப் பற்றிய எண்ணப்போக்கை அறியலாம்.

"குறம், குறவஞ்சி, பள்ளு ஆகியன இசை தழுவிய, நாடக வடிவுள்ள மக்கள் இலக்கி யமாகிய நாட்டுப்புற இலக்கிய அடிப் படையுள்ள வகைமைகளாகும்" (தமிழண்ணல், 2000)

"பன்னிருபாட்டியலில் கூறப்படும் உழத்திப் பாட்டு, பிற்காலத்தில் பள்ளு இலக்கியமாக வளர்ந்தது. இவ்விலக்கியத்தைப் பள்ளேசல், பள்ளு நாடகம் எனவும் அழைப்பர். இது தொல்காப்பியர் குறிப்பிடும் புலவன் என்ற வனப்பைச் சேர்ந்தது. பள்ளர்களின் வாழ்க்கை நிலை பற்றி எடுத்துமொழிதலால் இவ்வகை இலக்கியம் பள்ளு எனப்பட்டது. குறமகளைத் தலைமையாகக் கொண்ட நூல் குறவஞ்சி என ஆனாற்போலப் பள்ளர்களாகிய பள்ளன், இளையபள்ளி, மூத்த பள்ளி ஆகியோர் செயல்களையே பெரிதும் குறிப்பிடும் நூல் பள்ளு எனப்பட்டது" (வேங்கடராமன் கா.கோ., 2013, ப. 257).

"உழத்திப்பாட்டு; உழத்தி ஒருத்தி பிறிதோர் உழத்தியோ, உழவனோ விளக்கிக் கூற உழவுத்தொழில் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டதாகப் பாடப்படுவது. உழத்திப் பாட்டும் பள்ளு இலக்கியமும் வேறுவேறு இலக்கியங்கள் *(பாக்யமேரி, 2011, ப. 389)*.

மேற்குறித்த கருத்துக்களின் அடிப்படையில் நோக்குகையில் சாதிய அடிப்படையிலான பார்வை தமிழ்ச் சமூகத்தை இன்னும் பின்னோக்கியே இழுத்துச் செல்லும். எனவே, அவ்விலக்கியங்களை அவ்வாறு வாசிப்பதைக் காட்டிலும் உழுகுடிகளின் வாழ்விலக்கிய மனநிலையில் வாசிப்பது சாலச்சிறந்தது. அதனை நா.வானமாமலையின் பள்ளுப்பாட்டு ஆராய்ச்சி முன்வைத்துள்ளது எனலாம். எனவே இக்கட்டுரை அதன் முக்கியத் துவத்தை எடுத்துரைக்கிறது.

பள்ளுப்பாட்டு இலக்கியங்கள் கூறும் வாழ்வியலை ஒரு குறிப்பிட்ட சமூக வாழ்வியலாக இனம் காண்பதைக் காட்டிலும் உழுகுடிகளின் (மருதநில மக்களின்) வாழ்வியலாகப் பார்ப்பதே சிறந்தது. இங்கு பள்ளரின வாழ்வியலைப் பேசியிருக்கும் ஒரிசாபாலுவின் வலைக்காட்சிப் பதிவு (https://www.youtube.com/watch?v=T7T0aRdVGt4) (Media, 2017) உணரத்தக்கது.

“உழவுத்தொழில் மரபினரை உழவர், களமர், கம்பளர், காராளர், கடைசியர், கடைஞர், வினைஞர், மேழியர், மள்ளர், வேளாளர் எனப் பல பெயர்களில் குறிக்கிறது தமிழ் இலக்கிய மரபு.

அஞ்சுவண்ணம், அணியர், அளவன், அதிகாரி, ஆற்றுக்காலாடி, இந்திர சாதி, உழவர், ஊரன், ஒண்டிப்புலி, ஒளியர், கடம்பர், கணக்கன், கடையர், கடைசியர், களமர். கருங்களமர், காலாடி, குடும்பர், கூத்தாடி, கூத்தர், தொண்டைமான், தேவேந்திரர், தேவேந்திர குலத்தார், தேவேந்திரகுல வேளாளர், நாட்டார், நீராணியம் (மடையர்), நீர்க்கட்டி, படையாட்சி, **பண்ணாடி**, பணிக்கன், பலகான், பழையர், **பள்ளர், பள்ளி, பள்ளியர், பாண்டியர்,** பாவாணர், பூசி, மகிழ்நன், மண்ணாடி, மல்லர், மழவர், மள்ளர், மன்றாடி, முதலி, மூப்பன், செட்டி மூப்பன், நாட்டு மூப்பன், புள்ளி மூப்பன், வலவன், வாதிரியார், வாய்க்காரர், வாரியன், வெண்களமர், வெள்ளாளர், வேந்தர், வேள் போன்ற குழுக்களால் அடையாளப்பட்ட அல்லது அடையாளப் படுகிற சமூகப் பிரிவினர் உழவுத்தொழில் மரபைச் சார்ந்தவர்கள் எனப் பதிகிறது வழக்காற்று மரபு” (மகாராசன் (தொகுப்.), 2017, ப. 13). இக்கருத்து ஊன்றிக் கவனிக்கத்தக்கது. ஏனெனில் இதில் சுட்டிக் காட்டப்பெற்றிருக்கும் இனக்குழுக்களின் பல பெயர்கள் இன்று வேறொரு இனத்தின் பெயராகக் கருதப்படுவதேயாம். சான்றாக, பள்ளர், பள்ளி, பாண்டியர், பண்ணாடி ஆகிய இனப்பெயர்களுக்கு இனவரைவியல் நூல்களுள் தென்னிந்திய இன ஒப்புமையியல் (பரமசிவம், 2004), தென்னிந்திய குலங்களும் குடிகளும் (கந்தையா பிள்ளை, 2016), என்றாயிரு நூல்கள் அளித்திருக்கும் விளக்கங்களை அறியமுற்படலாம். அரு.பரமசிவம் குறிப்பிட்டிருக்கும் இனக்குழுவின் உட்பிரிவுப் பெயர்கள், வாழ்விடம், குழுத்தன்மை ஆகியன இங்கு கவனிக்கத்தக்கன. அவை வருமாறு:

“பள்ளரில் அரசு, ஆற்றுக் காலாட்டியர், குடும்பன், கொங்கு, களம், சேரன், சோழியன், தேவேந்திரகுலம், தொண்டைமான், நீர்க்கட்டி, பட்டக்காரர், பணிக்கன், பண்ணாடி, பாண்டியன், புரந்தரன், மல்லாடி, மல்லாண்டை, மும்முடி, மூப்பனார் எனவும்” (பரமசிவம், 2004, ப. 39).

“பள்ளி (அ) வன்னியரில் குலசேகரர், இரணியவர்மன், ருத்ர வன்னியர், கய்வன்னியர், வீரம்பு வன்னியர், நயினார், இந்திரன் வன்னியர், சூரிய வன்னியர், சந்திர வன்னியர், அக்னி, அகமுடையார், அரசு, சத்திரியர், நாகபடம், நத்தமான், ஓலை, பந்தமுட்டு, கள்ளங்கி, கள்ளவேலி, அஞ்சுநாள், பன்னிரண்டு நாள், வனப்பள்ளி, மீன்பள்ளி, பாணப்பள்ளி, கோவிலார், வலக்காரர், வடமரக்காடு, எடகுலம், ஜம்பு மகரிஷி கோத்திரம் எனவும்” (பரமசிவம், 2004, ப. 58).

“தேவேந்திரகுல வேளாளரின் ஆதி இடங்கள்:- தமிழகத்தின் கொங்குப் பகுதியிலும், ஊத்துக்குளி, சின்னதாராபுரம், தாடிக் கொம்பு, திண்டுக்கல், வத்தலக்குண்டு, எடைய கோட்டை, ஆத்தூர், பள்ளப்பட்டி, அரவக் குறிச்சி, அம்மைய நாயக்கனூர், மூங்கிணை, பெரியகுளம், பூதணத்தம், கன்னவாடி, தஞ்சை, மதுரை, கீழைப் பருத்தியூர், மேலைப் பருத்தியூர், ராமநாதபுரம், நெல்லை, கண்டம நாயக்கனூர் ஆகிய ஊர்களிலும் தேவேந்திரகுல வேளாளரின் உட்பிரிவுகளில் ஒன்றான குடும்பன் எனும் ஒரு புறமணக் குழுவும், தஞ்சை களப்பநாயக்கனூரில் கரலாடி எனும் ஒரு புறமணக் குழுவும், ஆனைமலை, கோதைவாடி, கோயமுத்தூர், அவிநாசி, சூலூர், உக்கிரங்கொடிவேலி, குறுப்பனாடு, அமுக்கயம், ஈரோடு ஆகிய ஊர்களில் பன்னாடி எனும் புறமணக் குழுவும், கனியூர், கருவூர், வாங்கல், புகழியூர், கட்டளை, குளித்தலை,

தொட்டியம், வெள்ளூர், சோமயநல்லூர், திருச்சி, துறையூர் ஆகிய ஊர்களில் மூப்பன் எனும் புறமணக் குழுவும், கொத்தப்பள்ளி, சேலம், ராசிபுரம், பரமத்தி, வெங்கரை, பாண்டமங் கலம் ஆகிய ஊர்களில் பலகான் எனும் புறமணக் குழுவும் தஞ்சாவூரில் பணிக்கன் எனும் புறமணக் குழுவும் உள்ளன. இவரது தேவேந்திர வம்சமும், காலாடி, குடும்பன், பன்னாடி, மூப்பன், பலகான், பணிக்கன் எனும் புறமணக் குலங்களும் தந்தைவழி மூலங் களைக் காட்டுவனவாக உள்ளன.'' (பரமசிவம், 2004, பக். 108-110).

"கோவை மாவட்டத்தில் வசிக்கும் வெட்டக்காடு இருளப்பள்ளர் என்ற தமிழ்ப் பழங்குடி மக்களிடம் வழங்கும் கதைப்பாடல், ஒரே தகப்பனின் மூத்த மற்றும் இளைய மனைவிகளுக்குப் பிறந்த ஆண்-பெண் இருவரிடையே ஏற்பட்ட பாலுறவை விளக்கு கிறது'' (பரமசிவம், 2004, ப. 31).

"அஞ்ஞா, அணிய, அம்மா, அய்யா, அரச, ஆற்றுக் காலாட்டியார், கடைசியர், குடும்பன், கொங்கு, களம், சேர, சோழ, பாண்டிய, தேவேந்திர தொண்டைமான், நீர்க்கட்டி, பணிக்கன், பண்ணாடி, புரந்தரன், மல்லாடி, மல்லாண்டை, மும்முடி, மூப்பனார்'' (பரமசிவம், 2004, ப. 145).

அடுத்து, கந்தையா பிள்ளை விளக்கியிருக்கும் கருத்துக்கள் வருமாறு,

"பள்ளன்: இவர்கள் உழவுத்தொழில் புரியும் வேலையாட்கள். இவர்கள் முற்காலத்தில் வெள்ளாளருக்கு அடிமைகளாக விருந்தார்கள். மதுரைப் பள்ளரின் அதிகாரி குடும்பன் எனப்படுவான். கோயமுத்தூரில் பள்ளரின் அதிகாரி பட்டக்காரன் எனப்படுவான். அவனுக்குத் துணையாகவுள்ளவன் ஓடும் பிள்ளை எனப்படுவான். திருச்சிராப்பள்ளியில் பள்ளரின் அதிகாரி நாட்டு மூப்பன் எனப்படுவான். இவர்களுக்கு வண்ணார் அம்பட்டர்களுண்டு.

பள்ளி: தெலுங்கு நாட்டில் மீன் பிடிப்போர், உழுதொழில் செய்வோர் எனப் பள்ளிகளில் இரு பிரிவுகள் உண்டு. மீன்பிடிப்போர் மீன் பள்ளிகள் எனப்படுவர். பள்ளிகள் சில இடங்களில் தம்மை இரெட்டிகள் எனக் கூறுவர். மீன் பிடிப்போர் அக்கா, தேவராலு என்னும் தெய்வங்களை வழிபடுவர்.

பள்ளி அல்லது வன்னியன்: பள்ளிகள் தாம் வன்னிய குல அரச குலத்தினர் எனக் கூறுவர். திருவிதாங்கூர் அரசருள் ஒருவராகிய குலசேகர ஆழ்வார் தங்கள் சாதியரசன் எனக் கூறுவர். சென்னையில் திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோயிற் பட்டயத்தின்படி அது பள்ளரால் கட்டப்பட்டது. அங்கு பள்ளிகள் குலசேகர ஆழ்வாருக்குக் குருபூசை நடத்துவார்கள். மைலாப்பூர்ச் சிவன் கோயிலில் பள்ளிகள் கற்பூரம் கொளுத்திக் காட்டும் உரிமை பெற்றிருந்தார்கள். அவர்கள் கோயில் தமக்கு உரியதாக இருந்ததென்றும் பிற்காலத்தில் தாம் சிறிது சிறிதாக உரிமையை இழந்து விட்டார்கள் என்றும் கூறுகின்றனர். கற்பூரம் கொளுத்தும் உரிமையைப்பற்றி சமீபத்தில் விவாதம் நடந்து விசாரணை மேற்கோர்ட்டுக்கு வந்தது. பள்ளிகள் சார்பாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயிற் கோபுரமொன்று பள்ளி கோபுரமெனப்படும். அங்குள்ள பள்ளிகள் அது தமக்குரியதென்று கூறி அதனை ஆண்டுதோறும் பழுது பார்ப்பர். சிதம்பர ஆலயத்தைக் கட்டியவன் இரணியவன்மன் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு). அவனுடைய வழித்தோன்றல்கள் தாம் என்று சிதம்பரத்துக்குக் கிழக்கே நான்கு மைல் தூரத்திலுள்ள ஒரு பள்ளிக் குடும்பத்தினர் உரிமை கொண்டாடுவர். பள்ளிப் பொலிகரிற் சிலர் 'அக்கினி குதிரையேறிய ராயராவுத்த மிண்ட நயினார்' (இராசராவுத்தரை வென்று அக்கினிக் குதிரை ஏறிய) என்று பெயர் பெறுவர். தென்னார்க்காட்டில் குமாலம் என்னும் இடத்தில் பள்ளிக்குச் சிறீனிவாச ஆலயமுண்டு. அங்குப் பள்ளிகள் கோயிலைச் சுற்றி வாழ்கின்றனர். இவர்கள் கோயிற் பட்டரைப் போல உடுப்பர். பள்ளிப் பெண்களைப் பட்டர்மார் மணப்பர். ஆனால்

தமது பெண்களைப் பள்ளிக்குக் கொடுக்க மாட்டார்கள். சேலம் பகுதியில் ஓலைப் பள்ளி, நாகவடம்பள்ளி என இரு பிரிவினருண்டு. இவை அவர்கள் அணியும் ஓலை; நாகவடம் முதலியன பற்றி வந்த பெயர்கள். பள்ளிகளும் பேரில் செட்டிகளும் மன்னார் சாமியை வணங்குவர். கிராமத்தெய்வங்கள் ஏழுகும்பம் அல்லது கரகங்களாற் குறிக்கப்படும். இவர்களுள் பிச்சைக்காரர் நோக்கான் எனப்படுவர். இவர்களின் தலைமைக்காரன் பெரிய தனக்காரன் அல்லது நாட்டாண்மைக் காரனெனப்படுவான். விதவைகளின் மறுமணம் நடுவீட்டுத்தாலி எனப்படும். தலைப்பூப்பு அடைந்த பெண் முழுகியபின் அவளைப் பலகைமேல் இருத்தி அவள் முன்னால் பிட்டு வைத்து ஆரத்தி காட்டப்படும்'' (கந்தையா பிள்ளை, 2016, பக். 84-86).

''பாண்டியன்: அம்பட்டன், கம்மாளன், ஒச்சன், பள்ளன், வண்ணான், வேளாளன் முதலியவர் களிடையே இது பெயராக வழங்கும். மலையாளத்தில் ஈழவர் பாண்டி எனப்படுவர்'' (கந்தையா பிள்ளை, 2016, ப. 89)

''மண்ணாடி: பழநி மலையில் வாழும் குறவருக்கு இப்பெயர் வழங்கும்'' (கந்தையா பிள்ளை, 2016, ப. 93)

மேற்கூறிய அவ்விருவரின் பதிவுகள் மூலம் பள்ளர் இனத்தோடு தொடர்புடைய பெயர்கள் பிறவினத்தோடும் தொடர்புபடுத்தப் பெற்றுள்ளமையை அறியமுடிகின்றன. மேலும் ''வாய்மொழி மரபிலும், எழுத்து மரபிலும், வரலாற்றுத் தரவுகளிலும் உழவுத் தொழில் மரபினரைக் குறித்த விவரிப்புகள் நிரம்பக் கிடைக்கின்றன. எனினும், இவ்வுழவுக் குடியினர் பள்ளர் எனும் பொதுவழக்குச் சொல்லாடலாலும், மள்ளர் எனும் இலக்கிய வழக்குச் சொல்லாடலாலும், தேவேந்திரகுல வேளாளர் எனும் அரசியல் சொல்லாடலாலும் பெருவழக்காய்க் குறிக்கப்படுகின்றனர்'' (மகாராசன் (தொகுப்.), 2017, ப. 13) எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு இனக்குழுக்களின் தனித் தன்மையைப் பார்ப்பதைக் காட்டிலும் அவ்வினக் குழுக்களுக்கிடையில் ஊடாடியிருக்கும் தந்தை, தாய்வழி எச்சங்களின் நீட்சியைக் கூர்ந்து கவனிக்க வேண்டியதாயுள்ளது. அந்த இனக்குழு முந்தியதா? இந்த இனக்குழு முந்தியதா? எனும் விடை நோக்கப் பயண முறை கோழி முந்தியதா? முட்டை முந்தியதா? எனும் நோக்குமுறைக்கு ஒப்பானது. இங்கு அரு.பரமசிவம் தந்திருக்கும் சாதிய வழங்குமுறையின் படிநிலைகளை உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

''தொல்காப்பியர் காலத்தில் மனித இனத்திற்குச் சாதி என வழங்காத நிலை இருந்துள்ளது; பறவைத் திரட்சியையே 'நீர் வாழ் சாதி' எனத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

அஃறிணைத் திரளுக்குரியதாகக் கடுப்புடைப் பறவைச் சாதியைப் பெரும்பாணாற்றுப்படை சுட்டி நிற்கிறது.

மணிவாசகர்தான் தனது திருவாசகத்தில் 'சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தவிக்கும் ஆதமிலி நாயேன்' எனச் சாதியை மக்களினப் பிரிவிற்கு இட்டு வழங்குகிறார்.

தொடக்க காலச் சமூகங்களில் புறமணமே (குலத்தில் நிகழும் மணம்) பரவலாக நிலவியது; தற்போதும் எல்லாத் திராவிட இனங்களிலும் வீர்யத்துடன் நிலவி வருகிறது; இப்புறமணமே திராவிட இன மக்களைப் பொறுத்தமட்டில் ஒரு திட்டவட்டமான தடையாக உள்ளது.

இந்நூலில் மனித இன ஆதி சமுதாயப் பல்வேறு குடும்ப முறைகளும், வேதகால அநாகரிக ஆரியர் வாழ்நிலையும், பல்வேறு யுகங்களில் நிகழ்ந்த பாரதத்தின் பல்வேறு மணமுறைகளும், ஆரியரல்லாதாரின் கணஸ் தாபனங்களும், தமிழகத்தில் நிகழ்ந்த பல்வேறு வரன்முறையற்ற பாலுறவுச் சான்றுகளும், ஏடறியா வரலாற்றிற்கு முந்தைய திராவிட இனத் தாய்வழிக் கணங்களின் தடயங்களும், அவற்றில் நிகழ்ந்த அக மணமுறையும் (குடியில் நிகழ்ந்த மணமும்), புறமண

முறையும் (குலத்தில் நிகழ்ந்த மணமும்), ஏடறியா மற்றும் ஏடறிந்த வரலாற்றிற்கு முந்தைய திராவிட இனத் தந்தைவழிக் கணங்களும், திராவிட இனங்களில் நிலவிய அரச வம்சாவழி, அமைச்சர் வம்சாவழி, அதிகாரிகள் வம்சாவழி, அரசர் தொடர்பு ஊழியங்கள் ஆகியனவற்றைக் குலமூலங் கள்வழி அறியப்படும் வெளிச்சங்களும், திசை தொடர்பானவைகளாக, ஊர்ப்பெயர் தொடர் பானவைகளாக, மலைகள் தொடர்பு உடையனவாக, எண்ணிக்கை அமைப் பினவாகத் திராவிட இனப் புறமணக் குழுக்கள் சுட்டப்படுதலும், கோத்திரப் பெயர்களில் திராவிட இனப் புறமணக் குழுக்கள் சுட்டப்படுதலும், பலி, இல்லம், பொதகு, கிளை, கொத்து, கிரியம், கணம், குட்டு, கட்டு, ஒத்து, முட்டா, திருவடி, சீர்பாதம், ஓலை, இன்டிபேரு, கூட்டம், தெவ, கூம்பு, காணி, தரவாடு, கங்கணம் எனும் பெயர்களில் உள்ள பல்வேறு திராவிட இனப் புறமணக் குழுக்களும், தொழில், தாலி, குலதெய்வம், விலங்கு, கோயில், சடங்குகள், வழி பெறப்படும் திராவிட இனப்புறமணக் குலங்களும், திராவிட இன உட்குலங்களும் இவற்றின் ஆதி இடங்களும் அகலமாகவும், ஆழமாகவும் சொல்லப்பட்டுள்ளன'' (*பரமசிவம்*, 2004, *பக்*. 161-162)

எனவே, இவ்வுழுகுடியினரின் வாழ்வியலைத் தாழ்த்தப்படுத்தப்பட்ட நிலையில் இச்சமூகம் எதிர்கொள்வதால் தமிழ்ச் சமூகம் பின்னடைவை எதிர்கொள்கிறது என்பது ஓரிசா பாலு போன்றோரின் கருத்தாக அமைகின் றமையை மேலே கண்ட வலைக்காட்சிப் பதிவு விளக்கிச் செல்வதும் உணரத்தக்கது. ஆதலால் நா.வானமாமலையின் சிந்தனைகளிலும் பள்ளு இலக்கிய வாசிப்பின் முக்கியத்துவம் வேரோடியிருப்பதை மகாராசன் தொகுத்தி ருக்கும் நூல் நன்கு அடையாளப்படுத்து கின்றது.

'பள்ளுப்பாட்டின் உள்ளடக்கம்' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில், பள்ளுப் பாட்டின் தேவையை உணர்த்திச் செல்கிறார் நா.வானமாமலை. அதனை, "... உலகத்தின் உயிர்நாடியான பள்ளரின் இன்ப, துன்பங் களையும் ஆசாபாசங்களையும் அவர்களது வாய்மொழியால் சித்திரிப்பது பள்ளுப்பாட்டு. உழைப்பால் உணவளிக்கும் பள்ளர், உழைப்பின் கடுமையைத் தெரியாமலி ருக்கவும், உழைப்பின் பெருமிதத்தால் பெருமை கொண்டும் பாடும் பாட்டுக்களின் இலக்கிய வடிவம் பள்ளுப்பாட்டு.

உழைப்பின் பெருமையைப் போற்றுவது தமிழ்க்கவிகள் மரபு.

> உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்

என்றார் வள்ளுவர்.

... தமிழ் மக்கள் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டிய கவிதை ஆதிக்கத்திலுள்ளோரைப் புகழ்ந்து, ஊதியம் பெறுவதற்குரிய குடுகுடுப்பாண்டிப் பாட்டாக மாறிற்று. ஆனால் உழைப்போரை உயர்ந்தோர் என்று கருதும் தமிழ்க் கவிமரபு சாகவில்லை. உழவரது நாவிலே இனிய தமிழ் பழகுகிறது என்பதைக் கண்ட கவிகளும் இருந்தார்கள். அவர் களுடைய வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் கவிதையில் சித்திரிக்கத்தக்கவை என்று கருதிய கவிஞர்களும் இருந்தார்கள். உழவர் களது வாழ்க்கை அனுபவங்களின் ஒன்றிப் போன கவிஞர்கள் தமிழ் மக்களின் சிறந்த பண்புகளை ஒலிக்கும் சேரி மக்களிடம் கண்டார்கள்'' (மகாராசன் (தொகுப்.), 2017, பக். 17-18).

தமிழ்க் கவிமரபில் உழவர் குடியின் முக்கியத்துவத்தைத் தொன்மைமிகு நூல் முதற்கொண்டு காணமுடிகின்றது என்ற கருத்தைப் 'பள்ளுப்பாட்டின் தோற்றம்' எனும் கட்டுரையில் பதிவுசெய்துள்ளார் நா.வானமா மலை.

> "புறநானூறு தொன்மையான நூல். புறநானூற்றுச் செய்யுள்கள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை. அவற்றுள் அரசனுடைய பெருமையைப் போற்றும் புலவர்கள்,

உலகத்தின் அச்சாணி போன்ற உழவர் பண்பையும் போற்றிப் பாடுகிறார்கள். அவர்களுக்கு அரசனால் இடையூறு நேர்ந்த காலத்தில் அவர்களுக்காக வாதாடுகிறார்கள். அவர்களுடைய தொழிலைப் பாதுகாப்பதே அரசனது தலையாய கடமையென்று போதிக் கிறார்கள். இதுவே சங்கப் புலவர்களின் கவிமரபு. தமிழ்க் கவிகளின் கவிமர பென்றும் சொல்லலாம். பிற்காலப் புலவர்களில் பலர் இம்மரபைப் பின்பற்றி னார்கள். உழவர் வாழ்க்கையை அன்போடு சித்திரித்தார்கள். அவர்கள் தொழிலை ஏற்றம் உடையராகப் பாராட்டி னார்கள். அவர்களுடைய பாட்டையும் கூத்தையும் தங்கள் கவிகளிலே இணைத்துக் கொண்டார்கள். உழவர் களுடைய வழக்குத் தமிழில் செய்யுள் செய்தார்கள். தமிழ்க் கதையல்லாத இராமாயணத்தில் கம்பன் கோசல நாட்டு உழவர்களை, தமிழ்நாட்டுப் பள்ளர்களை மனத்தில் கொண்டே வருணித்தான். உழவுத் தொழிலையும், உழவையும் போற்றி ஏரெழுபது பாடினான்'' (மகாராசன் (தொகுப்.), 2017, ப. 29).

தமிழர்களின் வாழ்வியலிலும் கலைகளிலும் பண்பாட்டிலும் ஆதிக்கம் செலுத்திய மேலாதிக்கச் செயல்பாடுகள், பள்ளு இலக்கியத்தையும் விட்டு வைக்கவில்லை.

உழவர் குடிகளின் மொழிகளில் தமிழ் வாழ்ந்து வருகின்றது. அதனை, மறைத்திடவே பள்ளுப்பாட்டின் மீதான எதிர்ப்புணர்வும் தூண்டப் பெற்றிருக்க வேண்டும். இதனை, ''முதலில் எதிர்த்துப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் உயிர் நிரம்பிய கலை வெள்ளத்துக்கு அவர்களால் அணைபோட முடியவில்லை. எதிர்த்துப் பார்த்து முடியாமல் பள்ளை ஒப்புக் கொண்டார்கள்'' (மகாராசன் (தொகுப்.), 2017, ப. 34) என நா.வானமாமலை கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. இதுபோன்ற எதிர்ப்புச் சிந்தனைகளை ஒருங்குதிரட்டி நோக்க வேண்டும்.

ஞா.தேவநேயப் பாவாணர் (தமிழர் வரலாறு: 2009, பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்: 2009, பழந்தமிழாட்சி: 2009, இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?: 2009), க.ப.அறவாணன் (தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு?: 2009) முதலான ஆய்வாளர்களும் தமிழர் அடிமையான வரலாற்றையும்/மறைக்கப்பட்ட வரலாற்றையும் விரிவாக எடுத்தியம்பி யுள்ளனர். அதன் நீட்சியாகவே பள்ளுப்பாட்டு இலக்கியத்தின் எதிர்ப்புணர்வையும் எதிர் கொள்ள வேண்டும். ஏனெனில் ''கவிதைச் சிறப்பையும் வருணனைச் சிறப்பையும் கதைப் பொருளையும் மழுங்கடிக்க முயன்றார்கள். இதற்கு உதாரணமே குருகூர்ப் பள்ளு... முக்கூடற் பள்ளிலே தங்கள் உழைப்பைக் குறித்து பெருமைப்பட்டுக் கொள்ளும் பள்ளனையும் பள்ளியரையும் நாம் காண் கிறோம். குருகூர்ப் பள்ளிலே பக்திப் பிரவாகத்தில் சூழ்ந்து பழைய புராணக் கதைகளைப் பாராயணம் செய்யும் அதிசயப் பள்ளனையும் பள்ளியரையும் காண்கிறோம்... தங்களைப் பற்றி பள்ளர், பள்ளியர் பெருமையாகப் பேசுகிறார்கள். முக்கூடற் பள்ளில் கவிக் கூற்றாகவே பள்ளரை உலகின் அச்சாணியென மதித்துப் புகழ்ந்திருக்கிறார்'' (மகாராசன் (தொகுப்.), 2017, பக். 35-41) என நா.வானமாமலை ஆய்ந்து கூறியமையைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

பள்ளு இலக்கியத்தை, தமிழர்களின் (அ) உழுகுடிகளின் (அ) உழைக்கும் வர்க்கத் தினரின் வாழ்வியலாகப் பார்க்கவேண்டும் எனும் புரிதலை, ''பள்ளு காதற் காவியமல்ல; கூட்டு வாழ்க்கை. கூட்டு உழைப்பு; இயற்கை யோடியைந்த உழவர் வாழ்க்கை. இவற்றைச் சித்திரிப்பதே பள்ளு'' (மகாராசன் (தொகுப்.), 2017, ப. 58) எனக் கூறும் தன்மையிலிருந்து உணரலாம்.

முடிப்பாக, தொகுப்பாசிரியர் மகாராசன் சுட்டிக்காட்டும் கருத்தோடு நிறைவு செய்யலாம். ''ஒவ்வொரு காலத்திய இலக்கியப் படைப்புகளும் அவ்வக் காலத்தியச் சமூக

ஆவணங்கள்தான். அவ்வகையில், பள்ளு இலக்கியங்களை உழவுக்குடிகளின் எதிர் இலக்கியங்களாகப் பாவிக்க வேண்டியதில்லை. ஏனெனில், பள்ளு இலக்கியங்கள்தான் உழவுக் குடிகளின் நில உரிமையைத் தவிர்த்து, நிலத்தோடு தொடர்புடைய ஏனைய மரபுகளைக் குறித்து விரிவான தரவுகளை முன்வைத்துள்ளன. ஆகவேதான், உழவுக் குடிகளைக் குறித்த சான்றாவணங்களாகப் பள்ளு இலக்கியங்கள் கருதப்படுகின்றன. பள்ளு இலக்கியங்கள் குறித்து வெளிவந்துள்ள ஆய்வுகள் பெரும்பாலும் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் வழிமொழிந்தும் அமைந் திருப்பவை. அவ்விலக்கியங்கள் குறித்து ஆழமான விரிவான மீளாய்வுகள் இன்னும் வெளிவரவில்லை. வஞ்சிக்கப்பட்ட உழவுக் குடிகளின் தொழில் மரபு, பண்பாடு, வரலாறு பற்றிய உரையாடல்களும், பள்ளு இலக்கியம் பற்றிய உரையாடல்களும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. இவை பற்றின மீளாய்வுகள் தொடர்வதற்கான திறப்புகளைத்தான் நா.வான மாமலை தமது பள்ளுப்பாட்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளின் வழியாகப் புலப்படுத்தி யுள்ளார்” (2017:14-15). எனவே, பிற இலக்கிய வாசிப்பைப் போன்றே பள்ளு இலக்கிய வாசிப்பும் அமைந்தால், தமிழாய்வுகளில் ஏற்றம் நிகழ வாய்ப்புண்டு என முடிக்கலாம்.

துணைநின்றவை

அறவாணன், க. (2009). *தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு?* சென்னை: தமிழ்மண் அறக்கட்டளை.

இளவரசு சோம. (2000). *தமிழ் இலக்கிய வரலாறு.* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

கந்தையா பிள்ளை, ந. (2016). *தென்னிந்திய கலங்களும் குடிகளும்.* சென்னை: சந்தியா பதிப்பகம்.

காசிநாதன் நடன. (2006). *தமிழகம் அரப்பன் நாகரிகத் தாயகம்.* சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.

கோபாலையர் தி.வே., &. அரணமுறுவல் ந. (2003). *தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் (1).* சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

கோபாலையர் தி.வே., &. அரணமுறுவல் ந. (2003). *தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம் (1).* சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

சத்தியராஜ் த. (2018, ஆகஸ்ட் 5). ‘ஒடியன்’வழி இருளர்கள் : அறிமுகம். *இனம்: பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ், 4*(16), 177-184.

செயராமன் ந.வீ. (2011). *சிற்றிலக்கியத் திறனாய்வு.* சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

தமிழண்ணல். (2000). *புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு.* மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

தேவநேயப் பாவாணர், ஞ. (2009). *இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்? தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?* சென்னை: தமிழ்மண் அறக்கட்டளை.

தேவநேயப் பாவாணர், ஞ. (2009). *தமிழர் வரலாறு (1&2).* சென்னை: தமிழ்மண் அறக்கட்டளை.

தேவநேயப் பாவாணர், ஞ. (2009). *பண்டைத்தமிழ நாகரிகமும்*

பண்பாடும். சென்னை: தமிழ்மண் அறக்கட்டளை.

தேவநேயப் பாவாணர், ஞ. (2009). *பழந்தமிழாட்சி.* சென்னை: தமிழ்மண் அறக்கட்டளை.

தொல்காப்பியம். (2019, 4 24). தமிழ் இணையக் கல்விக்கழகம்: http://www.tamilvu.org/ta/library-l0100-html-l0100ind-116715 -இல் இருந்து எடுக்கப்பட்டது

பரமசிவம், அ. (2004). *தென்னிந்திய இன ஒப்புமையியல்.* சென்னை: காவ்யா.

பாக்யமேரி. (2011). *வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.* சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்.

மகாராசன் (தொகுப்.). (2017). *நா.வானமாமலையின் பள்ளுப்பாட்டு ஆராய்ச்சி.* திருவண்ணாமலை: ஆதி பதிப்பகம்.

வரதராசன் மு. (2015). *தமிழ் இலக்கிய வரலாறு.* புதுதில்லி: சாகித்திய அகாதெமி.

வேங்கடராமன் கா.கோ. (2013). *தமிழ் இலக்கிய வரலாறு.* நாமக்கல்: கலையக வெளியீடு.

http://www.tamilvu.org/library/l5A10/html/l5A10p07.htm. (2019, 4 24). *தமிழ் இணையக் கல்விக்கழகம்.* தமிழ் இணையக் கல்விக்கழகம்: http://www.tamilvu.org/library/l5A10/html/l5A10p07.htm -இல் இருந்து எடுக்கப்பட்டது

Media, P. (2017, November 23). *Youtube Channel*. PT Media: (https://www.youtube.com/watch?v=T7T0aRdVGt4) -இல் இருந்து எடுக்கப்பட்டது